பக்கங்கள்: 24 விலை:20 ரூபா

காலைக்கதிர்
Kalaikkathir

குறைந்த செலவில் குடும்பமாக
கனடாவில் குடியேற...
WINSTAR VISA
CONSULTANTS
இல.106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
web: www.winstarjaffna.com
fb.winstar visa consultants
தொலைபேசி: 021 300 4641

விடியல் 02 வள்ளுவர் ஆண்டு 2048 கார்த்திகை 24 ஞாயிற்றுக்கிழமை 10.12.2017 கதிர் 35

# 99 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது பட்ஜெட்

## கூட்டமைப்பு, இ.தொ.க. ஆதரவு கூட்டு எதிரணி, ஜே.வி.பி. எதிர்ப்பு

கொழும்பு, டிசெ.10

2018ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டத்தின் மூன்றாம் வாசிப்பு 99 மேலதிக வாக்குகளால் நேற்று நிறைவேற்றப்பட்டது. இதற்கு ஆதரவாக 155 வாக்குகளும், எதிராக 56 வாக்குகளும் பதிவாகின.

அரசு மற்றும் அரசின் பங்காளிக் கட்சிகளுடன் பிரதான எதிர்க்கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஆதரவாக வாக்களித்தன. அதேவேளை, ஜே.வி.பியும் மஹிந்த அணியான கூட்டு எதிரணியும் எதிராக வாக்களித்தன.

நீலப் பசுமைப் பொருளாதாரத்தைக் கருப்பொருளாகக் கொண்ட 2018ஆம் நிதியாண்டுக்கான வரவு – செலவுத் திட்டம் நிதி மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் மங்கள சமரவீரவால் கடந்த மாதம் 9ஆம் திகதி நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து இரண்டாம் வாசிப்பு மீது கடந்த மாதம் 10,11,13, 14, 15,16ஆம் திகதிகளில் பக்கம் 03

# இணக்கத் தீர்வு

## ஒரே குடையின் கீழ் தமிழரசு - ரெலோ - புளொட் வீட்டுச் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானம்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 10

**உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஆசனப் பங்கீடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையே எழுந்த பிணக்குக்கு நேற்றுக் கொழும்பில் இணக்கத் தீர்வு எட்டப்பட்டது.**

**இதன்படி கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழரசு, ரெலோ, புளொட் ஆகியன எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டுச் சின்னத்தில் ஒரே குடையின் கீழ் போட்டியிடவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.** பக்கம் 22

## கறுப்பு நிறத்தில் மழை; பீதியடைந்தனர் மக்கள்

கொழும்பு,டிசெ. 10

மொனராகலை மாவட்டம் சியம்பலாண்டுவ பிரதேசத்தில் நேற்றுக் காலை கறுப்பு நிறத்தில் மழை பொழிந் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கறுப்பு நிறத்தில் மழை பொழிந்ததையடுத்து, பீதியடைந்த பிரதேச மக்கள் உடனடியாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்துக்கு அறிவித்துள்ளனர்.

இதனையடுத்து அங்கு சென்ற இடர் முகாமைத்துவ நிலைய அதிகாரிகள், மழை பக்கம் 22

# பங்கீட்டு உடன்பாடு இதுதான்

யாழ்ப்பாணம்,டிசெ.10

உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஆசனப் பங்கீடுதொடர்பில்கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளான தமிழரசு, ரெலோ, புளொட் ஆகியவற்றுக்கு இடையேநேற்றுக்கொழும்பில் உடன்பாடு எட்டப்பட்டது.

அந்த உடன்பாட்டின் விவரம் வருமாறு:-

**யாழ். மாவட்டம்**

யாழ்.மாவட்டத்தில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, காரைநகர்பிரதேச சபைமற்றும்வல்வெட்டித்துறை நகர சபை ஆகியவற்றுக்கான தலைமைப் பொறுப்பு ரெலோவிற்கு வழங்கப்படும்.

கரவெட்டி, கோப்பாய், நல்லூர்ப் பிரதேச சபை பக்கம் 22

## மலசல கூடக் குழியில் வெடிக்காத குண்டுகள்

மாவிட்டபுரம் பகுதியில் மீட்பு



யாழ்ப்பாணம், டிசெ.10

தெல்லிப்பழை பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட மாவிட்டபுரம் தெற்குப் பகுதியில் பாவனையற்ற மலசல கூடக் குழியில் இருந்து வெடிக்காத நிலையில் பல வெடிபொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

குறித்த மீட்பு நடவடிக்கை நேற்று இடம்பெற்றுள்ளது. பக்கம் 22

## வவுனியாவில் கஞ்சாவுடன் ஒருவர் கைது!

வவுனியா, டிசெ.10

வவுனியாநெளுக்குளம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இளைஞர்களுக்குக் கஞ்சா விற்பனை செய்துவந்தநபரைநெளுக்குளம் பொலிஸார் நேற்று மாலை கைது செய்தனர்.

நெளுக்குளம், குழுமாட்டுச்சந்தி, பக்கம் 22

## அரசியல் பிழைப்புக்காக கஜேந்திரகுமார் மக்களிடம் தவறான தகவல் பரப்புகிறார்

கடுமையாகச் சாடுகின்றார் ஆனந்தசங்கரி



யாழ்ப்பாணம்,டிசெ.10

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார்பொன்னம்பலம் தவறான தகவல்களைத் தமிழ் மக்களிடம் கூறி அரசியல் பிழைப்பு நடத்த வேண்டாம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ. ஆனந்தசங்கரி.

இது தொடர்பாக நேற்று அவர் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

பிற கட்சிகளை விமர்சனம் செய்யும்போது பக்கம் 22

## ஜே.ஆரின் வழி சென்று தேர்தலில் வெல்வோம்

பிரதமர் ரணில் நம்பிக்கை



கொழும்பு, டிசெ.10

முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தனவின் வழியில் சென்று உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றி பெறப் போவதாகப் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். பக்கம் 22

## ஊடகங்களை அரசியல்வாதிகள் வழிநடத்துவதை ஏற்கமுடியாது

சபையில் அனுரகுமார காட்டம்

கொழும்பு,டிசெ.10

சமூகத்தில் முரண்பாடுகள் தோற்றம் பெறுவதற்கு ஊடகங்களே பிரதான காரணமாகவுள்ளன. அரசியல்வாதிகள் ஊடகங்களை வழிநடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

சமூகத்தின் முரண்பாடு பக்கம் 22

## தமிழ் ஊடகவியலாளர்கள் 8 பேரை சுற்றிவளைத்து மிரட்டிய ராணுவம்

முல்லைத்தீவில் நடக்கும் சிங்கள மயமாக்கல் தொடர்பாகச் செய்தி சேகரிக்கச் சென்றவேளை

முல்லைத்தீவு,டிசெ.10

முல்லைத்தீவு, தண்ணீர் முறிப்பு சிங்கள மயமாக்கல் தொடர்பில் செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்கள் எட்டுப்பேர் இராணுவம், பொலிஸாரால் சுற்றிவளைக்கப்பட்டு அரை மணித்தியாலங்களுக்கு மேல் தடுத்து வைத்து விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர்.

சிங்கள மயமாக்கல் செய்தி தொடர்பில் ஊடகவியலாளர்களால் எடுக்கப்பட்ட புகைப்படங்கள்,வீடியோக்களை அழித்த பின்னர் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு பக்கம் 22



## முல்லைத்தீவு மீனவர் மூவரை காப்பாற்றினர் நாகை மீனவர்கள்

யாழ்ப்பாணம், டிசெ.10

முல்லைத்தீவு மீனவர்கள் மூன்று பேர் தமிழ்நாடு நாகை மாவட்ட மீனவர்களால் பாதுகாப்பாக நேற்று மீட்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு மீனவர்கள் பயணித்தபடகு கடலில் பழுதடைந்தமையால் தத் பக்கம் 22

## சிறுமி துஷ்பிரயோகத்துக்கு எதிராக

# ஓமந்தையில் நேற்று ஆர்ப்பாட்டப் பேரணி

### பொலிஸாருக்கு மனுவும் கையளிப்பு






வவுனியா, டிசெ 10

வவுனியா, ஓமந்தை அலைகல்லுப்போட்ட குளம் மாணவியொருவர் நொச்சிக்குளம் கனிஷ்ட உயர்தர வித்தியாலய ஆசிரியர் ஒருவரால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவத்துக்கு நீதி கோரி நொச்சிக்குளம் மற்றும் ஓமந்தைப் பிரதேச மக்களால் நேற்று ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கடந்த மாதம் 29 ஆம் திகதி வயிற்றுவலி காரணமாக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட அலைகல்லுப்போட்டகுளத்தைச் சேர்ந்த மாணவி ஒருவரை வைத்தியர்கள் பரிசோதனைக்குட்படுத்தியபோது அவர் கர்ப்பமாக இருந்தமை கண்டறியப்பட்டது.

இதனையடுத்து ஓமந்தைப் பொலிஸார் அந்த மாணவியிடம் வாக்குமூலம் பெறப்பட்ட போது, நொச்சிக்குளம் கனிஷ்ட பாடசாலை ஆசிரியரான குமாரசிங்கம் இந்திரசிங்கம் (வயது-50) ஆசிரியரே அவரைத் துஷ்பிரயோகம் செய்தார் எனக் கூறப்பட்டது. இதனை அடுத்து ஆசிரியர் ஓமந்தைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தத் துஷ்பிரயோகத்தைக் கண்டித்தும் சிறுமிக்கு நீதி வேண்டியும் நொச்சிக்குளம் மற்றும் ஓமந்தைப் பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஓமந்தை மத்திய கல்லூரிக்கு முன்பாக ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'இருப்பவர்கள் இருந்தால் இப்படி நடக்குமா?,' 'நீதிவேண்டும்விரைவாகநீதிவேண்டும்', 'நீதி வழங்காததன் விளைவே துஷ்பிரயோகத்தின் தொடர்ச்சி' போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளைத் தாங்கியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

இதனையடுத்து சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ள ஓமந்தை பொலிஸ் நிலையம் வரை பேரணியாகச் சென்று பொலிஸாரிடம் மனு ஒன்றையும் கையளித்தனர்.

(த-100)

## நாடு முழுவதும் 45,000 பாலியல் தொழிலாளர்கள்

நாடு முழுவதும் 45 ஆயிரம் பெண்கள் பாலியல் வருவதாகக் குருநாகல் வைத்தியசாலையின் எயிட்ஸ் மற்றும் எயிட்ஸ் தடுப்புப் பிரிவின் சிறப்பு மருத்துவ நிபுணர் எச்.ஏ. சி.டப்ளியூ.ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், குறித்த பெண்கள்தினமும்மூன்று இலட்சம் ஆண்களுக்கு தமதுசேவைகளைவழங்கி வருவதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

சர்வதேசஎயிட்ஸ்நோய் தினத்தை முன்னிட்டு குருநாகல்பௌத்த இளைஞர் சங்க மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையில் தற்போது சுமார் 25 இலட்சம் ஓரின சேர்க்கையாளர்கள் இருப்பதாகவும் மருத்துவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், இதுவரை 2 ஆயிரத்து 600 எயிட்ஸ்நோயாளிகள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

தற்போது பாலியல் சார்ந்த நோய்கள் தொற்றுக்கு உள்ளானவர்களில் பெரும்பாலானோர் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள் எனவும் ஹத்துருசிங்க கூறினார்.

## ரயில் சேவை ஊழியர்களுக்கு சிறிபால டி சில்வா எச்சரிக்கை

கொழும்பு, டிசெ.10

ரயில் சேவையாளர்களின் பணிப்புறக்கணிப்பு தொடர்ந்தால், போராட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பணியில் இருந்து விலகியவர்களாகக் கருதப்படுவார் எனப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

ரயில் சேவையாளர்களின் பணிப்புறக்கணிப்பு தொடர்பிலான கலந்துரையாடலொன்று நேற்றுப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் இடம்பெற்றது. இதனையடுத்து இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின்போதே அவர் இந்த அறிவிப்பை விடுத்தார். ரயில் சேவையை அத்தியாவசிய சேவையாக மாற்றி ஜனாதிபதியின் கையொப்பத்துடன் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த)

## யாழ்ப்பாணத்தில் நடக்கவிருந்த தேசிய மீலாத் விழா ஒத்திவைப்பு

கொழும்பு, டிசெ 10

2017ஆம் வருடத்துக்கான தேசிய மீலாத் விழா தவிர்க்க முடியாத காரணத்தால் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் எம்.ஆர்.எம்.மலிக் தெரிவித்தார்.

இந்த வருட தேசிய மீலாத் விழாவை அரசு ஜனாதிபதியின் தலைமையில் யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிட்டு, அதன்படி எதிர் வரும் 18ஆம் திகதி அதனை நடத்த சகல ஏற்பாடுகளையும் திணைக்களமும், ஏற்பாட்டுக் குழுவினரும் மேற்கொண்டனர்.

இந்நிலையிலேயே, மறு அறிவித்தல் வரும் வரை அது ஒத்திவைக்கப்பட்டுள்ளதாகப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஐ)

## பிக்குகளுக்குப் பிரதமர் ரணில் ரூ. 40 கோடி கொடுத்தமை தவறு

### பெங்கமுவே நாலக்க தேரர் சாடல்

கொழும்பு, டிசெ.10

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 850 பிக்குகளை அலரி மாளிகைக்கு அழைத்துப் பணம் வழங்கியமை தவறான ஒரு நடவடிக்கை எனத் தேசிய உரிமைகளுக்கான அமைப்பின் தலைவர் பெங்கமுவே நாலக்க தேரர் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் நாள்களில் தேர்தல் ஒன்றை எதிர் நோக்கியுள்ள நிலையில் இவ்வாறு தேரர்களை அழைத்து அவசரமாக அரசு ஏன் நிதி வழங்கியது. இதற்காக 40 கோடி ரூபாவை அரசு செலவிட்டுள்ளது. இந்த நிதி முறையற்ற பயன்பாடு அல்லவா? என அபயாராம விகாரையில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட பெங்கமுவே நாலக்க தேரர் கூறியுள்ளார்.

மக்கள் செல்வாக்கு இல்லாத அரசு விகாரைகள் மூலம் மக்களின் நல்லபிப்பிராயத்தைச் சம்பாதிக்கக் கனவு காண்கின்றது எனவும் தேரர் சுட்டிக்காட்டினார். (ஐ)

## பலஸ்தீனத்துக்கான ஆதரவு தொடரும் என்கிறது அரசு

கொழும்பு, டிசெ.10

ஐக்கிய நாடுகளின் முழுமையான உறுப்புரிமையை பெற்றுக் கொடுப்பதில் பலஸ்தீனத்துக்கான தமது ஆதரவை இலங்கை தொட ரும் என வெளியுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன தெரிவித்துள்ளார்.

பலஸ்தீனக் குடியரசு கொழும்பில் அதன் புதிய தூதரகத்தை நிர்மாணிப்பதற்கான காணித்துண்டு ஒன்று இலங்கை அரசால் நேற்றுமுன்தினம் அன்பளிப்பு செய்யப்பட்டது.

இந்தக் காணித் துண்டுக்கான உறுதியை இலங்கைக்கான பலஸ்தீனத் தூதுவர் சுஹைர் எம்.எச். சயிட்டிடம், வெளியுறவுத்துறை அமைச்சர் திலக் மாரப்பன கையளித்தார்.

## 2019 முதல் அறநெறிக் கல்வி அரசால் கட்டாயமாக்கப்படும்

### நாடாளுமன்றில் கூறினார் அமைச்சர்

கொழும்பு, டிசெ.10

2019 ஆம் ஆண்டளவில் தாம் பாசல என்ற அறநெறிக் கல்வி கட்டாயமாக்கப்படும் என்று வனஜீவராசிகள் மற்றும் புத்தசாசன அமைச்சர் காமினி விக்கிரம பெரேரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெறும் புத்தசாசன அமைச்சுக்கான வரவு – செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டு விவாதத்தில் அமைச்சர் உரையாற்றியபோதே இவ்வாறு தெரிவித்தார்.

பௌத்த கோட்பாடுச் சிந்தனைகளை உலகில் முன்னெடுக்கும் கேந்திர நிலையமாக இலங்கையை மேம்படுத்துவதே எமது நோக்கமாகும். கொள்கையை மதிக்கும் சமூகமொன்றை உருவாக்கமுடியாவிட்டால் எமது பொருளாதார வளர்ச்சியைமேம்படுத்த முடியாது.

நாடாளுமன்றத்தில் தியான வகுப்பொன்றை ஏற்படுத்தவேண்டும். கொள்கையை மதிக்கும் சமூகமொன்றை கட்டியெழுப்ப பல திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன – என்றார்.

## காணாமற்போனோர் செயலகத்தின் ஆணையாளர்களாக ஏழு பேர் தெரிவு

கொழும்பு, டிசெ. 10

காணாமற்போனோர் பணியகத்தின் ஆணையாளர்களாக நியமிப்பதற்கு ஏழு பேரின் பெயர்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு, அரசமைப்புச் சபை முன்மொழிந்துள்ளது.

காணாமற்போனோர் பணியகத்தின் ஏழு ஆணையாளர்களைத் தெரிவு செய்வதற்காக, அரசமைப்புச் சபை விண்ணப்பங்களைக் கோரியிருந்தது. இதற்கமைய, 100இற்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் கிடைத்திருந்தன.

இந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்டோரைக் கொண்ட அரசமைப்புச் சபை, ஆணையாளர்களாக நியமிக்கத் தகுதிவாய்ந்த 7 பேரின் பெயர்களைத் தெரிவு செய்து, ஜனாதிபதிக்கு அனுப்பியுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இவர்களின் நியமனங்களை அங்கீகரித்த பின்னர், காணாமற்போனோர் பணியகத்தின் ஆணையாளர்களாக நியமிக்கப்படுவார்கள்.

இதனிடையே, காணாமற்போனோர் பணியகத்தின் ஆணையாளர் பதவிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ள ஏழு பேரில் மனித உரிமை செயற்பட்டாளர் நிமல்கா பெர்னாண்டோவும் ஒருவர் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், இவரை இந்தப் பதவிக்குத் தெரிவு செய்வதற்கு, அரசமைப்புச் சபையில் இடம்பெற்றுள்ள ஜே.வி.பி. உறுப்பினர், விஜித ஹேரத் எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். (ஐ)

# மக்களுக்குச் சலுகைகள் வேண்டாம் வளங்களை மீளத் தந்தாலே போதும்

## நாடாளுமன்றில் டக்ளஸ் எம்.பி. வலியுறுத்து

எமது மக்களுக்கு நிவாரணங்களும், சலுகைகளும் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்று எமது மக்கள் எதிர்பார்த்துக் கிடக்கவில்லை. அவர்களது வாழ்வாதாரத்தில் கணிசமான விருத்தியளைக் காண்பதற்கு எமது மக்களது சொந்த வளங்களை விடுவித்தாலே போதுமானது என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தினார்.

நாடாளுமன்றில்நேற்றுநடைபெற்ற வரவு – செலவு திட்டக் குழு நிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எமது மக்கள் சுய பொருளாதாரத்தில் முன்னேறுவது மாத்திரமின்றி, இந்த நாட்டின் பொருளாதாரத்திற்கும் பக்கபலமாக இருந்து பாரிய பங்களிப்பினை வழங்குவார்கள். யுத்தத்திற்கு முந்தைய காலப் பகுதிகளில் அவ்வாறான பங்களிப்புகளை எமது மக்கள் நிறையவே வழங்கியிருக்கின்றார்கள்.

வடக்கில் காணப்படுகின்ற கடல் வளங்களில் பாரியளவு சுரண்டல்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றன. இந்திய கடற்றொழிலாளர்களது எல்லை தாண்டியதும், தடை செய்யப்பட்ட உபகரணங்களைக் கொண்டதுமான தொழில்கள் காரணமாகவும், பிற மாவட்டங்களிலிருந்து அத்துமீறி நுழைகின்ற கடற்றொழிலாளர்களது வளச் சுரண்டல்கள் காரணமாகவும் எமது மக்களுக்கான வாழ்வாதாரங்கள் கொள்ளையிடப்படுகின்ற அதே நேரம், கடல் வளங்கள், எமது மக்களின் தொழில் உபகரணங்கள் என்பன தொடர்ந்தும் அழிக்கப்பட்டு வருகின்றன.

மேலும் அதிகளவிலான கடல் வளத்தினைப் பயன்படுத்த இயலாத அளவுக்குப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் அவை முடக்கி வைக்கப்பட்டுள்ளன. அத்துடன், அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய நிலையில் கடற்றொழிலின் பல்வேறு கூறுகள் காணப்படுகின்றன.

விவசாய நிலங்களை எடுத்துக் கொண்டாலும் இதே நிலைதான் காணப்படுகின்றது. இன்னும் விடுவிக்கப்படாத எமது மக்களின் சொந்தக் காணி, நிலங்கள், படையினரின் விவசாய செயற்பாடுகள் காரணமாகவும் எமது விவசாய மக்கள் பலரது வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்



டுள்ள நிலை தொடர்கின்றது.

எந்தவிதமான கைத்தொழில் வளர்ச்சிகளும் கிடையாது. தொடர் நிலையற்ற பொருளாதாரமான கட்டுமானத்துறையை எடுத்துக் கொண்டாலும், திருட்டு மணல் மாபியா காரணமாக மணலுக்கு செயற்கையான தட்டுப்பாடுகள் ஏற்படுத்தப்பட்டு வடக்கின் கட்டுமானத்துறையானது முழுமையாகவே ஸ்தம்பித்துப் போயிருக்கின்றது.

எமது நாட்டின் பொருளாதார வளர்ச்சி வீதமானது 2017ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டில் 4.0 வீதமான வளர்ச்சியைக் கொண்டிருப்பதாகத் தொகை மதிப்பு மற்றும் புள்ளி விவரத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படித் தரவுகளைப் பார்க்கின்றபோது, உணவு, குடிபானங்கள் மற்றும் புகையிலை உற்பத்தி 2.2 சதவீதமான மறை வளர்ச்சி வீதத்தினை அடைந்துள்ளதாகத் தெரிய வருகின்றது. அதே நேரம், 2.5 சதவீதமான நேர் வளர்ச்சியைப் புடவை மற்றும் ஆடையணிகள் உற்பத்தி கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

அந்தவகையில், 2017ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் காணப்பட்ட பொருளாதார நிலைமையானது 2 வீதத்தால் அதிகரிப்பினை எட்டியுள்ளது.

2010 – 2015 வரையிலான காலகட்டத்தில் எமது நாட்டு பொருளாதார வளர்ச்சியானது 6.4 வீதத்தினை சராசரியாக எட்டியிருந்தது. அதற்குப் பிந்திய தான காலகட்டத்தில் – அதாவது 2017ஆம் ஆண்டின் முதற் காலாண்டு வரையில், எமது பொருளாதார வளர்ச்சியானது தொடர் வீழ்ச்சி நிலையையே கண்டுள்ளது.

இத்தகைய வீழ்ச்சி நிலைக்கு பல்வேறு காரணங்கள் இருப்பினும் குறிப்பாக, 2015ஆம் ஆண்டு முதல் மிகவும் அதிகளவில் எமது நாட்டைப் பாதித்து வருகின்ற வறட்சியும் ஒரு காரணமாகும். வடக்கு, கிழக்கு, வட மத்தி மற்றும் மத்திய மகாணங்களை இந்த வறட்சி மிகவும் பாதித் துள்ளது. இதன் காரணமாக விவசாய உற்பத்திகள்வெகுவாகவேமுடங்கிவிட்டன. அத்து டன், பணவீக்கமும் அதிகரித்திருந்தது.

கடந்த ஆண்டு இரண்டாம் காலாண்டுப் பகுதியுடன் இந்த ஆண்டு இரண்டாம் காலாண்டு பகுதியை ஒப்பிடும்போது, விவசாய உற்பத்திகளின் வளர்ச்சி – குறிப்பாக, நெல், எண்ணெய் சார்ந்த பழங்கள், தேங்காய், தானியங்கள், காய்கறிகள், வாசனைத் திரவியங்கள் அடங்கலான உற்பத்தி வளர்ச்சி குறைந்துள்ள நிலையில், கடந்த மூன்று வருடங்களாக மறை வளர்ச்சி வீதங்களையே தொடர்ச்சியாகக் கொண்டிருந்த இறப்பர் மற்றும் தேயிலையின் வளர்ச்சியானது, முறையே 10.2 மற்றும் 6.9 சத வீதமான குறிப்பிடத்தக்க நேர் வளர்ச்சி வீதங்களைக் கொண்டிருக்கின்றன.

குறிப்பாக, விவசாயத்துறை உற்பத்தியின் வளர்ச்சியானது, 2017ஆம் ஆண்டில் இதுவரையில் 40 சத வீதமான வீழ்ச்சி நிலையைக் காட்டுகின்றது.

எனினும், விவசாயத் துறையின் வீழ்ச்சி மட்டுமே எமது பொருளதார வளர்ச்சியில் பாதிப்பினைஉண்டுபண்ணிவிட்டதாகக் கொள்ள முடியாது. ஏனைய உற்பத்தித்துறைகள் குறித்தும் உரிய அவதானங்கள் செலுத்தப்பட வேண்டும். அதற்காக உற்பத்தித்துறையின் உப பிரிவான கட்டுமானத்துறை கூடிய வளர்ச்சி பெற்றிருப்பதைக் கொண்டு, திருப்தியடைவதற்கும் முடியாது. இது, கட்டுமானத்துறையின் தேவைகள் கருதிய ஏற்றுமதி, இறக்குமதி நிலைமைகளைப் பொறுத்த வளர்ச்சியாகும்.

எனவே, பிரதான உற்பத்தித் துறைகள் தொடர்பிலான அவதானங்களே அதிகமாகத் தேவைப் படுகின்றன. அதே நேரம் பிறநாட்டு முதலீட்டாளர்களுக்கான முதலீட்டு ஈர்ப்புத்தன்மை, அதற்குரிய வசதிகள் மற்றும் சலுகைகள், சட்ட சிரமங்கள், கொள்கைத்தளர்த்தல்கள் போன்றவை அபிவிருத்தி அடைந்து வருகின்ற ஒரு நாட்டுக்கு ஏற்ற வகையில் வகுக்கப்பட வேண்டும்

அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடு என்ற வகையில், நிதி உதவிகளை, சலுகைகளை, மானியங்களை வெளிநாடுகளிலிருந்து எதிர்பார்க்க முடியாது. எமக்கான பொருளாதாரத்தினை எமது உற்பத்திகளின் மூலமாகவே – அவற்றின் ஏற்றுமதிகளின் மூலமே நாம் ஈட்டிக் கொள்ள வேண்டும் – என்றார்.

## 99 மேலதிக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதம் நடத்தப்பட்டு 93 மேலதிக வாக்குகளால் அது நிறைவேற்றப்பட்டது. ஆதரவாக 151 வாக்குகளும், எதிராக 58 வாக்குகளும் அளிக்கப்பட்டிருந்தன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸும் ஆதரவாக வாக்களித்திருந்ததுடன், கூட்டு எதிரணியும், ஜே.வி.பியும் எதிராக வாக்களித்திருந்தன.

இரண்டாம் வாசிப்பைத் தொடர்ந்து கடந்த மாதம் 17ஆம் திகதி முதல் நேற்று 9ஆம் திகதி வரை அமைச்சுகள் மீது விவாதம் நடத்தப்பட்டது. நேற்று நிதி மற்றும் ஊடகத்துறை அமைச்சுகள் மீதான இறுதி விவாதம் நடைபெற்ற நிலையில் மூன்றாம் வாசிப்பை நிறைவேற்ற ஜே.வி.பியின் தலைவரும் எம்.பியுமான அநுரகுமார திஸாநாயக்க வாக்கெடுப்பைக் கோரினார்.

இதனையடுத்து இடம்பெற்ற வாக்கெடுப்பிலேயே ஆதரவாக 155 வாக்குகளும், எதிராக 56 வாக்குகளும் கிடைத்தன.

## பொற்பதி அறிவாலய கலைவிழா இன்று

யாழ்ப்பாணம், டிசெ.10

பொற்பதி அறிவாலயம் நடத்தும் சரஸ்வதி முன்பள்ளியின் 32 ஆவது மற்றும் பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலையின் 6 ஆவது கலைவிழா இன்று ஞாயிறு பிற்பகல் 1.30 மணிக்கு – கொக்குவில் கிழக்கு, பொற்பதி வீதியில் பொற்பதி அறிவாலயத்தின் தலைவர் சண்.வாமதேவன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்தியசாலை மகப்பேறு வைத்திய நிபுணர் கே.சுரேஷ்குமார் – வாசுகி தம்பதிகள் கலந்து கொள்வர். (இ

# கண்ணீர் வடிக்கிறார் இயேசு; கொழும்பில் நடந்த அதிசயம்!





இலங்கையிலுள்ள தேவாலயம் ஒன்றில் இயேசு நாதரின் உருவத்திலிருந்து வியர்வைத் துளிகள் வடிந்து வருகின்றன.

வத்தளை – சென்.அன்ரனிஸ் தேவாலயத்திலுள்ள இயேசு நாதரின் உருவம் பொறிக்கப்பட்ட புகைப்படத்திலேயே வியர்வை வடியும் அதிசயம் இடம்பெற்றுள்ளது.

இந்த அதிசயத்தைக் காணப் பெருந்திரளான பக்தர்கள் தேவாலயத்தை நோக்கிபடையெடுக்கின்றனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

நீர் போன்று வடியும் இந்தத் திரவம் வியர்வைக்குச் சமமானதாக உள்ளதெனவும், இந்த வருடம் ஒக்ரோபர் மாதம் முதல் இவ்வாறு புகைப்படத்தில் இருந்து வியர்வைத் துளிகள் வடிந்து வருவதாக வத்தளை தேவாலய வணக்கத்துக்குரிய அருட்தந்தை சன்ஜீவ் மென்டிஸ் தெரிவித்துள்ளார்.

வியர்வை வடியும் புகைப்படம் கடந்த 12ஆண்டுகளுக்கு முன்னர் இந்தியாவின், சாலக்குடி பகுயில் இருந்துகொண்டுவரப்பட்டுள்ளது.

கண்ணீர் போன்ற நீர்த்துளிகள் வடியும் இந்த படம் ஆரம்பத்தில் நிரோமி அமரசிங்க என்ற பெண்ணின் வீட்டில் வைக்கப்பட்டிருந்ததாக அருட்தந்தை மென்டிஸ் குறிப்பிட்டார்.

இயற்கைக்கு மாறான நிகழ்வு ஏற்பட்ட பின் இந்தப் படம் தேவாலயத்திற்குக்கொண்டுவரப்பட்டுள்ளது என அவர் கூறினார்.

அவ்வப்போது இயேசு நாதரின் நெற்றியில் இருந்து வியர்வைத் துளிகள் வடிந்ததாக நிரோமி குறிப்பிட்டார்.

இதுதொடர்பில்உரியமுடிவுக்கு தற்போது வர முடியாது. இது தொடர்பில் அறிவியல் விளக்கம் இருக்கலாம். ஆனால் யாரால் அதை நிரூபிக்க முடியும் என்று எனக்குதெரியாதெனஅருட்தந்தை மேலும் தெரிவித்தார்.

## பங்கீட்டு...

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

பகிர்ந்து கொள்ளும்.

**மட்டக்களப்பு மாவட்டம்**

செங்கலடி, ஆரையம்பதி பிரதேச சபைகளின் தலைமைப் பதவியை புளொட்டும், தமிழரசும் இரண்டு, இரண்டு வருடங்கள் பகிரும்.

களுவாஞ்சிக்குடி, போரதீவு பிரதே சபை தலைமைப் பதவியை ரெலோ பெற்றுக் கொள்ளும்.

மட்டக்களப்பு மாநகர சபைத் தலைமை இலங்கைத் தமிரசுக் கட்சிக்குப் பிரதி மேயர் பதவி ரெலோவுக்கு.

வாழைச்சேனை உட்பட எஞ்சிய பிரதேச சபைகளில் பிரதான இடம் தமிழரசுக்கு. எஞ்சிய 40 வீத இடங்கள் மற்றைய இரு கட்சிகளுக்கும்.

**அம்பாறை மாவட்டம்**

அம்பாறை மாவட்டத்தில் காரைதீவு, திருக்கோவில், பிரதேச சபைகளின் தலைமை ரெலோவுக்கு. நாவிதன்வெளி, ஆலையம்படிவேம்பு பிரதேச சபைகளின் தலைமைப் பதவியை தமிழரசு கோரும்.

கல்முனை மாநகர சபையின் தமிழ் வட்டாரங்களில் ஐந்தில் ரெலோவும், மூன்றில் தமிழரசும் களமிறங்கும்.

**திருகோணமலை மாவட்டம்**

திருகோணமலை மாவட்டத்தில் அனைத்துப் பிரதேச சபைகளின் தலைமைக்கும் இலங்கைத்தமிழரசுக்கட்சிவேட்பாளர்களை நிறுத்தும்.

## பழைய மாணவர் மன்ற செயற்குழுக் கூட்டம்

யாழ்ப்பாணம், டிசெ.10

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரியின் பழைய மாணவர் மன்றத்தின் செயற்குழுக் கூட்டம் இன்று ஞாயிறு பிற்பகல் 3 மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி வாசுகி தவபாலன் தலைமையில் இடம்பெறும்.

அனைத்துச் செயற்குழு உறுப்பினர்களும் சமுகமளிக்குமாறு செயலாளர் க.ஜெயதீசன் கேட்டுக்கொண்டுள்ளார். (இ-19)

## தமிழ்...

(22ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவம்தொடர்ந்து விசாரணைக்கு உட்படுத்தியது.

பின்னர் சம்பவ இடத்திற்கு பொலிஸார் அழைக்கப்பட்டனர். சிவில் உடையில் வந்த பொலிஸார் தாங்கள் யார் என்பதை உறுதிப்படுத்தாமல் ஊடகவியலாளர்களிடம் விசாரணை நடத்தினர் எனத் யதெரிவிக்கப்பட்டது.

பொலிஸாரிடமும் ஊடகவியலாளர்கள் தங்களை உறுதிப் படுத்தியுள்ளனர். இருப்பினும் இராணுவம் சம்மந்தப்பட்ட புகைப்படங்கள் மற்றும் வீடியோக்களை அழிக்குமாறு ஊடகவியலாளர்களை வற்புறுத்திய பொலிஸார், ஊடகவியலாளர்களின் புகைப்படக் கருவிகளைப் பறித்து இராணுவத்திடம் ஒப்படைத்தனர்.

புகைப்பட கருவிகளைத் தம்வசப்படுத்திய இராணுவத்தினர், அதில் உள்ள வீடியோ மற்றும் புகைப்படங்களை அழித்துள்ளனர்.

அது மட்டுமல்லாமல் அங்கு நின்ற ஊடகவியலாளர்களை அச்சுறுத்தும் வகையில் இராணுவத்தினர் புகைப்படம் மற்றும் வீடியோ பதிவு செய்தனர்.

அவர்கள் சென்ற வாகன இலக்கத்தைப் பதிவு செய்த இராணுவம் ஊடகவியலாளர்களின் விவரங்களையும் பதிவு செய்த பின்னர் அவர்களை விடுவித்துள்ளது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மனித உரிமைகள் தினம்

இன்று மனித உரிமைகள் தினம்.

மனிதர்கள், மனிதர்களாகப் பிறந்தமையால் அவர்களுக்குக் கிடைத்த - அடிப்படையான - விட்டுக் கொடுக்க முடியாத - மறுக்க இயலாத - உரிமைகள் குறித்து பூமிப்பந்து விசேட கவனம் எடுக்கும் நாள்.

மனித சமுதாயம், தனது வாழ்வுலகின் சகோதரர்களாகிய மனிதர்களை, அவர்களின் மனிதத்துவப் பண்பியல்வுகளை - குறிப்பாக மனிதத்துவத்தைப் பேணி மதிப்பதற்காக விதிக்கப்பட்ட விடயங்களை வலியுறுத்துகின்ற தினம்.

ஆறறிவு படைத்த மனிதன், தனது சக மனிதனை, மதிக்கின்றமையையும், வாழ்வியலில் தனது சகோதர மனிதனுக்கு உள்ள உரிமைகளைப் பேணுகின்றமையையும் கடப்பாடாக விதிப்பவையே மனித உரிமைகள்.

மக்கள், மாக்களாக அல்லாமல், மனிதர்களாக வாழ்வதாயின் அதற்கான பண்பியல்புகள், வாழ்க்கை முறைகள், வாழ்வியல் குணாதிசயங்கள் பேணப்பட வேண்டும். அவற்றை வகுத்துக் கூறுபவையே மனித உரிமைகள். அந்த மனித உரிமைகள் நிலை நிறுத்தப்படுகின்றமையை உறுதிப்படுத்துவதாக இந்த மனித உரிமைகள் தினம் அமைகின்றது.

ஐக்கிய நாடுகள் சபையால் இந்த மனித உரிமைகள் தினம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. ஐக்கிய நாடுகள் சபை அமைப்பு 1945 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. அதையடுத்து, அடுத்த ஆண்டிலேயே 'சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு' உருவாயிற்று.

அந்தவேளையில் ஐம்பதுமூன்று நாடுகளை அங்கமாகக் கொண்டிருந்த இந்த அமைப்பு 'சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தை' உருவாக்குவதற்கு ஒரு குழுவை நியமித்தது. அமெரிக்க ஜனாதிபதியின் மனைவி எலினா ரூஸ்வெல்ட் தலைமையில் அமைக்கப்பட்ட இந்தக் குழு முப்பது பிரிவுகளைக் கொண்ட மனித உரிமைகள் பிரகடனத்தைத் தயாரித்து ஐ.நா. சபையில் சமர்ப்பித்தது. அந்தப் பிரகடனமே 1948 ஆம் ஆண்டு டிசெம்பர் 10 ஆம் திகதி பாரிஸில் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் விசேட கூட்டத்தில் - 58 நாடுகளின் இணக்கத்துடன் - அங்கீகரிக்கப்பட்டது.

அதன்பின்னர், அந்தப் பிரகடனம் அங்கீகரிக்கப்பட்ட டிசெம்பர் 10 ஆம் திகதியை 'சர்வதேசமனித உரிமைகள் தினம்' ஆகக் கொண்டாடுவது என்ற முடிவு 1950 இல் அறிவிக்கப்பட்டு, தொடர்ந்தும் உலக நாடுகளால் இன்றளவில் அது அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இந்தப் பிரகடனமே இன்றளவில் மிக அதிகமாக மொழிபெயர்க்கப்பட்ட ஆவணம் என்று 'கின்னஸ்' பதிவு கூறுகின்றது. அவ்வளவு தூரம் மனித வாழ்வுடன், மனித விழுமியங்களுடன் மிகவும் நெருக்கமான அடிப்படைகளைக் கொண்ட விடயமாக மனித உரிமைகள் அமைந்துள்ளன.

ஓர் அழிவில் இருந்துதான் மற்றொரு உருவாக்கம் தோன்றும் என்பார்கள். மனித உரிமைகள் பற்றிய விழிப்புணர்வும் கூட மனிதத்தைக் கொன்றொழித்த கெடுதிகளில் இருந்துதான் - அந்த அழிவிலிருந்துதான் - உற்பவித்தது. இரண்டாம் உலகப் போரின்போது உலகம் பெற்ற பட்டறிவே, மனிதன் மனிதனாக வாழ்வதற்கு அடிப்படையான விழுமியங்களை உள்ளடக்கி ஓர் உரிமைப் பிரகடனம் அவசியம் என்ற உள்ளுணர்வை மனிதர்கள் மத்தியில் ஏற்படுத்தியது.

ஒவ்வொரு மனித உயிருக்கும் இயல்பாகவே உரித்தளிக்கப்பட்ட உரிமைகள் பற்றிய சர்வதேச பட்டயம் இதுவாகும். இந்த முப்பது சான்றுரைகளும் பிற்காலத்தில் உருவாக்கப்பட்ட சர்வதே ஒப்பந்தங்கள், பிரகடனங்கள், பட்டயங்கள், பிரதேச மனித உரிமை ஆவணங்கள், தேசிய அரசமைப்புச் சட்டங்கள், நாடுகளின் பிற சட்டங்கள் என்பன மூலம் விரிவாக்கம் செய்யப்பட்டன.

இந்தப் பிரகடனத்தை உலகின் அனைத்து நாடுகளுமே ஏற்று, ஒப்புக் கொண்டுள்ள போதிலும் பல நாடுகள் அவற்றை எழுத்தளவிலேயே பேணுகின்றன. செயலளவில் அவை நடப்பதில்லை.

இலங்கையில் கூட, 2009 இல் முடிவுற்ற கொடூர யுத்தத்துக்கு முன்னரும் - ஏன் அதற்குப் பின்னரும் கூட - இன்றளவிலும் - அத்தகைய அடிப்படை மனித உரிமைகளைப் பேணாத போக்குத்தான் - தொடருகின்றது.

இரண்டாம் உலகப் போர்க் கொடூரங்களின் பட்டறிவில் இருந்துதான் மனித உரிமைகள் பற்றிய பட்டயம் எழுந்தது.

அந்தப் பட்டயத்தை ஏற்றுக் கொண்ட நமது நாட்டில் கடந்த நூற் றாண்டின் பிற்பகுதியிலும் இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலும் நிகழ்ந்த கொடூரப் போரின் போதும் பின்னரும் மனித உரிமைகள் விவகாரம் காற்றில் பறக்க விடப்பட்டன. இன்றளவும் அந்த அத்துமீறல்களுக்கு நீதி, நியாயம் தேடப்படாமல் மறுக்கப்படுவதும், அந்தக்கொடூரங்களைப்புரிந்தகுற்றவாளிகள்பாதுகாக்கப்படுகின்றமையும் தொடர்கதையாகத் தொடர்வதுதான் வேதனையிலும் வேதனை.

# மைத்திரியுடன் நெருக்கமாக மஹிந்த தரப்பு கடும் முயற்சி

## இரகசியப் பேச்சுக்கள் மும்முரம்

கொழும்பு, டிசெ.10

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் மீண்டும் நெருங்கிய தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உட்பட அவரது குடும்பத்தினர் மிகவும் இரகசியமான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் ஒரு கட்டமாக மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுறுத்தல்களுக்கு அமைய நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் அமைச்சர் தயாசிறி ஜயசேகர வைச் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார் எனத் தெரிய வருகிறது.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷ இந்த இரகசியப் பேச்சுக்கு இதுவரை இணக்கம் தெரிவிக்கவில்லை எனக் குறிப்பிடப்படுகிறது.

எனினும் ஷிரந்தி ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் இதற்குச் சாதகமான கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

இதற்கு அமைய எதிர்வரும் உள்ளூராட்சித் சபைத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியும், கூட்டு எதிர்க்கட்சியும் இணைந்து போட்டியிடும் வகையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, கடந்த வியாழன் இரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு அனுப்பி வைத்துள்ளார் எனப் பேசப்படுகிறது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவர்களும், கூட்டு எதிர்க்கட்சியின் தலைவர்களும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் கூட்டு எதிர்க்கட்சி இடையிலான ஐக்கியத்தின் தேவை குறித்து வலியுறுத்தி வருகின்றனர். (ஐ)

## 'போதை இல்லை என்று சொல்வோம்' விழிப்புணர்வு நடைபவனி யாழில் இன்று

யாழ்ப்பாணம், டிசெ.10

கொழும்பு நகர் மையம் மற்றும் யாழ்ப்பாணம் இன்னர்வீல் கழகங்களின் ஏற்பாட்டில் போதை மற்றும் புகைத்தலுக்கு எதிராகப் போதை இல்லை என்று சொல்வோம் என்ற தலைப்பிலான விழிப்புணர்வு நடைபவனி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். முற்றவெளியில் ஆரம்பமாகவிருக்கிறது.

நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட செயலர் நா. வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக இன்னர்வீல் மாவட்டம் 3220 இன் தலைவர் திருமதி விஜயலக்ஷ்மி கேதீஸ்வரனும், யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ. விக்னேஸ்வரனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

யாழ். முற்றவெளியில் ஆரம்பமாகும் விழிப்புணர்வு நடைபவனி யாழ். வீரசிங்கம் மண்டபத்தை வந்தடையவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## 'மாவா'வுடன் இருவர் கைது

புத்தளம், டிசெ.10

புத்தளம் நகரில் உள்ள எலுவான்குளம் பகுதியில் 'மாவா' என்ற போதைப் பொருள்கள் அடங்கிய பொதிகளுடன் இருவரைக் கைது செய்துள்ளனர் எனப் புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் பொலிஸார் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொண்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போதே இவர்கள் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பஸ் தரிப்பிடத்தில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பஸ் சாரதிகளுக்கு விற்பனை செய்யும் நோக்கில் கஞ்சா கலந்த மாவா என்ற போதைப் பொருள்களை அவர்களிடமிருந்து கைப்பற்றினர் எனப் புத்தளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து இந்த மாவா எனும் போதைப் பொருள் அடங்கிய சுமார் இருநூறு பக்கட்டுக்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. கைது செய்யப்பட்ட இருவரையும் புத்தளம் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# காணாமற்போனோர் விவரம் திரட்டும் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, டிசெ.10

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைய காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான விவரங்களைத் திரட்டும் பணிகளைத் தேசிய ஒருமைப்பாடு மற்றும் நல்லிணக்க அமைச்சு ஆரம்பித்துள்ளது.

இந்த விவரங்களைத் திரட்டும் பணிகள் மாவட்ட செயலாளர்கள் ஊடாகத் தற்போது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்று வருகின்றன.

காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான பணியகத்துக்குத் தகவல்களைத் திரட்டும் நோக்கில், இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கடந்த மாதம் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளைச் சந்தித்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இது தொடர்பான விண்ணப்பப் பத்திரங்களை விநியோகித்து, எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் தகவல்களைச் சேகரிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்திருந்தமைக்கு அமைய இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ஐ)

## இளைஞனின் சடலம் மீட்பு

குருநாகல் - தம்புள்ள பிரதான வீதியிலுள்ள தலகிரியாகம பாதை அரு கில் வைத்து இளைஞன் ஒருவரின் சடலம் நேற்று அதிகாலை பொலிஸாரால் மீட்கப்பட்டது.

மீட்கப்பட்ட சடலம் 25 - 30 வயது மதிக்கத்தக்க இளைஞன் ஒருவருடையது எனவும் இவரின் தலை, முகம் மற்றும் பாதங்கள் என்பவற்றில் பாரிய காயங்கள் காணப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## மாந்தை மனிதப் புதைகுழி; வழக்கு மீண்டும் ஒத்திவைப்பு

மன்னார், டிசெ.10

மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தைப் பகுதியில் கண்டு பிடிக்கப்பட்ட மனிதப் புதைகுழி வழக்கு மீண்டும் பிறிதொரு தினத்திற்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இவ்வாறு ஒத்திவைக்கப்பட்டது.

கடந்த 2013ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வர ஆலயப் பகுதியில் குடிதண்ணீர் குழாய்களைப் பொருத்துவதற்கு முனைந்தபோது மனித எச்சங்கள் சில தென்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து நீதிமன்ற உத்தரவின் பேரில் அந்தப் பகுதி அகழப்பட்டதுடன், சுமார் 84 மனித எச்சங்களும், மண்டையோடுகளும் கண்டுபிடிக்கப்பட்டன.

இவ்வாறு கண்டெடுக்கப்பட்ட எச்சங்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்படும் நோக்கில் அனுராதபுரம் வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

பெண்களுக்கெதிரான வன்முறை ஒழிப்புச் செயற்பாடு

(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

குடும்ப பாரபட்சத்தால் துவண்டு போகும் பெண் பிள்ளைகளை மீட்க குடும்பத்தில் சமத்துவம் பேணுவோம்.

JSAC 16 2017

யாழ். சமூக செயற்பாட்டு மையம்

## நாளை

11.12.2017
திங்கட்கிழமை

நட்சத்திரம் : உத்தரம் மு.ப 11.17 வரை
திதி : அட்டமி கா. 06.13 வரை
சுபநேரம் : 12.19 - 01.49 வரை
இராகுகாலம்: 07.49 - 09.19 வரை

# 276 ஆவது நாளாகத் தீர்வின்றி தொடர்கின்றது போராட்டம்

## காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளுடன் நேற்று நிலைமாறு கால நீதிக்கான அமைப்பின் பிரதிநிதி பேச்சு



முல்லைத்தீவு, டிசெ.10

தமது உறவுகளுக்குத் தீர்வு கிடைக்கும்வரை போராட்டத்தை கைவிடப் போவதில்லைஎனத்தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் வலியுறுத்தியுள்ளனர்.

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முல்லைத்தீவில் கடந்த மார்ச் மாதம் 8 ஆம் திகதி ஆரம்பித்த போராட்டம் நேற்றும் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக 276 ஆவது நாளாக தொடர்ந்தது.

இறுதிக்கட்டப் போரின் போது சரணடைந்தோர், இராணுவத்திடம்கையளிக்கப்பட்டோர், கைதுசெய்யப்பட்டோர் மற்றும் யுத்த காலத்தில் கடத்தப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் தமது உறவுகள் தொடர்பில் உரிய தீர்வை முன்வைக்குமாறு வலியுறுத்தித் தொடர் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

இவர்களின்போராட்டத்துக்கு எந்தவித பதில்களும் இதுவரை கிடைக்கவில்லை. போராட்டம் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது. அரசால் தமக்கு எந்தத் தீர்வும் வழங்கமுடியவில்லை எனவும் சர்வதேச விசாரணையேதமக்குத்தேவை எனவும் உறவுகள் கோரியுள்ளனர்.

இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டுள்ள உறவினர்களை நியூயோர்க்கைத்தலைமையகமாகக் கொண்டியங்கும்நிலைமாறு கால நீதிக்கான அமைப்பின் பிரதிநிதி சந்தித்துக் கலந்துரையாடினார்.

இதன்போது இலங்கை அரசால் உருவாக்கப்பட்ட காணாமற்போனோர் தொடர்பான அலுவலகம் தேவை இல்லை என்பதையும், காணாமற்போனவர்கள் தொடர்பில் அரசிடம் எதையும்முறையிடவில்லை என்றும்,பன்னாடுகளுக்கே தாம் முறையிடவுள்ளனர் எனவும் உறவுகள் அவரிடம் தெரிவித்தனர். (ஐ)

# வடக்கைத் தனி அரசாக்கினால் வெளி முதலீடுகள் அதிகரிக்கும்

## நாடாளுமன்றில் கூறினார் சார்ள்ஸ் எம்.பி.



கொழும்பு, டிசெ.10

புலம்பெயர் தமிழர்களிடமிருந்து வடக்குக்கு முதலீடுகள் அவசியம் எனில், வடக்கைத் தனி அரசாகப் பிரித்துத் தருமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற தெரிவுக்குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்ட அமைச்சுக்கள் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

வெளிநாடுகளில் புலம்பெயர் சமூகத்தினர் செல்வச் செழிப்போடு வாழ்கின்றனர். எனவே, ஹோட்டல்கள் மற்றும் சுற்றுலாத்துறை சார்ந்த விடயங்களுக்காக அவர்கள் வடக்கில் முதலீடு செய்யவேண்டும். வடக்கு மக்கள் மீது அன்பும் ஆதரவும் இருந்தால் கட்டாயம் இதைச் செய்ய வேண்டும் என்று அமைச்சர் ஜோன் அமரதுங்க வெளியிட்டிருந்த கருத்துக்குப் பதிலளிக்கும் வகையிலேயே சார்ள்ஸ் எம்.பி. மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஏனைய மாகாணங்களில் சுற்றுலாத்துறைக்கு செலவிடப்படுவது போன்றே வடக்குக்கும் சுற்றுலாத்துறையில் நிதி செலவிடப்பட வேண்டும். இதன்பொருட்டு 5 வருட வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டும் என்றும் அவர் கூறினார். (ஐ)

# செக் குடியரசு பெண் கொழும்பில் கைது

கொழும்பு, டிசெ 10

செக் குடியரசின் பிரஜையொருவர் கொழும்பு கோட்டை கெனல் வீதியில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வீசா காலம் முடிவடைந்தபின்னர் சட்டவிரோதமாகத் தங்கியிருந்த குற்றச்சாட்டின் பேரில் அவர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் கூறினர்.

கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் இந்த வெளிநாட்டவர் கைது செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# அத்தியாவசியப் பொருள் விலை விரைவில் கட்டுப்பாட்டில் வரும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



கொழும்பு, டிசெ.10

ஜனவரி, பெப்ரவரி மாதத்திற்குள் தற்காலிகமாக அதிகரித்துவரும் அத்தியாவசியப் பொருள்களின் விலைகள் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவரப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன், காலநிலை மாற்றங்களால் நாட்டில் ஏற்பட்டுள்ள அனர்த்தங்கள் தொடர்பில் நாம் பாடமொன்றைக் கற்றுக்கொள்ள வேண்டும். எதிர்காலத்தில் காலநிலை சீர்க்கேடுகளுக்கும், சவால்களுக்கும் முகங்கொடுக்கும் வகையில் இடைக்கால மற்றும் நீண்டகாலத் தீர்வுகளை காண எதிர்பார்த்துள்ளதாகவும் கூறினார்.

நாடாளுமன்றம் சபாநாயகர் கருஜயசூரிய தலைமையில் நேற்றுமுன்தினம் காலை 9.30 மணிக்கு ஆரம்பமானது. தினப் பணிகளைத் தொடர்ந்து பிரதமர் நிகழ்த்திய விசேட உரையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் வலியுறுத்தியவை வருமாறு:

தேர்தலில் வாக்களிப்பவர்கள் அத்தியாவசியப் பொருள்களின் விலை பற்றிக் கேட்பார்கள். அரசு நடவடிக்கையெடுக்கும் என்று வேட்பாளர்கள் கூறுவார்கள். எமது நாட்டின் உணவு உற்பத்தி வானிலை சங்கிலியுடன் பின்னிப்பிணைந்துள்ளது. காலநிலை மற்றும் வானிலை மாதிரிகள் மாறிவிட்டன. கடந்த ஆண்டு நவம்பரில் எதிர்பார்க்கப்பட்ட மழை இல்லாததால் வறண்ட வானிலை காணப்பட்டது. இது நாட்டின் பொருளாதாரத்தையும் உள்நாட்டு பொருளாதாரத்தையும் பாதித்துள்ளது. சில மாகாணங்களில் மூன்று அல்லது நான்கு பயிர்கள் பயிரிடப்பட்டன. தேங்காய் உற்பத்தி வீழ்ச்சியடைந்தது. மரக்கறி உற்பத்தியும் 30வீதமாக குறைந்தது. விவசாய உற்பத்தியும் பெரும் வீழ்ச்சி கண்டது.

வெள்ளம் மற்றும் வறட்சியின் காரணமாகப் பொருளாதார வளர்ச்சி வேகம் 4.5வீதமாக குறைந்துள்ளது. உலகளாவிய ரீதியில் காலநிலை மாற்றங்கண்டு வருகிறது. இதற்கான காரணங்களைக் கண்டறிய தாமதமடைந்துள்ளது. இதில் பிரச்சினை உள்ளது. அரசு என்ற ரீதியில் அதனைப் பொறுப்பேற்றுக்கொள்ளவேண்டும். யதார்த்தத்தை விளக்கமளித்து சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டும். இந்த விடயங்கள் குறித்து கடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் கலந்தாலோசித்தோம். பல தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன. அவை குறுங்காலத் திற்கான தீர்மானங்களாகும்.

சதொச நிறுவனத்திற்கு 2இலட்சம் மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்யும் உரிமையைத் திறைசேரியின் ஊடாக வழங்கியுள்ளோம். மேலதிக அரிசியைக் கொள்வனவு செய்யவும், தனியார் துறையினருக்குக் களஞ்சிய வசதியிருந்தால் அவர்களுக் கும் அரிசியை இறக்குமதிச் செய்யும் உரிமத்தையும் வழங்கத் தீர்மானித்துள்ளோம். அதன்மூலம் நாட்டுக்குப் போதுமான அரிசியை இறக்குமதி செய்துகொள்ள முடியும். தேங்காய் இறக்குமதி செய்ய அனுமதியளிக் கப்பட்டுள்ளது. வேறு மரக்கறி வகைகளை இறக்குமதிச் செய்ய வேண்டுமாயின் விவசாயிகளுக்குப் பாதிப்பில்லாத வகையில் அது அமைய வேண்டும்.

பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு மானியங்களை வழங்க விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. விவசாயத்திற்கு ஏற்பட்டுள்ள அழுத்தங்களைக் கண்டறிந்து அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்க அமைச்சரவை உபகுழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி நடவடிக்கை எடுத்துள்ளார். சீர்றற காலநிலைக்கு முகங்கொடுத்தல் மற்றும் பொருளாதார சவால்களை வெற்றிகொள்ள துறை சார்ந்தவர்களுடன் அடுத்த வாரம் கலந்துரையாடத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. காலநிலை மாற்றங்களால் பொருளாதாரம் சீர்குலைய அனுமதியளிக்க முடியாது. எதிர்வரும் ஜனவரி பெப்ரவரி மாதத்திற்குள் அத்தியாவசிய பொருள்களின் விலை மற்றும் காலநிலை குறித்த விடயங்களை கட்டுக்குள் கொண்டு வர முடியுமென எதிர்பார்க்கின்றோம் – என்றார். (ஐ)

# கூட்டு எதிரணி சு.கவுடன் சேர்வதற்கு வாய்ப்பில்லை

## கூறுகின்றார் மஹிந்த ராஜபக்ஷ




கொழும்பு, டிசெ.10

உள்ளூராட்சித் தேர்தலில் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டு எதிரணி இணைந்து போட்டியிடுவதற்கு வாய்ப்பு இல்லை என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்த்தனவின் மகனின் திருமண நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்துப் பேசியிருந்தபோதிலும், அரசியல் இணைவு பற்றி அவருடன் எந்தப் பேச்சும் நடத்தவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.

நாங்கள் அரசியல் பேசவில்லை. தாம் மற்றொரு திருமணத்தில் பங்கேற்கவேண்டியிருப்பதாக மைத்திரிபால சிறிசேன என்னிடம் கூறினார். நானும் கூட இன்னொரு திருமணத்தில் பங்கேற்க வேண்டியிருப்பதாகக் கூறினேன். என்றும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, பொதுஜன முன்னணியின் தலைவரும், முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், கூட்டு எதிரணி தனித்துப் போட்டியிடும் முடிவு இறுதியானது என்றும், வேட்புமனுக்களை இறுதி செய்வதில் தாம் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரி வித்தார். (ஐ)




# இலங்கை அணியின் போராட்டம்

## ஒரு நாள் தொடரில் எவ்வாறு அமையும்?

ஒருவரின் உண்மையான தோல்வி என்பது, அவர் விருப்பம் கொண்ட விடயத்தில் எந்தவித முயற்சிகளையும் மேற்கொள்ளாமல் இருப்பதே, அந்த வகையில் நடைபெற்று முடிந்திருக்கும் இலங்கை மற்றும் இந்திய அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரின் மூன்றாவது போட்டி தோல்விகளால் துவண்ட இலங்கை அணிக்கு, முயற்சி செய்தால் எவ்வாறான விடயங்களையும் சாதிக்க முடியும் என்பதற்குரிய மனவலிமையைத் தந்துள்ளது.

டெஸ்ட் தரவரிசையில் முதலிடத்தில் இருக்கும் தமது அயல் நாட்டோடு இலங்கை அணி மூன்று போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை 1:0 என பறிகொடுத்திருப்பினும், அத்தொடரில் இளம் இலங்கை வீரர்களின் நேரான அணுகுமுறை இழந்த தங்களது பெருமைகளை மீட்டுக் கொள்ள நீண்டகாலம் எடுக்கப் போவதில்லை என்பதையும் காட்டி நிற்கின்றது.

இதன் அடிப்படையில் மிகவும் பலம் மிக்க இந்தியாவுடன் இலங்கை இன்று தர்மசலாவில் ஆரம்பமாகும் ஒரு நாள் போட்டியோடு மூன்று போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரொன்றில் மீண்டும் மோதுகின்றது.

### வரலாறு

இலங்கை அணி ஒரு நாள் போட்டிகள் விளையாட ஆரம்பித்து நான்கு வருடங்களின் பின்னரே (அதாவது 1979 ஆம் ஆண்டிலேயே) இந்திய அணியுடன் முதலாவது தடவையாக ஒரு நாள் போட்டிகளில் விளையாடியிருந்தது.

அன்று தொடக்கம் இன்று வரை இரண்டு அணிகளும் 155 ஒரு நாள் போட்டிகளில் விளையாடியிருக்கின்றன. இதில் 88 போட்டிகளில் இந்திய அணி தமது ஆதிக்கத்தைக் காட்ட இலங்கை 55 போட்டிகளிலேயே வெற்றி பெற்றிருக்கின்றது. ஒரு போட்டி சமநிலைக்கு வர, 11 போட்டிகள் எந்த முடிவுமின்றி கைவிடப்பட்டிருக்கின்றன. இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரொன்றை இறுதியாக இலங்கை அணி 1997 ஆம் ஆண்டிலேயே கைப்பற்றியிருந்தது. அத்தோடு இதுவரை இந்திய மண்ணில் எந்தவோர் ஒரு நாள் தொடரையும் இலங்கை அணி கைப்பற்றவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக இரண்டு அணிகளும், இலங்கையின் சொந்த மண்ணில் கடந்த ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடரில் மோதியிருந்தன. இந்த ஒரு நாள் தொடரை இந்தியா 5:0 என இலங்கை அணியை 'வைட்வோஷ்' செய்து கைப்பற்றியிருந்தது. எனவே, இறுதியாக இலங்கை அணி அடைந்த தோல்விகளுக்குப் பதில் தர நடைபெறப்போகும் ஒரு நாள் தொடர் இலங்கை அணிக்கு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்று என்பதில் சந்தேகமில்லை.

### இலங்கை அணி

டெஸ்ட், ரி-20 போட்டிகளை ஓர் ஓரத்தில் வைத்தாலும் இந்த ஆண்டு ஒரு நாள் போட்டிகள் இலங்கை அணிக்கு மிகவும் கொடூரமாக அமைந்திருந்தது. 21 ஒரு நாள் போட்டிகளில் தோல்வியைச் சந்தித்திருக்கும் இலங்கை அணி, இவ்வருடத்தில் 4 வெற்றிகளை மாத்திரமே பெற்றிருக்கின்றது.

இதில் இந்தியா, தென்னாபிரிக்கா மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுடன் பெற்ற மூன்று 'வைட்வோஷ்' தொடர் தோல்விகள் அடங்குகின்றன. இறுதியாக தாம் விளையாடிய 12 ஒரு நாள் போட்டிகளிலும் தோல்வியைத் தழுவிய இலங்கை அணி ஒருநாள் தரவரிசையில் தற்போது எட்டாம் இடத்தில் காணப்படுகின்றது. இவ்வாறான கள நிலைவரங்கள் இலங்கை கிரிக்கெட் அணியில் பலமாற்றங்கள் ஏற்பட வழிவகைகள் செய்திருந்தது. அந்தவகையில், இலங்கை அணி இந்தியாவுடனான இந்த ஒரு நாள் தொடரில் புதிய அணித் தலைவரான திசர பெரேராவின் தலைமையின் கீழ் செயற்பட இருப்பது குறிப்பிடத்தக்கது.

சகலதுறை வீரரான பெரேராவுக்கு தலைமைத்துவப் பதவி வழங்கப்பட்டுள்ளதால் இலங்கையின் முன்னாள் தலைவர் உபுல் தரங்கவுக்கு அழுத்தம் எதுவுமின்றி தனது தரப்பின் துடுப்பாட்டத்தை வலுப்படுத்த எதிர்பார்க்க முடியும். இந்த வருடத்தில் இலங்கை சார்பாக 47.77 என்ற சராசரியுடன் அதிக ஓட்டங்கள் (860) குவித்த வீரராகத் தரங்க காணப்படுகின்றார். சனத் ஜயசூரியவின் காலத்தில் இருந்து இலங்கை அணியில் இருக்கும் தரங்க இந்திய அணிக்கு எதிராக அதிக அனுபவம் கொண்ட வீரராகவும் இருக்கின்றார். தரங்க, ஒரு நாள் போட்டிகளில் வாழ்நாளில் பெற்றுக் கொண்ட மொத்த ஓட்டங்களில் 17 சதவீதமானவை இந்தியாவுக்கு எதிராகப் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

எனவே, இலங்கை அணிக்கு இந்த ஒரு நாள் தொடரில் துருப்பு சீட்டு துடுப்பாட்ட வீரர் உபுல் தரங்கவே ஆவார். தரங்க பாகிஸ்தானுடனான ஒரு நாள் தொடரிலும் இலங்கை சார்பாக அதிக ஓட்டங்கள் குவித்த வீரராவார். இலங்கை அணியின் மத்திய வரிசையைப் பலப்படுத்தும் ஆற்றல் கொண்ட வீரர்களான, குசல் ஜனித் பெரேரா மற்றும் அசேல குணரத்ன ஆகியோர் தமது காயங்களிலிருந்து மீண்டு, மீண்டும் குழாமில் உள்வாங்கப்பட்டது மிகவும் மகிழ்ச்சிகரமான செய்தியாகும்.

இவர்களோடு சேர்த்து இலங்கை அணிக்கு மேலும் வலுச்சேர்க்க இரண்டு துடுப்பாட்ட வீரர்கள் காணப்படுகின்றனர். இதில் ஒருவரான அஞ்சலோ மத்தியூஸ் இந்த வருடம் இலங்கை அணிக்காக 52.50 என்ற துடுப்பாட்ட சராசரியுடன் ஓட்டங்கள் சேர்த்திருக்கின்றார். இந்திய அணியுடன் இறுதியாக நடைபெற்று முடிந்த ஒரு நாள் தொடரில் மத்தியூஸ் இலங்கை அணி சார்பாக அதிக ஓட்டங்கள் (192) சேர்த்தது குறிப்பிடத்தக்கது.

மத்தியூஸுடன் சேர்த்து நிரோஷன் டிக்வெல்ல இலங்கை அணிக்கு பெறுமதி சேர்க்க கூடிய மிக முக்கிய வீரராவார். இந்த வருடத்தில் 770 ஓட்டங்களை ஒரு நாள் போட்டிகளில் பெற்றிருக்கும் டிக்வெல்ல, அண்மைய ஒரு நாள் போட்டிகளில் சிறந்த பதிவைக் காட்டாது போயினும் இந்த ஒரு நாள் தொடரில் அதிலிருந்து மீள்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு இலங்கை அணிக்கு இன்னும் ஆரம்ப துடுப்பாட்ட வீரரான தனுஷ்க குணத்திலக்க, லஹிரு திரிமான்ன, பகுதி நேர துடுப்பாட்ட வீரரான திசர பெரேரா ஆகியோர் இருப்பது மேலும் பலம் சேர்ப்பதாகும்.

இலங்கை அணியின் பந்துவீச்சை எடுத்து நோக்கும் போது, அணித் தலைவர் திசர பெரேரா, சுரங்க லக்மால் மற்றும் நுவன் பிரதீப் போன்ற வீரர்களுடன் இணைந்து வேகப்பந்துவீச்சுத்துறையை முன்னெடுக்க எதிர்பார்க்கப்படுகின்றது. மேலதிகமாக மத்தியூஸ் பந்து வீசினால் அது இலங்கைக்கு உதிரி ஆதரவாக அமையும்.

இலங்கை அணி அனுபவம் குறைந்த சுழற்பந்து வீச்சாளர்களுடனேயே இந்திய அணியை எதிர்கொள்கின்றது. எனினும், இந்திய அணியுடன் இலங்கையில் நடைபெற்று முடிந்த ஒரு நாள் தொடரில், மொத்தமாக 9 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய அகில தனஞ்சய, இந்திய அணியை இம்முறையும் மிரட்டுவார் என்பதற்கு ஆதாரமாகக் கொள்ள முடியும்

### இந்திய அணி

ஒரு நாள் போட்டிகள் தரவரிசையில் இரண்டாம் இடத்தில் இருக்கும் இந்திய அணிக்கு 2016 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் இருந்து அவர்கள் பங்குபற்றிய ஏனைய அனைத்து ஒரு நாள் தொடர்களும் (சம்பியன் கிண்ணம் தவிர்ந்த) மிகவும் வெற்றிகரமாகவே அமைந்திருந்தது.

சம்பியன் கிண்ணத் தொடரை அடுத்து இந்திய அணி தாம் பங்குபற்றிய இறுதி நான்கு ஒரு நாள் தொடர்களையும் கைப்பற்றியிருக்கின்றது. இப்படியாக அதி வலுவான நிலையில் காணப்படும் இந்திய அணி, இந்த ஒரு நாள் தொடரிலும், ரி-20 தொடரிலும் அதிக வேலைப்பளு கருதி அணித்தலைவர் விராட் கோஹ்லிக்கு ஓய்வு வழங்கியுள்ளது. இதனால் இந்திய அணியை ரோஹித் சர்மா தலைமை தாங்குகின்றார்.

கோஹ்லி இந்திய அணியில் இல்லாவிட்டாலும், இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசை பலம் குன்றியதாக மாறிவிட்டதாகக் கருதிவிட முடியாது. இலங்கை அணியை இந்தியா சொந்த மண்ணில் வைத்து 5:0 என வைட் வோஷ் செய்த ஒரு நாள் தொடரின் பின்னர் பலமிக்க இரண்டு அணிகளுடனான தொடர்களில் (ஆஸ்திரேலியா மற்றும் நியூஸி லாந்து) விளையாடியிருக்கின்றது.

அந்த இரண்டு தொடர்களையும் இந்தியா கைப்பற்றக் காரணமாக அமைந்த ரோஹித் சர்மா, இலங்கை அணியுடனான ஒரு நாள் தொடரோடு சேர்த்து 772 ஓட்டங்களைக் குவித்துள்ளார். இந்திய அணியின் துடுப்பாட்டத்துக்கு சர்மா முதுகெலும்பு என்பது குறிப்பிடத்தக்கது.

ரோஹித் சர்மாவோடு ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான சிக்கர் தவானும் இலங்கை அணிக்கு அபாயமாக இருக்கக் கூடிய மற்றுமொரு வீரர் ஆவார். இலங்கை அணிக்கு எதிராக 67.91 என்ற ஓட்ட சராசரியை தவான் கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது. மத்திய வரிசையைப் பலப்படுத்த மஹேந்திர சிங் டோனி, ரஹானே, ஹார்திக் பண்டையா, கேதர் ஜாதவ் மற்றும் தினேஷ் கார்த்திக் ஆகிய வீரர்களை இந்திய அணி கொண்டுள்ளது.

வேகப்பந்துவீச்சாளர்களையே பெரிதும் நம்பியிருக்கும் இந்திய அணிக்கு பும்ரா மிகவும் முக்கியமான ஒருவர், இலங்கை அணியுடன் நடைபெற்ற ஒரு நாள் தொடரில் பும்ரா மொத்தமாக 15 விக்கெட்டுகளைக் கைப்பற்றியது குறிப்பிடத்தக்கது. அத்தோடு, பகுதிநேர வேகப்பந்து வீச்சாளரான ஹார்திக் பண்டையா புவனேஸ்வர் குமாருடன் இணைந்து இந்திய அணிக்கு மேலும் பலம் சேர்க்கக் கூடிய ஒருவர் ஆவார். யுஸ்வேந்திர சாஹல், குல்தீப் யாதவ் போன்றவர்கள் இந்திய அணிக்கு சுழல் வீரர்களாக பங்களிப்பு வழங்குவதை எதிர்பார்க்க முடியும்.



முதலாவது ஒரு நாள் போட்டி – டிசெம்பர் 10 – தர்மசலா – முற்பகல் 11.30 மணி
இரண்டாவது ஒரு நாள் போட்டி– டிசெம்பர் 13 – மொஹாலி – முற்பகல் 11.30 மணி
மூன்றாவது ஒரு நாள் போட்டி – டிசெம்பர் 17 – விசாகப்பட்டினம் – பகல் 1.30 மணி

# இலங்கையில் இன்று மனித உரிமை இயக்கங்களின் நிலைதான் என்ன?

**சர்வதேச மனித உரிமைகள் தினம் இன்று (10.12.2017) ஆகும். அதனை முன்னிட்டு இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது.**



இலங்கையில் உள்நாட்டுப் போர் முடிந்த 2009 முதல், போரின்போதும் அதற்கு முன்னரும் நடந்த போர்க் குற்ற மனித உரிமைகள் மீறல் சம்பவங்கள் தொடர்பாக ஏராளமான தகவல்களைச் சர்வதேசச் செயற்பாட்டாளர்கள் பட்டியலிட்டு வருகின்றனர். போரால் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்கள் மறுவாழ்வு பெற முடியாத இப்போதைய இன்னல்களுடன் ஒப்பிடுகையில், மனித உரிமை மீறல் பற்றிய பிரசா ரங்கள் பொருத்தமற்றவை என்ற எண்ணம்கூட ஏற்பட்டுவிடுகிறது.

இலங்கையில் அரசோ, மற்றவர்களோ மனித உரிமைகளை மீறும் செயல் எதிலும் ஈடுபட்டுவிடவில்லை என்பதல்ல இதன் பொருள். இலங்கையில் மட்டுமல்ல, உலகின் பிற பகுதிகளிலும்கூட இலங்கையில் நடந்த கணக்கற்ற மனித உரிமை மீறல் செயல்கள் பற்றிய பதிவுகள் கிடைக்கின்றன. இலங்கையில் ஒரு காலத்தில் மனித உரிமைகள் இயக்கம் மிகுந்த உயிர்ப்புடன் இருந்தது. இப்போது சர்வதேசச் செயற்பாட்டாளர்களின் குறுக்கீடுகள் அதற்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடுமோ என்று ஐயுற நேர்கிறது.

**இவை தான் சாதனைகள்**

இலங்கைப் போர்க்குற்றம் தொடர்பாக சர்வதேச மனித உரிமைகள் அமைப்பு கடந்த 8 ஆண்டுகளாக மேற்கொண்ட முயற்சிகள் உண்மையிலேயே இது வரை சாதித்தவை என்ன? மனித உரிமைகள் குழு அளித்த அறிக்கைகள், அதை எதிர்த்து இலங்கை அரசு அளித்த மறுப்பு அறிக்கைகள், இலங்கை அரசு மற்றும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஆதரவு அமைப்புகள் நடத்திய அறிக்கைப் போர், ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை கவுன்சிலில் நிறைவேற்றப்பட்ட பல தீர்மானங்கள்தான் இதுவரை



நிகழ்த்தப்பட்ட சாதனைகள்!

இந்தப் போர்களால் மனித உரி மைகளும் காக்கப்படவில்லை, மக்களுக்கும் பெரிய நிவாரணம் கிடைத்துவிடவில்லை. உள்நாட்டுப் போரின்போது காணாமற் போன வர்களைக் கண்டுபிடிப்பதில் இலங்கை அரசு மிகமிக மந்தமாகச் செயற்படுகிறது. இராணுவம் கைப்பற்றிய நிலங்களை (காணி) மக்களுக்குத் திரும்ப ஒப்படைப்பதும் அப்படியே; உறவினர்களை இழந்தவர்களும், நிலங்களை இழந்தவர்களும் பொருளாதார ரீதியாக அடைந்துவரும் இன்னல்கள்மீது யாரும் கவனம் செலுத்தவில்லை. பெண்களின் உரிமைகள், மீனவர்கள், தொழிலாளர்கள், ஒடுக்கப்பட்ட சாதியினர், வட பகுதி முஸ்லிம்கள் ஆகியோரின் பிரச்சினைகளை மனித உரிமை ஆர்வலர்கள் யாரும் விரிவாகப் பேசுவதில்லை.

**பாதை விலகிய இயக்கம்**

இலங்கையில் மனித உரிமைகள் இயக்கம் எப்போதும் இப்படி இருந்த தில்லை. அதன் தொடக்க காலத்தில் நன்கு செயற்பட்டது. ஜனதா விமுக்தி பெரமுனவை (ஜேவிபி) 1971 இல் அரசு மூர்க்கத்தனமாக அடக்கியபோது, கைது செய்யப்பட்டவர்கள் சார்பாக மனித உரிமைகள் இயக்கம் வழக்குகளை நடத்தியது. சில ஆண்டுகள் கழித்து 1979 இல் பயங்கரவாதத் தடைச் சட்டம் இயற்றப் பட்டதுடன் நெருக்கடி நிலைமையும் பிரகடனப்படுத்தப்பட்டது.

அப்போது யாழ்ப்பாணத்தில் கணிசமான உறுப்பினர்களைக் கொண்டிருந்த இனங்களுக்கிடையில் சமத்துவம் சமூக நீதிக்கான இயக்கம் என்ற அமைப்பு தமிழ் இளைஞர்களுக்கு எதிரான ஒடுக்குமுறைகளை எதிர்த்துப் போராடியது.

ஆயுதம் ஏந்திய தமிழர் அமைப்புகளுக்கும் அரசுக்கும் மோதல் ஏற்பட்ட தொடக்க காலம் அது. ஜே.ஆர். ஜெயவர்த்தன அதிபராக இருந்தபோது 1980 இல் சில தொழிற்சங்கங்கள் பொது வேலை நிறுத்தத்துக்கு அழைப்பு விடுத்தன. அந்த வேலை நிறுத்தத்தை ஜெயவர்த்தன அரசு கடுமையாக ஒடுக்கியது. ஜனநாயகத்தின் மீதான சர்வாதிகாரத்தாக்குதல்களை எதிர்க்க ஜனநாயக உரிமைகளுக்கான இயக்கம் தொடங்கப்பட்டது.

1980 களின் பிற்பகுதியில் தமிழ்ப் போராளிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையே ஆயுதப் போர் நடந்தபோது, மனித உரிமைகளுக்கான பல்கலைக் கழக ஆசிரியர்கள் (யாழ்ப்பாணம்) சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இலங்கை அரசு, ஆயுதமேந்திய தமிழர் இயக்கங்கள், இந்திய அமைதி காப்புப் படை என்ற மூன்று தரப்பினரின் செயற்பாடுகளையும் அந்தச் சங்கம் கண்காணித்தது. தமிழ்ச் சமூகத்தைப் பாதித்த மோசமான அரசியல் நடவடிக்கைகளையும் அந்தச் சங்கம் ஆராய்ந்தது.

இந்த அமைப்புகள் அரசின் நடவடிக்கைகளைக் கண்காணித்து, மக்களுக்கு ஏற்படவிருந்த பாதிப்புகளைக் குறைக்க முற்பட்டன. தங்களுடைய பணிகளுக்கு ஆதரவாக மக்களைத் திரட்டின. இந்த இயக்கத்தின் தன்னார்வச் செயல்பாட்டாளர்களை இலங்கை அரசும், விடுதலைப் புலிகள் இயக்கமும் வெவ்வேறு காரணங்களுக்காக ஒடுக்க முற்பட்டன.



## புதிய அரசியல் சிந்தனை அவசியம்

இதனால் இந்த அமைப்புகள் செயற்படுவதற்கான ஜனநாயகத் தளம் குறுகியது. அரசுக்கும் போராளிகளுக்கும் இடையிலான போர், உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்தது.

கொழும்பிலிருந்த தன்னார்வத் தொண்டு நிறுவனங்களுக்குக் கொடைகள் அதிகம் கிடைக்கத் தொடங்கின. இதையடுத்தே, இலங்கையில் மனித உரிமைகள் மீறப்படுவதைத் தடுக்கக் கோரியும் மோதல்களை நிறுத்தக் கோரியும் சர்வதேச அரங்குகளில் முறையிடும் வழக்கம் தொடங்கியது.

கடந்த பத்தாண்டுகளில் பேரழிவை ஏற்படுத்திய போரும், மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சியும் முடிவுக்கு வந்தன. போர்க் குற்றங்கள் தொடர்பாக விசாரணை வேண்டும் என்ற மனித உரிமைகள் சார்ந்த கோரிக்கை, மேற்கத்திய நாடுகளின் நலன் சார்ந்து சற்றே பாதை விலகியது. இந்த விவகாரத்தைச் சர்வதேச அரங்குக்குக் கொண்டுசெல்வதில்தான் சர்வதேச மனித உரிமைகள் சமூகம், தேசிய தன்னார்வத் தொண்டர்கள், தமிழ் தேசிய ஆதரவாளர்கள் அக்கறை காட்டினர்.. போருக்குப் பிறகு இரு இனங்களுக்கு இடையே ஒற்றுமை ஏற்படக் கூடிய அரசியல் களத்தின் மீது யாரும் அக்கறை காட்டவேயில்லை.

**இப்போதைய தேவை**

இடதுசாரிக் கண்ணோட்டத்தில் செயல்பட்ட முந்தைய மனித உரிமைகள் இயக்கம் சர்வதேச ஒற்றுமைக்கு மதிப்புக் கொடுத்தது. பாலஸ்தீனத்தில் நடந்த மனித உரிமை மீறல்களைக் கண்டித்தது . இஸ்ரேலை மட்டுமல்ல, அதற்குத் துணை நின்ற ஏகாதிபத்தியத்தையும் சேர்த்தே கண்டித்தது. இப்போதைய பிரசாரங்கள் மேற்கத்திய கொடையாளர்களின் நன்கொடைகளை நம்பி நடப்பவை. விடுதலைப் புலிகளின் போர்க் குற்றங்கள் குறித்துக் கண்டனம் ஏதும் தெரிவிக்காமல் இலங்கை அரசின் போர்க் குற்றம் பற்றி மட்டும் விசாரிக்கக் கோரும் தமிழ்த் தேசியவாதிகளைக் கூச்சமின்றி சேர்த்துக் கொள்கின்றனர் இப்போதைய மனித உரிமைச் செயற்பாட்டாளர்கள். மனித உரிமைக் கோரிக்கைகளும் தமிழ்த் தேசிய பிரசாரங்களும் ஒரு புள்ளியில் இணையும்போது, சிங்கள பௌத்த பேரினவாத தேசியவாதிகளின் கோபத்துக்கு நெய் வார்ப்பதைப் போலாகிறது.

இலங்கை இப்போது வரலாற்றுப் பிரச்சினையில் மூழ்கியிருக்கிறது. அது அடக்குமுறையைக் கையாளும் ராணுவமயமாக இருக்கலாம், சிங்களப் பேரின நலனைக் காக்கும் அமைப்புகளாக இருக்கலாம், கொழும்பு நகரிலேயே நாட்டின் எல்லா அதிகாரங்களும் குவிக்கப்படுகின்றன எனவும் இருக்கலாம். அரசைச் சீர்திருத்த வேண்டும் என்றால், அந் நாட்டு மக்களால்தான் அது மேற்கொள்ளப்பட வேண்டுமே தவிர, சர்வதேச அரங்குகளால் அல்ல. அதற்கு அனைத்துத் தரப்பினரையும் அரவணைத்துச் செல்லும் அரசியல் இயக்கம் தேவை. ராஜபக்ஷ அரசைத் தூக்கி எறிவதில் இலங்கையின் எல்லா சமூகங்களும் கை கோத்ததைப் போலச் செயற்பட வேண்டும்.

மனித உரிமை மீறல்களுக்காக சர்வதேச அரங்கில் இலங்கையை அம்பலப்படுத்துவதன் மூலம், உள்நாட்டுக்குள் அரசு மீதான நம்பகத்தன்மை போய்விடும். அதன் பிறகு மனித உரிமைகள் இயக்கத்துக்குக்கூடப் புத்துணர்ச்சி அளிக்க முடியாமல் போகும். பரந்துபட்ட சமூக நீதிக்கான இயக்கம்தான் இப்போதைய தேவை. போருக்குப் பிறகு இலங்கை சந்தித்துவரும் பல்வேறு சவால்களைச் சமாளிக்க புதிய அரசியல் சிந்தனையும் முற்போக்கு இயக்கங்களின் நட்புறவும்தான் அவசியம். ★



# இந்த வாரம் உங்களுக்கு எப்படி?

**10.12.2017 16.12.2017**

**சந்திராஷ்டம நாள் -** உத்தராடம் 2 ஆம், 3ஆம், 4ஆம் பாதம், திருவோணம், அவிட்டம் 1 ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் இன்று நற் கருமங்களைத் தொடங்குவதை தவிர்க்க வேண்டும்.

**கணிப்பு:** 'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா (ஜே.பி.)

*2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம், கார்த்திகைத் திங்கள் 25 ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை அஷ்டமித் திதி இரவு 1.12 வரை. பின்னர் நவமி நட்சத்திரம் மாலை 5.35 வரை. பின்னர் உத்தரம், சித்தாமித்த யோகம் முழுவதும்.*

**ராகுகாலம்** - *மாலை 4.23 மணிமுதல் 5.49 மணிவரை*

**சுபநேரம்** - *காலை 9.22 மணிமுதல் 10.52 மணிவரை*

**திவசம் செய்ய வேண்டிய திதி**- *கார்த்திகை மாத தேய்பிறை அஷ்டமி*

**பிறந்தநட்சத்திர வழிபாடு**- *பூரம்*



## மேஷம்:

மேடராசியினருக்கு நன்மையான வாரம். பொருளாதாரம் வளமாக இருக்கும். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். பணிபுரியும் இடத்தில் இருந்த சங்கடம் நீங்கும்.

பெண்களின் வளர்ச்சிக்கு அரசு மூலம் சிறப்பு பயிற்சியும், வங்கி மூலம் கடன் தொகையும் கிடைக்கும். சகோதர வழியால் நன்மை உண்டாகும். வியாபாரத்தில் விளையாட்டுப் பொருள்களுக்கு ஆதாயம் கிடைக்கும். சிலருக்குத் தொலைதூரப் பயணங்களால் நன்மைகள் உண்டாகும்.



## ரிஷபம்:

ரிஷப ராசியினருக்கு யோசனையான வாரம். பணவரவு குறையும். குடும்பத்தில் பிரச்சினைகள் உண்டாகும். செய்யும் தொழிலில் இடையூறுகள் உண்டாகும். வியாபாரத்தில் போட்டிகள் அதிகரிக்கும். உத்தியோகத்தில் வேலைச் சுமை அதிகரிக்கும். அடுத்தவரின் வேலையையும் சேர்த்துப் பார்க்க வேண்டி வரும். பெண்களின் திருமணப் பேச்சுகள் குழம்பிப் போகும். உடல் நலத்தில் கவனம் தேவை. சுய தொழிலில் பல இடைஞ்சல்கள் உண்டாகும்.



## மிதுனம்:

மிதுனராசியினருக்கு சம பலன்கள் உள்ள வாரம். பொருள் வரவு சுமாராக இருக்கும். எண்ணிய கருமங்கள் தடை, தாமதமாகும். குடும்பத்தில் ஓரளவு அமைதி காணப்படும். வியாபாரத்தில் சுமாரான இலாபம் கிடைக்கும். தொழிலில் கடுமையான உழைப்பும், அலைச்சலும் அதிகமாகும்.

எந்தக் காரியம் செய்தாலும் சுமையாகவும் பாதியில் விட்டு விடுவதும் உண்டாகும். பழைய வாகனத்தைப் புதுப்பித்தல், வீட்டு மராமத்து வேலைகள் செய்தல் என்பனவற்றிற்கு பணச்செலவுகள் உண்டாகும்.



## கடகம்:

கடக ராசியினருக்கு இன்பமான வாரம். பணவரவு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வாடிக்கையாளர்களைக் கவர்வதற்குப் புதிய யுத்திகளைக் கையாள்வார்கள். புதிய முயற்சி நல்ல வரவேற்பைத் தரும். செய்யும் தொழிலில் சுய முயற்சியால் நன்மை அடைவீர்கள். விட்டுப்பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டாகும். வெளிநாட்டுத் தொடர்புகள் ஆதாயம் தரும். உத்தியோகத்தில் எதிர்பாராத விதத்தில் உயர்வுகள் கிடைக்கும்.



## சிம்மம்:

சிம்ம ராசியினருக்கு மேன்மையான வாரம். பொருளாதாரம் ஏற்றம் அடையும். குடும்பத்தில் அமைதியான வாழ்க்கையால் உயர்வு கிடைக்கும்.

சகோதர வழியில் நன்மைகள் உண்டாகும். செய்யும் தொழிலில் உயர்வும், பாராட்டுக்களும் குவியும். சமூக அந்தஸ்து உயரும். வியாபாரம் செழிப்படையும். பிள்ளைகளால் பெருமையும் மகிழ்ச்சியும் உண்டாகும். குடும்பப் பெண்கள் குடும்பத்தை செவ்வனே நடத்தி நற்பெயரைப் பெறுவார்கள்.



## கன்னி:

கன்னிராசியினருக்கு உயர்வான வாரம். பொருளாதாரம் உயர்வடையும். குடும்பத்தில் நல்லுறவு காணப் படும். சுய தொழில் நன்றாக இருக்கும். மாணவர்களுக்குச் சிறந்த மாணவருக்கான விருது கிடைக்கும். பெண்களின் திருமணத் தடை நீங்கும். சகோதர உறவு வலுவானதாக இருக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் வாய்ப்பு உண்டாகும். அரசாங்கக் காரியம் அனுகூலமாகும். வியாபாரம் நன்கு முன்னேற்றம் அடையும். கலைஞர்களுக்கு அரச வழியில் பரிசுகள், பாராட்டுக்கள், புதிய தொழில் வாய்ப்புக் கிடைக்கும்.



## துலாம்:

துலாம் ராசியினருக்கு சலனம் மிகுந்த வாரம். மனதில் ஒருவிதமான கவலை உண்டாகும். பணம் பற்றாக் குறையாக இருக்கும். குடும்பத்தில் சிறு சிறு பிரச்சினைகள் உண்டாகும். பொறுமை தேவை.

உறவினர்கள் பாராமுகமாக நடந்து கொள்வார்கள். காணி சம்பந்தமான பிரச்சினைகள் உண்டாகும். வழக்குகள் தாமதமாகும். வியாபாரத்தில் பெரும் நட்டமுண்டாகும். விவசாயத்தில் ஆதாயம் குறையும். கொடுக்கல், வாங்கலில் பிணக்குகள் உண்டாகும். மாணவர்களுக்குக் கல்வி ஊக்கம் குறையும்.



## விருச்சிகம்:

விருச்சிக ராசியினருக்கு இனிமையான வாரம். பணப் புழக்கம் திருப்தியைத் தரும். வெளிநாட்டு ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகத்தில் வருமானம் பெருகும். உறவினர் வரவால் களிப்பும், கலகலப்பும் நிறைந்திருக்கும். வியாபாரம் ஓஹோ என்று நடக்கும். ஆடை, ஆபரணங்கள் சேரும். பெண்களுக்கு விரும்பிய படி மணவாழ்க்கை அமையும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்பும் அதிகரிக்கும். மாணவர்கள் ஆசிரியர்களின் உதவியால் கல்வியில் தேர்ச்சி பெறுவார்கள். கலைஞர்களுக்குப் பேர், புகழ் அதிகரிக்கும்.



## தனுசு:


தனுசு ராசியினருக்கு மத்திமமான வாரம். பணவரவு சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். அரசாங்கக் காரியங்களில் தடையும், தொழிலில் மந்த நிலையும் உண்டாகும். சிலருக்குப் பணப் பிரச்சினைகளால் மன அமைதி கெடும். பணி புரியும் இடங்களில் செல்வாக்குச் சரியும். பணியில் கவனமுடன் இருப்பது நல்லது. கடன் தொல்லைகள் அதிகரித்து கவலையைத் தரும். தேவையற்ற வம்புகளால் அவதிப்பட நேரும். நண்பர்கள், உறவினர்களின் உதவிகள் குறையும்.



## மகரம்:

மகர ராசியினருக்கு கீர்த்தியான வாரம். பணபலம் அதிகரிக்கும். நேர்மையையும், தன்னம்பிக்கையையும் மேலதிகாரிகள் பாராட்டுவார்கள். பெண்களின் முயற்சிகள் வளர்ச்சியைத் தரும். மாணவர்களுக்குத் தடைப்பட்ட கல்வி நிலை மாறி, விரும்பிய கல்வி பயில வாய்ப்புக்கள் அமையும்.

வெளிநாட்டுத் தொடர்புகள் நல்ல பலனைத் தரும். சகோதர உறவு பலப்படும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் இணைவார்கள். கொடுக்கல், வாங்கலில் சுமுகநிலை உண்டாகும்.



## கும்பம்:

கும்ப ராசியினருக்கு கவலையான வாரம். பணத் தட்டுப்பாடு உண்டாகும். குடும்பத்தில் தகராறுகள் உண்டாகும். பிள்ளைகளால் தொல்லையும், செலவுகளும் உண்டாகும். எடுக்கும் முயற்சிகள் தோல்வி அடையும். நண்பர்களுடன் வீண் சச்சரவுகள் உண்டாகும். திருமண காரியங்கள் இழுபறி நிலையில் இருக்கும். வீட்டில் பெறுமதியான பொருள்கள் களவு போகும். கவனம் தேவை. உத்தியோகத்தர்களுக்குப் பொறுப்புக்கள் அதிகரிக்கும்.



## மீனம்:

மீனராசியினருக்கு சம பலன்கள் உள்ள வாரம். பொருளாதாரம் சுமாராக இருக்கும். செலவுகள் அளவுக்கதிகமாகும். வீண் அலைச்சல்களால் உடலும், மனமும் சோர்வடையும். வியாபாரத்தில் ஏற்றமும் இறக்கமுமாக வருமானம் இருக்கும். தொழிலாளர்கள் கடும் முயற்சியால் வேலை வாய்ப்புக்கள் பெறுவார்கள்.

பெண்களின் சுய தொழில் ஆதாயம் குறையும். சகோதர வழியால் நன்மைகள் உண்டாகும். இதுவரை பிரிந்திருந்தவர்கள் மீண்டும் இணைவார்கள். கொடுக்கல், வாங்கலில் சுமுகநிலை உண்டாகும்.



# சிறிலங்காவில் சீனாவின் செல்வாக்கு

## முறியடிக்கும் முயற்சியில் இந்தியா, அமெரிக்கா!

**ஆங்கிலத்தில் -Pankaj Yadav**
**வழிமூலம் - Ceylon today**
**மொழியாக்கம் - நித்தியபாரதி**

சிறிலங்கா உட்பட பத்து கரையோர நாடுகளுடன் இந்தியா தனது கடல்சார் புலனாய்வு தகவல்களைப் பகிர்ந்துகொள்ளவுள்ளதாக நவம்பர் முதலாம் திகதி இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் சுனில் லன்பா அறிவித்திருந்தார். இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் நிர்மலா சீதாராமனால் ஆரம்பித்து வைக்கப்பட்ட கோவா கடல்சார் கருத்தரங்கிலேயே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டது.

இந்தியாவின் இந்த அறிவிப்பு இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கை முறியடிப்பதை நோக்காகக் கொண்டதாக ஊடகங்கள் அறிக்கை வெளியிட்டன. இந்திய மாக்கடலில் சீனாவின் கப்பல்கள் நடமாடுகின்றமை இந்தியாவின் பாதுகாப்பிற்கும் இராஜதந்திர நலன்களுக்கும் அச்சுறுத்தலாகக் கருதப்படுகிறது.

சீனாவால் தயாரிக்கப்பட்ட கடன் பொறியிலிருந்து சிறிலங்காவை மீட்டெடுப்பதற்கு இந்தியாவும் அமெரிக்காவும் முயற்சிக்கின்றன என ரைம்ஸ் ஒப் இந்தியா ஊடகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன நீர்மூழ்கிக் கப்பல்கள் இந்தியாவின் நலன்களுக்கு எதிராக தென் மத்திய இந்திய மாக்கடலைத் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவதற்காக இந்திய மாக்கடலில் தமது செல்வாக்கை விரிவுபடுத்தவிரும்புகின்றன என'ரைம்ஸ் ஒப் இந்தியா' ஊடகத்தில் வெளிவந்த பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



### அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கு

இந்தியா தனது கடல்சார் தகவல்களை கரையோர நாடுகளுடன் பகிர்ந்து கொள்வது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள தீர்மானம் இந்திய மாக்கடலில் அதிகரித்து வரும் சீனாவின் செல்வாக்கை முறியடிப்பதற்கான நோக்கைக் கொண்டுள்ளதாக இந்தியாவின் முதன்மை ஊடகமான ரைம்ஸ் ஒப் இந்தியாவில் குறிப்பிடப்பட்டதானது இந்தியாவின் கருத்தை வெளிப்படுத்தி நிற்கிறது.

ஆனால், இந்தியாவிலுள்ள வல்லுநர்களின் கருத்துக்கள் வேறுபட்டனவாகவும் உள்ளன. அதாவது, சிறிலங்காவானது சுயாதீனமான பொருளாதாரக் கோட்பாட்டைக் கொண்டுள்ள ஒரு நாடாக உள்ளதாகவும் போரின் பின்னரான இக்காலப்பகுதியில் சிறிலங்காவில் பல்வேறு கட்டுமான அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட வேண்டிய தேவையுள்ளதால் சிறிலங்கா, சீனாவின் உதவியை நாடியுள்ளதாகவும் வல்லுநர்கள் கருதுகின்றனர்.

போருக்குப்பின்னர் சிறிலங்கா தனது கட்டுமான அபிவிருத்தியை மேற்கொள்வதற்குப் பல நாடுகளின் உதவியைப் பெறுவதால் இந்தியா, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா போன்ற அதிகாரத்துவ நாடுகளின் மத்தியில் சமவலுவைப் பேணுவதில் இடர்களை எதிர்கொள்ளும்.

ஆகவே, மாறி மாறி ஆட்சிக்கு வரும் சிறிலங்கா அரசுகள் சீனாவுடன் நட்புறவைப் பேணுகின்றனவா அல்லது இல்லையா என்பதை இந்தியா கவனத்திற் கொள்ளாது ராஜபக்ஷ ஆட்சியுடன் மேற்கொண்டது போன்று சுயாதீன பூகோள மூலோபாயக் கோட்பாட்டை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இதன்மூலம் சிறிலங்காவுடனும் ஏனைய அயல்நாடுகளுடனும் இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவதற்கு அந்த நாடுகளின் உள்விவகாரங்களில் பிராந்திய அதிகாரத்துவ நாடுகள் தொடர்பைப் பேணுகின்றனவா என்பது இந்தியாவிற்குப் பிரச்சினையாக அமையாது எனக் கண்காணிப்பு ஆய்வு நிறுவகத்தின் சென்னைக் கிளைக்கான இயக்குநரும் மூத்த அதிகாரியுமான என்.சத்திய மூர்த்தி தெரிவித்தார்.

தாம் செல்வாக்குச்செலுத்த விரும்பும் வேற்றுப் பிராந்திய அதிகாரத்துவ நாடுகள் தமது சொந்த பூகோள மூலோபாய நலன்களைச் சிறிய நாடுகளில் கூட செலுத்த முடியாவிட்டால் அவை இந்த நாடுகள் மீதான தமது ஆர்வத்தை இழப்பதுடன் இப்பிராந்தியத்தை விட்டு வெளியேறி தமது பாரம்பரிய பிராந்தியங்களுக்குத் திரும்பிச் சென்றுவிடும் நிலை உருவாகும் என இயக்குநர் சத்தியமூர்த்தி மேலும் குறிப்பிட்டார்.

### இந்தியாவின் ஒத்துழைப்பு

சிறிலங்காவுடனான இந்தியாவின் கரையோர ஒத்துழைப்பு புதியதல்ல எனவும் இந்தியா ஏற்கனவே சிறிலங்காவிற்கு கரையோர கண்காணிப்பு படகுகள் இரண்டை வழங்குவதாக உறுதியளித்ததாகவும் இதில் ஒரு படகு கடந்த செப்ரெம்பரில் வழங்கப்பட்டதாகவும் மற்றையது அடுத்த ஆண்டு வழங்கப்படும் எனவும் இந்தியப் பாதுகாப்பு அமைச்சின் உத்தியோகபூர்வ பேச்சாளர் தெரிவித்திருந்தார்.

இதேபோன்ற கரையோர கண்காணிப்புப் படகுகள் 2006 மற்றும் 2008 இல் சிறிலங்காவிற்கு வழங்கப்பட்டன. இந்திய மாக்கடலில் உள்ள சிசெல்ஸ், மாலைதீவு, மொரிஷியஸ் போன்ற நாடுகளுக்கு இந்தியாவால் கப்பல்கள், கண்காணிப்புப் படகுகள், குறுக்கீட்டுப் படகுகள் போன்றன வழங்கப்படுகின்றமையுடன், இந்த நாடுகளின் திறன் மேம்படுத்தலுக்கும் இந்தியா உதவுகின்றது. இது இந்திய இராஜதந்திரத்தின் மிக முக்கிய கூறாகும்.

### இந்தியா - சிறிலங்கா இராணுவ நெருக்கம்

இவை தவிர, இந்தியா தனது அயலிலுள்ள தீவுகளுக்கு அவற்றின் கரையோரக் கண்காணிப்பு வலைப்பின்னலை உரு வாக்குவதற்கும் உதவுகின்றது. ஒவ்வொரு ஆண்டும் சிறிலங்கா கடற்படையைச் சேர்ந்த 450 வீரர்களுக்கு இந்தியா பல்வேறு கடல்சார் பயிற்சிகளை வழங்குகின்றது.

இந்திய மற்றும் சிறிலங்கா இராணுவத்தினர் நீண்டகாலமாக மிக நெருக்கமான நல்லுறவைப் பேணிவருகின்றனர். இவர்கள் பல்வேறு மட்டங்களிலும் தமக்கிடையே இராணுவப் பயிற்சிகளைப் பரிமாறிக் கொள்கின்றனர். இதுமட்டுமல்லாது, இராணுவத் தகவல்களும் இவ்விரு நாடுகளுக்கும் இடையில் தொடர்ந்தும் பரிமாறப்படுகின்றன.



சில சந்தர்ப்பங்களில் இத்தகவல்கள் சிறிலங்கா இராணுவத்தினர், தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுதக் கப்பல்களை வெற்றிகரமாகக் கடலில் தடுத்து நிறுத்துவதற்கும் உதவியுள்ளன.

ஆபத்து விளைவிக்காத ஆயுதங்களை சிறிலங்கா கொள்வனவு செய்வதற்கு 10 கோடி டொலரை கடனாக வழங்குவதென இந்தியா தீர்மானித்துள்ளது. கடந்த 18 ஆண்டுகளில், இந்தியாவால் சிறிலங்காவிற்கு L-70 விமான எதிர்ப்பு ஆயுதங்கள் 24, USFM கண்காணிப்புக் கருவிகள் 11, நிலக்கண்ணிவெடி பாதுகாப்பு வாகனம் 10, போர்க்களக் கண்காணிப்பு ரேடர்கள் 24 போன்றன வழங்கப்பட்டுள்ளன.

### மோடியின் வருகை

அரசியல் ரீதியாகக் கூட சிறிலங்காவும் இந்தியாவும் மிக நெருக்கமாக உள்ளன. கடந்த மே மாதம் இந்தியப் பிரதமர் மோடி, சிறிலங்காவிற்கு உத்தியோகபூர்வ பயணம் செய்தமை சிறிலங்கா மற்றும் இந்திய ஊடகங்களால் முதன்மைப் படுத்தப்பட்டன.

ஏனெனில், இந்தியப் பிரதமர் ஒருவர் 28 ஆண்டுகளின் பின்னர் முதன் முதலாக சிறிலங்காவிற்குப் பயணம் செய்த முதலாவது அரசமுறைப் பயணமாக பிரதமர் நரேந்திர மோடியின் பயணம் அமைந்திருந்தது.

(18 ஆம் பக்கம் பார்க்க...)






தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா

**பிரிட்டிஷ் இந்தியாவின் காலனித்துவப் பெரும் பிரபுக்கள் வருமான வரியை அறிமுகப்படுத்திய வருடமான 1922 இல் இருந்து தொடங்கிய வரித் தரவுகளைப் பயன்படுத்தி, சான் செல்லும், பிக்கெட்டியும் கடந்த நூற்றாண்டில் ஒருபோதும் இல்லாத அளவை விடத் தற்போது வருமான சமத்துவமின்மை அதிமாக இருக்கிறது எனக் காட்டுகின்றனர்.**

வருவாய் ஈட்டுபவர்களில் உச்சத்தில் உள்ள ஒரு சதவீதத்தினர் ஒட்டு





மொத்த வருமானத்தில் 23 சதவீதத்தைக் கைப்பற்றி விடுகின்றனர். இது 1980 களின் தொடக்கத்தில் இருந்து அவர்கள் ஈட்டிவரும் வருமானப் பங்கீட்டை விடக் கிட்டத்தட்ட நான்கு மடங்காகும். மேலும், உச்சத்திலுள்ள 10 சதவீதத்தினர் ஒட்டு மொத்த வருமானத்தில் சரிபாதிக்கு மேல், அதாவது, 55 சதவீதத்தைக் கைப்பற்றி விடுகின்றனர்.

இதற்கிடையில், 705 அமெரிக்க டொலர் (US $705) மதிப்பிலான சராசரி வருடாந்த வருவாயில் தங்களது வாழ்க்கைக்கு வகை தேடும் ஏழ்மை நிலையிலுள்ள 50 சதவீத இந்தியர்கள் வெறும் 15 சதவீத வருவாய் பங்கீட்டுடன் வாழவேண்டி உள்ளது.

**இந்த ஆசிரியர்களால் பகுப்பாய்வு செய்யப்பட்ட இந்த வருவாய்த் தரவு, 2014 ஆம் ஆண்டில் இருந்த மொத்த மக்கள் தொகையான 1.26 பில்லியனில் கிட்டத்தட்ட 780 மில்லியன் பேரை உள்ளடக்கியது. இது இந்திய வயதுவந்தோராக வரையறுக்கப்பட்ட 20 மற்றும் அதற்கு மேற்பட்ட வயதினரை உள்ளடக்குகிறது. உலகிலேயே மிகஅதிக எண்ணிக்கையாக, 5 முதல் 14 வயதுக்கு இடைப்பட்ட குழந்தைத் தொழிலாளர்கள் இந்தியாவில் இருக்கின்றமை கவனிக்கப்பட வேண்டும்.**


அறிக்கையின் படி, காங்கிரஸ் கட்சி பிரதர் ராஜீவ் காந்தி ‘சுதந்திர சந்தை’ மற்றும் ‘முதலீட்டாளர் - சினேகமான’ கொள்கைகளுக்கு ஒரு திருப்பத்தை 1980 களின் பிற்பகுதியில் தொடக்கி வைத்தபோது, இந்தியாவின் ‘வளர்ச்சிக் கதை’ பற்றிய குணாம்சத்தை வரையறுப்பதாக அதிகரித்துவரும் சமத்துவமின்மை இருந்து வருகிறது.

ஆனால், 1991 ஆம் ஆண்டுக்குப் பின்னர், 1947 இல் சுதந்திரம் அடைந்ததில் இருந்து இந்திய முதலாளித்துவம் பின்பற்றி வந்த அரசு தலைமையிலான பொருளாதார அபிவிருத்தி மூலோபாயத்தை, பி.வி.நரசிம்மராவின் காங்கிரஸ் அரசு வெளிப்படையாகவே முறித்துக் கொண்டதோடு, உலகளாவிய மூலதனத்துக்கான ஒரு மலிவு உழைப்புப் புகலிடமாக இந்தியாவை மாற்றுவதை நோக்கமாகக் கொண்ட ‘புதிய பொருளாதாரக் கொள்கையை’ ஏற்றுக்கொண்ட நிலையில் தான், அந்த வருமான சமத்துவமின்மை உண்மையிலேயே அதிகரித்தது.

இந்திய வருமானப் பகிர்வின் மிகப்பெரிய ஏற்றத்தாழ்வை முந்தைய அட்டவணையை விட வேறெதுவும் பளிச்சென்று விளக்கவில்லை. 2014 ஆம் ஆண்டில் கணக்கிடப்பட்ட நாட்டின் வயதுவந்தோர் மக்கள்தொகையின் பல்வேறு பிரிவுகளுக்குச் சராசரி வருடாந்த வருவாயை இது வழங்குகிறது.

**இந்தியாவில் உச்சத்தில் உள்ள 0.1 சதவிகிதத்தினர் (சுமார் 778 ஆயிரம் பேர்) 200 ஆயிரம் டொலருக்கு சற்றுக் குறைவான தொகையை சராசரி வருவாயாகக் கொண்டுள்ளனர். அவர்களிலும் செல்வந்தர்களாக இருக்கும் 0.001 சதவீதத்தினர் (சுமார் 7 ஆயிரத்து 780 பேர்) வருடத்துக்கு 4.3 மில்லியன் டொலர் தொகையை சராசரியாக ஈட்டுகின்றனர். கீழ்மட்டத்தில் உள்ள 90 சதவீதம் பேர், கடும் வறுமையில் உயிர்வாழ்வதற்கே போராடி வருகின்றனர். அதாவது, அதிகபட்ச வருமானம் ஈட்டும் 50 - 90 சதவீதத்துக்கு இடைப்பட்ட மக்களில், ‘நடுத்தர 40 சதவிகிதத்தினர்’ என்றழைக்கப்படுபவர்களில் கூட சராசரி வருமானம் வெறும் $1400 ஆக இருக்கிறது.**

உச்ச 10 சதவிகிதத்துக்குள் வரும் மக்களின் (சுமார் 77.8 மில்லியன் பேர்) வருடாந்த வருமானம் கூட 12 ஆயிரத்து 500 டொலருக்கும் குறைவாகவே உள்ளது. பெரும்பான்மையை கருத்தில் கொள்ளும்போது, வாழ்க்கை சூழ்நிலையில் சாதாரண இந்தியத் தொழிலாளர்கள் மற்றும் உழைப்பாளிகளை விட மிக உயர்ந்தவர்களாக இருந்தாலும் செல்வ வளத்துக்கு மிகவும் அப்பாற்பட்டு உள்ளனர். ஏதேனுமொரு குடும்ப பேரிடர் (வேலை இழப்பு அல்லது நோய்வாய்ப்படுதல்) அவர்களை விரைவிலேயே வறுமையில் வீழ்த்திவிடக் கூடும்.



சராசரி ஆண்டு வருமான பகிர்வு 2014

முதல் வரைபடம் வரைவதற்கு ஆதாரமாக இருந்த தரவுகளின் கூடுதல் விவரங்களைப் பின்வரும் அட்டவணை வழங்குகிறது.

| Income Group | Number of Adults | Income Threshold | Average income Indian Rupees | Comparison to average (ratio) |
|---|---|---|---|---|
| Average | 778,380,224 | - | INR 142,550 | 1 |
| Bottom 50% | 389,190,112 | - | INR 43,734 | 0.3 |
| Middle 40% | 311,352,088 | 63,419 | INR 86,841 | 0.6 |
| Top 10% | 77,838,024 | 191,713 | INR 772,621 | 5 |
| incl. Top 1% | 7,783,802 | 1,226,689 | INR 3,093,335 | 22 |
| incl. Top 0.1% | 778,380 | 4,303,757 | INR 12,287,814 | 86 |
| incl Top 0.01% | 77,838 | 17,042,120 | INR 54,596,666 | 383 |
| incl. Top 0.001% | 7,784 | 70,223,784 | INR 266,561,728 | 1870 |

இந்த அட்டவணையால் பல விடயங்கள் வெளிப்படுகின்றன. வருடாந்த வருமானத்தில் உச்ச 10 சதவீதத்தினருக்குள் வரும் குறைந்த வருமானத் தொடக்கநிலையில் உள்ளவர்களின் வருமானம் வெறும் 191 ஆயிரத்து 713 ரூபாயாக மட்டுமே உள்ளது. 2014 இல் இது 3 ஆயிரத்து 100 அமெரிக்க டொலராக இருந்தது. அடிமட்டத்தில் இருக்கும் 50 சதவீதத்துக்கு மிகக்குறைந்த தொடக்கநிலையில் வருமானமே கிடையாது. மேலும் அவர்களது உயர்ந்தபட்ச வருமானம் சுமார் 63 ஆயிரம் ரூபாவாக உள்ளது. அதாவது, பூஜ்ஜியம் முதல் கிட்டத்தட்ட ஆயிரம் டொலர் வரையிலான வருமான மட்டத்தில் அடிமட்டத்திலுள்ள 50 சதவீத மக்கள் ஜீவிக்கின்றனர் என்பதாகும்.

அடுத்த 40 சதவிகிதத்தினருக்கான வருமான அளவீடுகள் அமெரிக்க டொலரில் வருடத்துக்கு ஆயிரம் டொலரில் இருந்து 3 ஆயிரத்து 100 டொலர் மட்டத்தில் உள்ளது.

**இதனால், 90 முதல் 95 வீதம் வரையிலான வயதுவந்த தொழிலாளர்களின் நிலைமையை, வறுமையின் சமநிலையற்ற பிரிவு என்று மட்டுமே விவரிக்கக் கூடும். அதேசமயம், அடிமட்ட 50 சதவீதத்தினரின் நிலைமை மிகவும் மோசமான நிலைக்குக் குறைந்ததல்ல.**

இந்த நிறமாலையின் மற்றொரு முடிவில், வருமான செறிவு தொடர்பு ரீதியாக உக்கிரமாக உள்ளது. உச்ச ஒரு சதவீதத்தினர் மேலும் குறிப்பாக முதல் 0.1 சதவிகிதத்தினர் ஆடம்பரமான வாழ்க்கையை வாழ்கின்றனர்.

1950 இல் தொடங்கி மூன்று தசாப்தங்களின் போதும் வருவாய் சமத்துவமின்மை உண்மையில் குறைந்துள்ளது என ஆசிரியர்கள் வலியுறுத்துகின்றனர்.

காங்கிரஸ் கட்சி தலைமையுடன் இந்திய முதலாளித்துவம், 20 ஆம் நூற்றாண்டின் முதல் பாதியின் போது தெற்கு ஆசியாவைக் கொந்தளிப்புக்கு உள்ளாக்கிய வெகுஜன ஏகாதிபத்




திய எதிர்ப்பு இயக்கத்தை நசுக்கியதோடு, 1947 இல் பிரிட்டிஷ் உடனான ஓர் ஒப்பந்தத்தையும் ஏற்றுக்கொண்டது. அதன் கீழ் அவர்கள் காலனித்துவ அரசு எந்திரத்தின் பிடியைத் தக்கவைத்துக் கொண்டனர். மேலும், துணைக்கண்டம் வெளிப்படையாக முஸ்லிம், பாகிஸ்தான் என்றும், மிகப் பெரும்பான்மை ‘இந்து’ இந்தியா என்றும் வகுப்புவாதரீதியாகப் பிரிக்கப்பட்டது.

(கேள்வி தொடரும்...)



தமிழர் நாடறிந்த இலக்கியச் செம்மல் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ். கம்பன் என்றால் ஜெயராஜ் என்று எண்ணுமளவுக்கு இலக்கியக் கம்பனாய் உருவெடுத்தவர் அவர். அவருடைய இலக்கிய அனுபவத் தொகுப்பு இங்கு தினசரி தொடராகப் பிரசுரமாகின்றது. ‘உன்னைச் சரணடைந்தேன்’ என்ற அவரது தொகுப்பில் ‘யாழில் கம்பன்’ பற்றிய தொடர் பதிவு இது.





# உன்னைச் சரணடைந்தேன்

## கம்பவாரிதி ஜெயராஜின் இலக்கிய அனுபவப் பகிர்வு 31

### காரைக்குடி கம்பன் விழா: இரண்டாவது பயணம் 04.04.1982

### குரு தந்த ஞானம்!

அறிவாணவம் என் குருவிடம் சிறிதும் இருந்ததில்லை. அழகப்பா பல்கலைக்கழகப் பேச்சு முடிந்ததும், கி.ஆ.பெ. அவர்கள் திருச்சி சென்றுவிட, அப்பல்கலைக்கழகத் துணைவேந்தர், குருநாதரையும், எங்களையும் தன் காரில் அழைத்துச் சென்றார். குருநாதரின் பேச்சில் அவரும் மயங்கியிருந்தார். அந்த ஆனந்தத்தில், ‘‘சார், இன்னைக்கு உங்க பேச்சாலே, மாணவர்கள் பலர் திருந்தியிருப்பார்கள்’’ என்றார். சிறிது நேரம் மௌனித்த என் குருநாதர், ‘‘அப்படியெல்லாம் ஒண்ணுமில்ல சார்!’’ என்றார். துணைவேந்தர் விடுவதாய் இல்லை. ‘‘நீங்க அப்படிச் சொல்லக்கூடாது. எல்லாரும் திருந்தாவிட்டாலும், பத்துப்பேராவது திருந்தியிருப்பாங்கதானே!’’ என்றார். அதற்கும் என் குருநாதர் சிறிது மௌனித்துவிட்டு, பிறகு ‘‘நீங்க சொல்வது உண்மைதான்.’’ பத்துப்பேர் திருந்து வாங்க என்பதில் சந்தேகமில்லை. ஆனா, அந்தப் பத்துபேரும், நான் பேசியிருக்காகவிட்டாக்கூடத் திருந்தியிருப்பாங்க சார்’’ என்றார். அதற்குப் பிறகு துணைவேந்தர் பேசவில்லை. என் குருநாதரின் ஞானத்தைக்கண்டு நான் திகைத்தேன். இப்படி என் குருநாதரிடம் நான் பெற்ற அனுபவங்கள் எத்தனையோ! விரிவஞ்சி அவற்றை விடுகிறேன்.

* * *

### மறக்க முடியுமா...?

காரைக்குடிக் கம்பன் விழாவின் நிறைவு நாள் நிகழ்ச்சி, நாட்டரசன் கோட்டையில் நடந்தது. உடல் நலத்தைக் காரணம்காட்டி, நாட்டரசன் கோட்டை நிகழ்ச்சிக்கு வரவேண்டாம் என, பலபேர் தடுத்தபோதும், அவர்களை நிராகரித்து, ‘‘கம்பன் விழாவில் கலந்துகொள்ளாமல், உசிர வைச்சிருந்து என்ன பயன்?’’ எனக் கேட்டு, பிடிவாதமாய் சுகவீனமுற்ற உடல் நிலையோடு நாட்டரசன் கோட்டைக்கு, கம்பன் அடிப்பொடியும் வந்தார். அங்கிருந்த ஊருணி நீரைப் பருகியதால், அவரது சுகவீனம் கடுமையாகி, மூச்சுத் திணறி அவர் பாடுபட்டார். கம்பன் வாழ்க! என்று அவர் கோஷமிட்டுத்தான் வழமையாய் விழா முடியும். அன்று கோஷமிடக் கூட முடியாமல் அவர் திணறியது கண்டு, தமிழறிஞர்கள் கண்ணீர் வடித்தனர். இதுதான் நான் அந்த இலட்சிய மனிதரை, கடைசியாய் நேரிற் கண்ட சந்தர்ப்பம்.

* * *

### திருகோணமலைக் கம்பன் கழகத்தின் முதல்விழா(15.05.1982)

திருமலையில் கம்பன் கழகத்தை ஆரம்பித்திருந்த வித்தியாதரன், ஆசிரியர் சிவசேகரத்தைக் கொண்டு, மாணவர்களுக்கான இராமாயண வகுப்புகளை நடத்தி வந்தான். எமது கம்பன் விழாக்கள் தந்த ஊக்கத்தில், வித்தியாதரனுக்கு திருமலையில், ஒரு கம்பன் விழாவை நடத்தவேண்டும் எனும் எண்ணம் வந்தது. அவன் விருப்பப்படி அங்கு முதல் முறையாக ஒரு கம்பன் விழாவை நடத்த முடிவு செய்தோம். 1982 மே 15, 16ஆம் திகதிகளில் இவ்விழா நடைபெற்றது. யாழ்ப்பாணத்திலிருந்து எங்கள் ஆசிரியர்களும் கழக இளைஞர்களுமாக, தனி பஸ்ஸில் திருமலை சென்று சேர்ந்தோம். மிகச் சிறப்பாக விழா ஒழுங்குகளை வித்தியாதரன் செய்திருந்தான். வித்தியாதரன் குடும்பத்தினர் முழுப்பேரும், விழாவுக்கு உறுதுணை செய்தனர். தனியே நம் நாட்டு அறிஞர்களுடன் நடத்தப்பட்ட விழா அது. அவ்விழா மிகப் பெரிய வெற்றி பெற்றது. திருகோணமலை இந்துக் கல்லூரி மண்டபத்தில் அவ்விழா நடந்தது. வீதிவரை சனக்கூட்டம். விழா முடிந்து நாங்கள் பஸ் ஏறிய போது, ஆயிரக்கணக்கான மக்கள் பஸ்ஸைச் சூழ்ந்து நின்று, தேசத் தலைவர்களுக்கு அளிக்கும் மரியாதைபோல், எங்களையெல்லாம் கௌரவித்து வழியனுப்பி வைத்தனர். சிவராமலிங்கம் மாஸ்டர், வித்துவான் ஆறுமுகம், வித்துவான் வேலன், ஆசிரியர் தேவன் ஆகியோர் எம்மோடு வந்ததும், எல்லோரும் ஒன்றாய் இருந்து பேசிச் சிரித்து மகிழ்ந்ததும், வெந்நீர் கிணற்றில் அவர்களை உட்காரவைத்து நாங்கள் நீராட்டியதும், கோணேஸ்வரரைத் தரிசித்ததும், திருகோணமலை தமிழ் மக்களின் அன்பால், தினமும் நான்கு நேர விருந்துபசாரத்திற் திணறியதும், ஆயுள் உள்ளவரை மறக்க முடியாத நிகழ்ச்சிகள்.

* * *

### கழகத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு விருந்து(22.05.1982)

கழகம் ஆரம்பித்த இரண்டாம் ஆண்டு நிறைவை, யாழ்.இந்துக் கல்லூரியின் ஆசிரியர்கள் அறையில் கொண்டாடினோம். சமூக, பல்கலைக் கழக அறிஞர்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். அத்தனை பேருக்கும் இரவு விருந்தளித்தோம். நாங்களே சமைத்த சாப்பாடு. அப்போது இந்துக் கல்லூரியின் அருகில் இருந்த மாணிக்கத்தின் அக்கா வீட்டில், இடியப்பப்புரியாணி செய்தோம். நான் தான் ‘மெயின்’ சமையற்காரன். மாலையில் சமைத்த உணவு, இரவு விருந்தில் சற்று பழுதாகி, பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியது. அன்றைய நிகழ்வுக்கு, குமாரதாசனின் அப்பாவும் வந்திருந்தார். அப்போது அவர் எங்கள் மேல் கடுங்கோபமாய் இருந்தார். நான் முன்சொன்ன சம்பவங்களை வைத்து, அக்கோபத்துக்கான காரணத்தை, நான் சொல்லாமலே நீங்கள் அறிந்து கொண்டிருப்பீர்கள். அவரை சமாதானம் செய்ய நினைத்து, அன்றைய நிகழ்வில் நாம் பேசச் சொல்ல, எங்களுக்கும் எங்கள் ஆசிரியர்களுக்குமாக, கடுங்கண்டனம் தெரிவித்துக் கோபமாய் அவர் பேசினார். பிள்ளைகளின் படிப்பைக் கெடுப்பதாய்க் குற்றஞ்சாட்டினார். நாம் வெட்கிப் போனோம். அப்போது அவர் பேச்சு, கோபம் தந்தது. இப்போது நினைத்துப் பார்க்க அவர் பக்க நியாயம் நன்றாய்ப் புரிந்தது. பின் எங்கள் ஆசிரியர்கள் அவரைச் சமாதானப்படுத்தினர்.

* * *

### பேராசிரியர் சண்முகதாஸ், வீரவாகு பாராட்டு (27.06.1982)

எங்கள் கழகத்தின் முதல் விழாவிலிருந்து எங்களுக்குத் துணை செய்து வந்த, பேராசிரியர் சண்முகதாஸ் தம்பதியர், நைஜீரியாவுக்கு கல்வி நோக்கமாகச் செல்லப் புறப்பட்டனர். எங்களுக்குத் துணை செய்து வந்த, பருத்தித்துறை மு.பொ.வீரவாகு அவர்களுக்கும், அவ்வாண்டில் அகில இலங்கை சமாதான நீதவான் பட்டம் கிடைத்திருந்தது. அவ்விருவரையும் பாராட்ட நினைத்து ஒரு விழா எடுத்தோம். அவ்விழாவும் யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் மண்டபத்திலேயே நடைபெற்றது.

* * *

### கம்பன் அடிப்பொடி மறைவு (1982 ஜூலை)

1982 ஜூலை மாதம் கம்பன் அடிப்பொடி அவர்கள் மறைந்தார். எங்களைப் பிள்ளைகளாய் நேசித்தவர். கம்பனுக்காக வாழ்வது எனும் நோக்கத்தை, எமக்குக் கற்றுத் தந்தவர். இன்று தமிழகத்தில் நாங்கள் நிலைகொள்ள வித்திட்ட தெய்வம். எந்த அறிமுகமும் இல்லாமல், கம்பன் மேல் பற்றுவைத்த ஒரே காரணத்துக்காக, இளைஞர்களான எங்களை அங்கீகரித்து, தனது தொடர்புகளையெல்லாம் எங்களுக்கும் ஆக்கி, அருள்செய்த கருணைக்கடல். இலட்சிய வாழ்வைக் கற்றுத்தந்த மாமனிதன். கம்பனைக் காத்த எம் காலத்து சடையப்ப வள்ளல். கற்றோரிடம் மட்டும் இருந்த கம்பனை, மற்றோரிடமும் அழைத்து வந்து மகிழ்வித்தவர். அவர் மறைவு எம்மைப் பெரிதும் பாதித்தது. கொழுகொம்பு இழந்த கொடிகளாய் நாம் வாடினோம்.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir


# இந்துக் கோயில்கள் பாகிஸ்தானில் நிர்மூலம்

## பாபர் மசூதி இடிப்பை அடுத்து

அயோத்தியில் கரசேவகர்கள் பாபர் மசூதியை இடித்த போது அதன் பாதிப்பும் தாக்கமும் இந்தியாவில் பல அதிர்வலைகளை ஏற்படுத்தின என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால், பாபர் மசூதி வீழ்ந்ததின் எதிரொலியாக இந்தியாவின் அண்டை நாடுகளில் இருந்த பல கோயில்கள் இடிக்கப்பட்டன.

இந்து மதத்தினர் சிறுபான்மையினராக இருக்கும் பாகிஸ்தானில் பிற மதத்தினரின் வழிபாட்டு தலங்களும், கோயில்களும் இருந்தமை இயல்பானதே. ஏனெனில் பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெறுவதற்குமுன் பாகிஸ்தானும் இந்தியாவின் ஒரு பகுதியாகவே இருந்தது.

ஆனால், 1992இல் பாபர் மசூதி இடிக்கப்பட்ட சற்று நேரத்திலேயே பாகிஸ்தானில் அதன் எதிர்வினைகள் ஆக்ரோஷமாக வெளிப்பட்டன.

பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு பாகிஸ்தானில் சுமார் 100 கோயில்கள் தரைமட்டமாயின அல்லது அவற்றிற்குப் பலத்த சேதம் ஏற்படுத்தப்பட்டது.

அந்தக் கோயில்களில் பலவற்றில் தினசரி பூசைகள் நடைபெற்றதில்லை. 1947 இந்திய பாகிஸ்தான் பிரிவினைக்குப் பிறகு பாகிஸ்தான் வந்த மக்களில் பலர் இந்தக்கோவில்களில் அடைக்கலம் பெற்றிருந்தனர்.

1992 டிசெம்பர் 8 ஆம் திகதியன்று லாகூரில் இருந்த ஜெயின் கோவில் ஒன்று இடித்து தள்ளப்பட்டது. தற்போது அங்கு வெறும் இடிபாடுகள் மட்டுமே காணப்படுகின்றன.

இந்த கோவில்களில் வசிக்கும் சிலர் கூறினர். 1992 டிசெம்பர் 8 ஆம் திகதி அன்று கோயிலைத் தாக்கத் திரண்டுவந்த கும்பலிடம், கோயிலை விட்டுவிடுங்கள் என்று நாங்கள் கெஞ்சினோம்.

இது எங்கள் வீடு, எங்களை தாக்காதீர்கள் என்று கைகூப்பி கெஞ்சினோம்.

ராவல்பிண்டி கிருஷ்ணர் கோயிலில் இன்றும் இந்து மக்கள் பூசைகளையும், வழிபாடுகளையும் செய்கின்றனர். பாபர் மசூதி இடிப்புக்குப் பிறகு இந்தக் கோயிலும் இடிக்கப்பட்டது.

அரசு மனது வைத்தால் இந்தக் கோயிலின் விமானக் கலசம் மீண்டும் நிறுவப்படலாம்.

ராவல்பிண்டியில் உள்ள கல்யாண தாஸ்கோயிலில் தற்போது பார்வையிழந்த குழந்தைகளுக்கான பள்ளிக்கூடம் செயற்படுகிறது.

1992 இல் ஒரு கும்பல் இங்கிருந்த கோயிலை தாக்கியது. ஆனால், அதிர்ஷ்டவசமாகக் கட்டடத்தைக் காப்பாற்ற முடிந்தது என்று பள்ளி அதிகாரிகள் சிலர் தெரிவித்தனர்.

பாகிஸ்தானின் ஜேலமில் உள்ள பாழடைந்த கோவில் இது. இந்தக் கோயிலைப் பற்றிய மக்களின் நம்பிக்கை ஆச்சரியப்படுத்துவதாக உள்ளது.

இந்தக் கோயிலுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்படுத்த முயற்சி செய்தவர்களுக்குதான் இழப்பு நேரிடும் என்பது நிதர்சனமான உண்மை என்று உள்ளூர் மக்கள் கூறுகின்றனர். ஒன்று, அவர்கள் பலத்த காயமடைவார்கள் அல்லது அகால மரணமடைவார்கள் என்று உள்ளூர் மக்கள் கூறுகின்றனர்.

1992 இல் பாபர் மசூதி இடிக்கப்பட்ட பிறகு, இந்தக் கோயிலையும் இடிக்கும் முயற்சியில் சிலர் ஈடுபட்டனர். ஆனால், அவர்களின் தலையில் கோயின் கோபுரத்தின் பகுதி விழுந்து பலத்த சேதத்தை ஏற்படுத்தியது.


அதன் பிறகு இந்தக் கோயிலை இடிக்கவோ சேதப்படுத்தவோ யாரும் முயற்சிக்கவில்லை என்பது உள்ளூர் மக்களின் கூற்று.

லாகூரின் அனார்கலி கடைவீதியில் அமைந்திருக்கும் பன்ஸிதார் கோயில் 1992 பாபர் மசூதி இடிப்பு சம்பவத்திற்குப் பிறகு பகுதியளவு சேதப்படுத்தப்பட்டது.

லாகூரில் அமைந்துள்ள ஷீத்லா தேவி கோயிலின் புகைப்படம் இது. மத வெறியர்கள் பாபர் மசூதியை இடித்துத் தள்ளியபின், அதன் பின்விளைவாக பாகிஸ்தானில் இருந்த மதவெறியர்களால் இடித்துத் தள்ளப்பட்ட கோயில்களில் இதுவும் ஒன்று.


இந்த கோயிலின் ஒரு பகுதி தாக்கப்பட்டு பெருத்த சேதமடைந்தது. பிரிவினைக்குப் பிறகு இந்தியாவில் இருந்து வந்த அகதிகளின் குடும்பங்கள் தற்போது இங்கு வசிக்கின்றன.



லாகூரில் இருந்த ஜெயின் ஆலயம் 1992 டிசம்பர் எட்டாம் திகதியன்று இடிக்கப்பட்டது



லாகூர் பன்ஸிதார் கோயில்


லாகூர் ஜெயின் ஆலயத்தின் தற்போதைய நிலை


ராவல்பிண்டி கல்யாண்தாஸ் கோயில்


ஜேலமில் உள்ள பாழடைந்த கோயில்


லாகூர் ஷீத்லா தேவி கோயில்


பாபர் மசூதி இடிப்பின் எதிரொலியால் தாக்கப்பட்ட ராவல்பிண்டி கிருஷ்ணர் கோவில் விமான கலசம்

'காதல் மன்னன்' என்றாலும்

# பெண்களிடத்தில் நேசத்தை தேடியவர் நெல்சன் மண்டேலா



> தென் ஆபிரிக்க விடுதலையில் பெண்களின் பங்கு குறித்து, வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் மண்டேலா நினைவு கூர்ந்தவாறு இருந்தார். 1956, ஓகஸ்ட் 9 ஆம் திகதி... நகரங்களில் இருக்கும் கறுப்பினப் பெண்கள், கையில் ஒரு கடவுச் சீட்டு வைத்திருக்க வேண்டும்.என்ற சட்டத்தை எதிர்த்து 20 ஆயிரம் பெண்கள் தென் ஆபிரிக்க தலைமைச் செயலகத்தை நோக்கி ஒரு மாபெரும் பேரணியை நடத்தினார்கள்.

மூன்று முறை திருமணமானவர், எக்கச்சக்க காதல்: விமர்சனங்களைத் தாண்டி மண்டேலா பெண்களுக்காகச் சாதித்தது என்ன?

டிசெம்பர் 5 ஆம் திகதி நெல்சன் மண்டேலாவின் நினைவு நாள். கறுப்பின மக்களின் உரிமைக்காகப் போராடிய உலகின் முக்கியத் தலைவராக அறியப்படும் நெல்சன் மண்டேலா, தென் ஆபிரிக்க பெண்களின் உரிமைகளை மீட்பவராக இருந்தார்.

பெண்களின் மீது நிகழ்த்தப்படும் அனைத்து வகையான அடக்கு முறைகளிலிருந்தும் அவர்கள் விடுவிக்கப்படும் வரை, நாம் விடுதலையை அடைய முடியாது. 1994 ஆம் ஆண்டு, தென் ஆபிரிக்காவில் மக்களாட்சி முறையில் நடைபெற்ற முதல்தேர்தலில் குடியரசுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மண்டேலா, தன்னுடைய முதல் நாடாளுமன்ற பேச்சில் இப்படிக் குறிப்பிட்டுள்ளார்.

பாலியல் சமத்துவம் இல்லாமல், எந்த வெற்றியையும் அடைய முடியாது என்பதை மண்டேலா உறுதியாக நம்பினார். பெண்கள் ஏழ்மையுடன் பிணைக்கப்பட்டிருக்கும் வரை, கீழாகப் பார்க்கப்படும் வரை, மனித உரிமைகள் அதனுடைய முக்கிய சாரத்திலிருந்து குறைபடும் என்றவர், பேச்சோடு நிறுத்தவில்லை. பெண்கள் நலன்சார்ந்த பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தினார். அவரது ஆட்சிக் காலத்தில், தென் ஆபிரிக்காவின் பொது சுகாதார அமைப்பின் மூலம், பெண்களுக்குப் பிரசவத்துக்கு முன்பும் பின்பும் இலவச சிகிச்சையை நடைமுறைப்படுத்தினார். ஆறு வயது வரையிலான குழந்தைக்கும் இலவச சிகிச்சையைக் கட்டாயப்படுத்தினார்.



நிறவெறியும் தீண்டாமையும் இருந்த தென் ஆபிரிக்காவில், 2.7 சதவீதமே பெண்கள் நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தனர். ஆனால், முதல் மக்களாட்சி தேர்தலில் அது 27 சதவீதமாக உயர்ந்தது. மண்டேலாவின் அமைச்சரவையில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் இடம்பிடித்தனர். சபாநாயகர் பதவியும் ஃப்ரீன் ஜின்வாலா என்கிற பெண்ணுக்கே கொடுக்கப்பட்டது. இன்றைக்கு, தென் ஆபிரிக்க நாடாளுமன்றத்தில் 40 சதவீத அமைச்சர்கள் பெண்கள். அரசியலில் பாலியல் சமத்துவத்தை அமெரிக்கா உள்ளிட்ட வல்லரசு நாடுகளுக்கே முன்னோடியாக நிற்கிறது. இதனைச் சாத்தியப்படுத்தியதில் மண்டேலாவின் பங்கு முக்கியமானது.

தென் ஆபிரிக்க விடுதலையில் பெண்களின் பங்கு குறித்து, வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் மண்டேலா நினைவு கூர்ந்தவாறு இருந்தார்.

1956, ஓகஸ்ட் 9 ஆம் திகதி... நகரங்களில் இருக்கும் கறுப்பினப் பெண்கள், கையில் ஒரு கடவுச்சீட்டு வைத்திருக்க வேண்டும்.என்ற சட்டத்தை எதிர்த்து 20 ஆயிரம் பெண்கள் தென் ஆபிரிக்க தலைமைச் செயலகத்தை நோக்கி ஒரு மாபெரும் பேரணியை நடத்தினார்கள். 40 வருடங்களுக்குப் பிறகு, அந்த நாளை பெண்கள் நாளாகவும், விடுமுறை நாளாகவும் அறிவித்து, தென் ஆபிரிக்க பெண்களுக்கு மரியாதை செய்தார் மண்டேலா. அந்தப் பெண்கள் தைரியமாகவும், உறுதியுடனும், உற்சாகத்துடனும் இருந்தார்கள் என்று அந்தப் போராட்டம் பற்றி தன் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தில் நினைவு கூர்ந்துள்ளார் மண்டேலா.

1995 ஆம் ஆண்டு, தென் ஆபிரிக்காவின் புதிய அரசமைப்புச் சட்டம் வரைவு நிலையில் இருந்தபோது, நமக்கு முன்பு, நீதிக்கான பாதையில் போராடிய பெண்களுக்குச் சமர்ப்பிக்கும் வகையில் இந்த மண்ணின் சட்டதிட்டங்களும் கொள்கைகளும் பெண்களுடைய உரிமையை நிலைநிறுத்துவதாக இருக்கும் என்று குறிப்பிட்டார். இனம், பாலின வேறுபாடு, கர்ப்பம், திருமண நிலை, இனம் அல்லது சமூகத் தோற்றம், நிறம், பாலியல் சார்பு நிலை, வயது, இயலாமை, மதம், மனசாட்சி, நம்பிக்கை, கலாசாரம், மொழி மற்றும் பிறப்பின் அடிப்படையில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ இந்த அரசு பாகுபாடு காட்டாது என்று தென் ஆபிரிக்காவின் புதிய அரசமைப்புச் சட்டம் குறிப்பிட்டது.

நெல்சன் மண்டேலா பதவியேற்ற இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு, ஐ.நா.வின் பெண்களுக்கு எதிரான அனைத்து வகையான ஒப்பந்தங்களுக்கும் தென் ஆபிரிக்கா ஒப்புக்கொண்டது.

இப்படி, தன் காலத்தில் பெண்களின் முன்னேற்றத்துக்காக நெல்சன் மண்டேலா உழைத்தவை ஏராளம். மண்டேலா மூன்று முறை திருமணம் செய்தவர். நிறைய பெண்களைக் காதலித்தார் என்றெல்லாம் விமர்சனம் வைக்கப்படுகிறது. அவருடைய வாழ்க்கை நிறவெறிக்கு எதிரான போராட்டத்தையும், அவர் நேசித்த பெண்களையும் சுற்றியே இருந்தது. அவர் எப்போதும் மக்களை நேசிப்பவராக இருந்தார். அவர் எப்போதும் நேசிக்கப்பட்டார். இளம் வயதில் நிறையக் காதல் கதைகள் இருந்தாலும், தான் எப்போதும் அந்தப் பெண்களிடம் நேசத்தையே தேடியதாக அவருடைய புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார்.



## தென்னாபிரிக்க நாடாளுமன்றில் தற்போது 40 வீத அமைச்சர்கள் மகளிர்



இன்றைக்குப் பெண்கள் முன்னேற்றத்தில் தென் ஆபிரிக்கா முன்னணியில் இருப்பதற்குக் காரணம், நெல்சன் மண்டேலா. ★

# சொந்த நாட்டு மக்கள் மீது 'உயிர்கொல்லி' பரிசோதனை!

## வட கொரியாவில் கொடுமை; கொடூரம்

வடகொரியா, தென் கொரியா இரண்டும் இருதுருவங்கள் போல. வடகொரியா ஒரு நரகம் என அங்கே வாழும் நாட்டு மக்களே கூறும் அளவிற்கு கடுமையான சட்டங்கள் மற்றும் கெடுபிடிகள் இருக்கின்றன.

உலகில் மிக சாதாரணமாக மக்கள் கையாளும் விஷயங்கள், பயன்படுத்தும் தொழில்நுட்பங்கள் மற்றும் பொருள்கள் எல்லாம் வடகொரியாவில் அரசால் தடை செய்யப்பட்டுள்ளன. மக்களை தடைகள் மூலமும், கடுமையான சட்டங்கள் விதித்தும் தனது வடகொரியா கொடுமை செய்கிறது என பார்த்தால், தனது கண்டுபிடிப்புகள் மற்றும் ஆராய்சிகளுக்கும் கூடத் தன் நாட்டு மக்களை ஏதோ எலிகளை போல பயன்படுத்தியுள்ளது வடகொரியா.




**நச்சு**

வடகொரியாவின் சிறையில் இருந்த பெண்மணி ஒருவர் தான்





நேரில் கண்டதாக விவரிக்கிறார். பெண்கள் மீது நடத்தப்பட்ட ஒரு கொடுமையான மனித பரிசோதனை இது. அந்த ஆய்வில் சிறையில் இருந்த ஐம்பது பெண் கைதிகளை உட்படுத்தியுள்ளனர்.

அவர்கள் அனைவரும் மிகவும் ஆரோக்கியமாக இருந்தவர்கள். அவர்களை நச்சு கலந்த முட்டை கோஸ் இலைகளை சாப்பிடுமாறு வற்புறுத்தினார்.

**கதறினர், மண்டாடினர்**

அந்த பெண்கள் தங்களை இந்த ஆய்வில் உட்படுத்த வேண்டாம் என கதறி மன்றாடி அழுதனர் அந்த நச்சு கலந்த முட்டைகோஸ் இலைகளை உண்ட பிறகு அனைவருக்கும் இரத்த வாந்தி எடுத்தனர். சிலருக்கு ஆசன வாய் வழியாக இரத்தம் வெளியாகியுள்ளது. அந்த இலைகளை உண்ட இருபது நிமிடங்களில் அந்த பெண்கள் பரிதாபமாக உயிரிழந்து விட்டனர்.

**அறுவைச் சிகிச்சை!**

வடகொரியா நடத்திய கொடூரமான பரிசோதனைகளில் ஒன்று, அனஸ் தீஷியா (மயக்க மருந்து) தராமல் அறுவைச் சிகிச்சை செய்வது. அறுவைச் சிகிச்சையை அந்த நபர் விழிப்புடன் இருக்கும் போதே முழுமையாகச் செய்துள்ளனர். இதனால் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



**சிறை காவலர்!**

வடகொரிய சிறை காவலராக பணியாற்றி அங்கிருந்து வெளியான நபர் ஒருவர் கூறியிருக்கும் விஷயம் மிகுந்த அதிர்ச்சியை அளித்துள்ளது. அதில் அவர் கூறியிருக்கின்றமை, ஆய்வுகளில் உட்படுத்தப்படும் நபர்கள் மற்றும் மரண தண்டனை பெற்றுள்ள நபர்களை ஒரு பானம் கொடுத்து பிறகு, தலையில் வலுவாக சுத்தியல் போன்ற பயங்கரமான ஆயுதங்கள் கொண்டு தாக்குவார்களாம். பிறகு காட்டேரிகள் (Zombies) போல அவர்களைத் துப்பாக்கி சுடுதல் பயிற்சிக்கு பயன்படுத்திக் கொலை செய்வார்களாம்.



**கேம்ப் 22**

கேம்ப் 22 என்ற இடத்தில் பணியாற்றி வந்த சிறை காவலர் ஒருவர் வடகொரியாவில் பரிசோதனை செய்யப்பட்ட வாயு ஆயுதங்கள் பற்றி கூறியுள்ளார். இது மிகவும் நச்சுத் தன்மை வாய்ந்தது. இந்தப் பரிசோதனையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நபர்கள் ஒரு மூடிய முகமூடிக்குள் அடைக்கப்படுவார்கள். இந்த முகமூடி மிகவும் நெருக்கமாக இருக்கும். அதில் காற்று இருக்காது.

**நச்சுக் காற்று!**

பிறகு ஒரு குழாய் வழியாக விஷத் தன்மை வாய்ந்த காற்றை அந்த மூடிய முகமூடிக்குள் அனுப்புவார்கள். அவர்களால் நிச்சயம் அந்த காற்றை சுவாசிக்காமல் இருக்க முடியாத நிலை உண்டாகும். அந்தக் காற்றை சுவாசிக்க ஆரம்பித்த கொஞ்ச நேரத்தில் அவர்கள் இரத்தம் கக்கி இறந்துவிடுவார்கள். இதை ஆராய்ச்சியாளர்கள் குறிப்பு எடுத்துக் கொள்வார்கள்.

**சித்திரவதை!**

சித்திரவதை செய்யும் முறைகளிலும் பல புது வழிகளில் பரிசோதனைகள் செய்துள்ளது வடகொரிய அரசு. இவர்கள் புதிதாகக் கொண்டுவரும் ஒவ்வொரு யுக்திகளும் மிகப் பயங்கரமாகத் தான் இருக்கும். அதில் இன்று தான் 'The Knee and The Wood' எனும் முறை.

**மரத்துண்டு!**

இந்த முறையில் சிறைவாசி ஒரு மரத்துண்டு மீது முட்டி யிட்டு நிற்க வேண்டும். சில நிமிட நேரத்தில் முட்டிக்கு கீழே இரத்த ஓட்டம் தடைப்படுவது போல கால்களை லாக் செய்துவிடுவார்கள். இப்படியாக ஒரு வாரம் வைத்திருந்தால் அந்தக் கைதியால் நடக்கவே முடியாது. இது ஒரு மாதத்திற்கு தொடர்ந்தால் அந்தசிறைக் கைதி இறந்து விடுவார்.

**ஆந்த்ராக்ஸ்!**


வடகொரியாவில் இருந்து பின்லாந்துக்கு தப்பித்து ஓடிவந்த அறிவியல் ஆராய்ச்சியாளர் ஒருவர் தான் உட்படுத்தப்பட்டிருந்த பரிசோதனை பயிற்சி குறித்து கூறிய சம்பவம் இது. பிறப்பால் குறைப்பாடு கொண்டிருக்கும் குழந்தைகள் மீது ஆந்த்ராக்ஸ் பரிசோதனை நடத்தியுள்ளது வட கொரிய அரசு.

**பயங்கர கெமிக்கல்!**

ஆந்த்ராக்ஸ் என்பது பயங்கரமான இராசாயனம் (chemical) ஆகும். இதை பிறக்கும் போதே மனவளர்ச்சி அல்லது உடல் வளர்ச்சி போன்ற பிறப்பு குறைபாடு களுடன் இருக்கும் குழந்தைகள் மீது பரிசோதனை செய்துள்ளனர். இது எப்படி அவர்கள் உடலில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது. இதனால் அவர்கள் எப்படி இறக்கிறார்கள் என ஈவிரக்கம் இன்றி வடகொரிய அரசு செயற்பட்டுள்ளது.

நன்றி: தி ஹிந்து

> வடகொரியா நடத்திய கொடூரமான பரிசோதனைகளில் ஒன்று, மயக்க மருந்து (அனஸ்தீஷியா) தராமல் அறுவை சிகிச்சை செய்வது. அறுவை சிகிச்சையை அந்த நபர் விழிப்புடன் இருக்கும் போதே முழுமையாகச் செய்துள்ளனர். இதனால் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.



# பனிக்காலத்தில் உதட்டின் வறட்சியை போக்கும் வழிகள்

முகம் என்னதான் அழகாக இருந்தாலும், கூட முகத்தின் அழகை எடுத்துக் காட்ட உதவுவது அழகிய உதடுகள் தான். சிலருக்கு பனிக் காலத்தில் உதடுகள் கறுப்பாக மாறி வறண்டு இருக்கும். இது ஒரு சில ஊட்டச்சத்து குறைபாடுகள் மற்றும் சில பழக்கங்களால் ஏற்படுகிறது. உங்களது வறண்ட உதட்டைப் பாதுகாப்பது எப்படி என்று பார்க்கலாம்.

1.பனிக்காலத்தில் நாள்தோறும் உதடுகளின் மேல் வெண்ணெய் தடவி வந்தால் வறண்ட உதடுகள் மாறி வழவழப்பான அழகான உதடாகும்.

2. கொத்துமல்லி இலைகளின் சாற்றை எடுத்து தினமும் இரவு படுக்கைக்குச் செல்லும்முன் உதடுகளில் தடவி வந்தால் உதடு சிவப்பாகும்.

3. தேங்காய் எண்ணெயில் அரை தேக்கரண்டி சாதிக்காய் பொடியைச் சேர்த்து குழைத்து உதடுகளின் மேல் தடவி வந்தால் உதடுகள் சிவந்து, பளபளப்பாக காட்சியளிக்கும். வெடிப்புகள் வராது.

4. பெற்றோலியம் ஜெலி உதடுகளை மென்மையாக்க உதவும் மிக சிறந்த பொருளாகும். தினசரி பெற்றோலியம் ஜெலியை உதடுகளில் தடவி வந்தால் உதடுகள் மென்மையாக மாறும். ஈரப்பதத்துடன் இருக்கும்.

5. வாரம் இரண்டு அல்லது மூன்று நாள்களுக்கு உதடுகளை வெதுவெதுப்பான மற்றும் குளிர்ந்த தண்ணீரால் ஒத்தடம் கொடுத்து வந்தால் அவை ரோஜா போல மென்மையாக மாறும்.

6. உதடுகளைக் கடிக்கும் பழக்கம் சிலருக்கு உண்டு. அது தவிர்க்கப்படவேண்டிய பழக்கம். அதனால் உதடுகள் வறண்டு போகவும், நிறம் மாறி அசிங்கமாகக் காட்சியளிக்கவும் கூடும். எனவே இது தவிர்க்கப்பட வேண்டும்.

# மற்றவர்கள் முன் குழந்தைகளை குறை கூறுவது நல்லதல்ல!



பெற்றோர் தங்கள் குழந்தைகளை மற்ற குழந்தைகளோடு ஒப்பிட்டு பேசுவது, மற்றவர்கள் முன் சதா குறை கூறுவது குழந்தைகள் மனதைப் புண்படுத்தும் விடயமாகும். இதனால் விரும்பத்தகாத பின் விளைவுகள் ஏற்படலாம். அவர்களுடைய நல்ல செயல்களை நாலு பேர் முன் பாராட்டுவது அவர்களை உற்சாகப்படுத்துவதோடு மேன்மைப்படுத்தவும் உதவும்.

அதோடு நீங்கள் அவர்களை உளப்பூர்வமாக நேசிக்கிறீர்கள் என்பதை யும் அது அவர்களிடத்தில் பதிவு செய்யும். சில பெற்றோர் தங்கள் குழந்தைகளை கண்டிப்பதாக நினைத்துக் கொண்டு பலர் முன் னிலையில் அடிப்பது உண்டு. தவறு செய்தால் அடிப்பது சரியான அணுகுமுறையல்ல. மேலும் நம் மீதுள்ள கோபத்தை அவர்கள் மற்ற குழந்தைகள் தம்பி, தங்கைகள் மீது காட்ட வாய்ப்பிருக்கிறது.

குழந்தை மனநல மருத்துவர்கள் கூற்றுப்படி பெரும்பாலான குழந்தைகள் மற்றவர்களிடம் அடிதடி வரை போகும் பின்னணிக்கு இது தான் காரணம். தாங்கள் பட்ட அவமானத்தை அவர்கள் இப்படித் தீர்த்துக் கொள்வார்கள். பொது இடங்களில் பிடிவாதம் பிடிக்கும் குழந்தைகளை சமாதானப்படுத்துவது மிகவும் கடினமான செயல்.

பொறுமையாக அவர்களை கட்டுப்படுத்த முயலுங்கள். முடியாவிட்டால் அந்த இடத்திலிருந்து அவர்களை அழைத்துக் கொண்டு வெளியேறி விடுங்கள். அதை விடுத்து காட்டுத்தனமாக அடிப்பது பெற்றோரை அநாகரிகமாகக் காட்டும் செயல்.



# வெறுங்காலில் நடைப்பயிற்சி செய்தால் கிடைக்கும் நன்மைகள்

காலணிகள் அல்லது காலுறைகள் எதுவும் இல்லாமல் வெறும் காலுடன் தரையில் நடப்பதன் பெயர் தான் (Earthing /Grounding) புவி தொடுப்பு அல்லது மண் அணைத்தல்.

★ ஆய்வுகளின்படி இரத்த ஓட்டத்தை அதிகரிக்கிறது.

★ இதயத் துடிப்பை சீராக்குகிறது.

★ பல நாள்பட்ட நோய்களுக்கு வீக்கத்தோடு ஒரு தொடர்பு உண்டு என்று நவீன அறிவியல் கருதுகிறது. இந்தப் பயிற்சியின் மூலம் வீக்கம் குறைக்கப்படுகிறது.

★பல நாள்பட்ட சோம்பலைக் கூட நீக்கும் தன்மை இந்தப் பயிற்சிக்கு உண்டு.

★ நரம்பு மண்டல அமைப்பைச் சீராக்குகிறது.

★மன அழுத்தத்தைக் குறைக்கிறது.

★ போதுமான எலக்ட்ரோன்கள் உடலில் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கிறது.

★பூமியிலிருந்து நாம் பெறும் எலக்ட்ரோன்கள் ஆன்டிஆக்ஸிடன்ட் விளைவுகளை ஏற்படுத்தும். இவை நமது உடலை வீக்கத்திலிருந்தும், பலவிதமான நோய்கள் ஏற்படுவதற்கு முன்னேயும் பாதுகாக்கும்.

இதன்பிறகு நடைப்பயிற்சி மேற்கொள்ளும் போது காலணிகள் இல்லாமல் பயிற்சி மேற்கொள்ளுங்கள். புல்தரை, கொங்கிரீட், மணல் என அனைத்துமே எதிர்மறை எலக்ட்ரோன்களைத் தருகின்றன.

இந்தப் பயிற்சி செய்து முடித்த 30 நிமிடங்களிலேயே உடலில் ஏற்படும் மாற்றங்களை உணர முடியும். சூரிய ஒளியிலிருந்து கிடைக்கும் விட்டமின் ஈ போலவும், தண்ணீரிலிருந்து கிடைக்கும் மினரல் போலவும், பூமியிலிருந்து பெறப்படும் எலக்ட்ரோன்களும் முக்கியம்.




# மாதவிடாயை தள்ளிப்போடும் மாத்திரையை எத்தனை முறை பயன்படுத்தலாம்?

குடும்ப நிகழ்ச்சிகள், பண்டிகைகள் வரும் நாள்களில் மாதவிடாயைத் தள்ளிப்போடும் மாத்திரைகளைப் பின்விளைவுகள் அறியாமல் உட்கொள்கிறோம். சரியான மருந்துவ ஆலோசனைகள் இல்லாமல், உட்கொள்ளும் மாத்திரைகளால் என்னென்ன பின்விளைவுகள் ஏற்படுகின்றன என்பதைப் பற்றிப் பார்க்கலாம்.

மாதவிடாயைத் தள்ளிப்போடும் மாத்திரைகளை வரையறையில்லாமல் உட்கொண்டால், மாதவிடாய் ஏற்படுவது தற்காலிகமாக நின்றுவிடும் அல்லது மாதவிடாய்ச் சுழற்சியில் பல்வேறு சிக்கல்கள் ஏற்படும்.

20 வயதுக்குள் இருக்கும் இளம்பெண்கள், மாதவிடாயைத் தள்ளிப்போடும் மாத்திரைகளைத் தவிர்ப்பது நல்லது. 20 வயது தாண்டிய பெண்கள், தவிர்க்க முடியாத சூழ்நிலையில் மட்டுமே இந்த மாத்திரைகளைப் பயன்படுத்த வேண்டும்.

தோல் அரிப்பு, அலேர்ஜி, நுரையீரல் நோய், மார்பகப் புற்றுநோய், நீரிழிவு நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்கள் இந்த



மருந்துகளை உட்கொள்ளக் கூடாது.

மாதவிடாயைத் தள்ளிப்போடும் மாத்திரைகளை எடுக்கும்போது ஆரம்பகால கட்டத்தில், வாந்தி வருவது போன்ற உணர்வு, மூச்சுத்திணறல், தலைவலி போன்றவை ஏற்படும். சிலருக்கு ஆழமான நரம்பு ரத்த உறைவு, உறைகட்டி, மார்பக வீக்கம் போன்ற தீவிரமான பின்விளைவுகளும் ஏற்படலாம்.

வருடத்தில் ஒன்று அல்லது இரண்டு முறை மட்டுமே இந்த மாத்திரைகளைப் பயன்படுத்த வேண்டும்.

மாதவிடாய் வருவதற்கு மூன்று நாள்களுக்கு முன்பு, இந்த மருந்துகளைத் தொடர்ந்து ஐந்து நாள்களுக்குப் பயன்படுத்தலாம். அதன் பிறகு ஐந்து முதல் பத்து நாள்களுக்குள் மாதவிடாய் வருவதுதான் இயல்பு. அதற்குப் பிறகும் மாதவிடாய் தள்ளிப் போனால் உடனடியாக மருத்துவரிடம் ஆலோசனை கேட்க வேண்டும்.

## யோசப்வாஸ் ஆண்டின் இறுதி நிகழ்வுகள்

2017 ஜனவரி 16 முதல் 2018 ஜனவரி 16 முதல் அறிவிக்கப்பட்ட தூய யோசப் வாஸ் ஆண்டின் இறுதி நிகழ்வுகள் 2018 ஜனவரி 13 ஆம் திகதி அன்று சில்லாலையில் அமைக் கப்பட்டுள்ள யாழ் மறைமாவட்ட தூய யோசப் வாஸ் திருத்தலத்தில் இடம்பெறும் என ஆயர் தமது திருவருகைக்கால சுற்றுமடலில் தெரி வித்தார்.


காலைக்கதிர் Kālaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்
TCNL
உண்மையை எடுத்துரைப்பதே என் பணி - யோவா:18:37
ஆசிரியர் : அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை - ஊடக விரிவுரையாளர்.

### பங்களாதேஷ் இளையோருக்கு திருத்தந்தை உரை

இளையோராகிய உங்களைச் சந்திக்கும் போதெல்லாம் நானும் இளமையடைவதைப்போல் உணர்கிறேன். உங்களது ஆர்வம் துணிகரச் செய லாற்றும் மனப் பான்மையிலிருந்து எழுகின்றது. நல்ல நேரங்களானாலும் பொல்லாத நேரங்களானாலும் துணிவு மிக்க இந்த ஆர்வத்துடன் முன்னேறிச் செல்லுங்கள். பிரச்சினைகள் சூழ்ந்தாலும் இறைவன் எங்குமே இல்லாததுபோல் தோன் றினாலும் தொடர்ந்து முன்னேறுங்கள். அவ்வாறு முன்னேறும்போது சரியானப் பாதையைத் தெரிவு செய்யுங்கள்.

# மன்னார் மறைமாவட்டத்தின் 3ஆவது ஆயராக இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை






மன்னார் மறைமாவட்டத்தின் 3 ஆவது ஆயராக கொழும்பு உயர் மறை மாவட்ட தமிழ்துணை ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையை திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 22 நவம்பர் 2017 அன்று நியமித்தார். புதிய மன்னார் ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மன்னார் மறை மாவட்டத்தை பொறுப்பேற்கும் நிகழ்வு மார்கழி மாதம் 30ஆம் திகதி மன்னார் நுழைவாயில் பாலத்தில் இருந்து காலை9.30மணிக்கு ஆயர் வரவேற்கப் படுவார்.

கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் றஞ்சித் ஆண்டகை உட்பட இலங்கையின் எல்லாகத்தோலிக்க ஆயர்களும் இந்நிகழ்வில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. 2011 ஆம் ஆண்டு நவம்பர் 28 ஆம் திகதி கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் தமிழ் துணை ஆயராக இவர் நியமிக்கப்பட்டமை வரலாற்றில் முதற் தடவை ஆகும். தற்போதைய இந்த நியமனத்தின் மூலம் கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் தமிழ் துணை ஆயர் ஒருவர் இல்லாமற் போகிறார்.

அவ்வெற்றிடத்தை கொழும்பு உயர் மறை மாவட்ட பேராயர் மல்கம் கர்தினால் றஞ்சித் ஆண்டகை விரைவில் நிரப்ப வேண்டுமென்றே அவருக்கு அழைப்பு விடுக்கிறோம். இவர் 1948இல் யாழ் நகரில் பிறந்தார் என்பதும் இவரின் மூத்த சகோதரர் அமரர் ஜோ. பெர்னாண்டோ அடிகளார் (1935 - 1980) யாழ் மறை மாவட்டக் குருவாகப்பணியாற்றி 1980ஆம் ஆண்டு நோய் காரணமாக மறைந்தார் என்பதும் இங்கு நோக்கப்பட வேண்டியதாகும். மன்னார் மறை மாவட்டத்தின் புதிய ஆயராக நியமிக்கப்பட்ட இம்மானுவேல்பெர்னாண்டோ ஆண்டகை மன்னார் மறை மாவட்டத்தை சீருடனும் சிறப்புடனும் வழி நடத்த 'காலைக் கதிர்' கிறிஸ்தவ செய்தி இதழ் அன்பு நெஞ்சங்கள் சார்பாக வாழ்த்துகிறோம்.

## உண்மையின் எண்ணங்கள்

### வாழ்க மன்னார் ஆயர் - வளர்க மன்னார் மறைமாவட்டம்




இலங்கையில் உள்ள 12 கத்தோலிக்க மறைமாவட்டங்களில் மன்னார் மறைமாவட்டம் ஒப்பீட்டளவில் அதிக கத்தோலிக்க மக்களைக் கொண்ட ஒரு மறைமாவட்டமாகும். 43 பங்குகளையும் 73 மறைமாவட்டக்குருக்களையும் ஏனைய துறவற சபைகள் உட்பட 106 குருக்களையும் கொண்டதாக மன்னார் மறைமாவட்டம் இன்று விளங்குகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் வேரூன்றிய கத்தோலிக்க சமயத்தை பாதுகாப்பதற்காக 700 இற்கும் மேற்பட்ட கத்தோலிக்க மக்கள் இரத்தம் சிந்திய மண் மன்னார் மண். மரியன்னையின் உலகப் பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலங்களில் ஒன்றாக எண்ணப்பட வேண்டிய யாத்திரைத் தலம் மன்னார் மறைமாவட்டத்தின் இதயமாகக் கருதப்படும் மருதமடு அன்னையின் யாத்திரைத்தலம் என்பதை திருத்தந்தை பிரான்சீஸ் தம் இலங்கைக்கான வருகையின் போது தம் பாதம் பதித்து உலகிற்குக் காட்டினார்.

மன்னார் மறைமாவட்ட புதிய ஆயர் கண்டி அம்பிற்றிய தேசிய குருத்துவக் கல்லூரியில் பேராசிரியராகவும் அதிபராகவும் பணியாற்றிய காலத்தில் இவரின் நெறிப்படுத்தலிலும் கல்வி அறிவிப்பிலும் உருவாக்கப்பட்ட பல குருக்கள் இன்று மன்னார் மறை மாவட்டத்தில் சீரோடும் சிறப்போடும் பணியாற்றுகின்றனர். மன்னார் மறை மாவட்டத்தை இன்னும் வளர்ச்சிப் பாதையில் இட்டுச்செல்ல ஆயரையும் குருக்களையும் இறைமக்களையும் வாழ்த்துகின்றோம்.




## 'காலைக்கதிர்' கிறிஸ்தவ செய்தி இதழ் ஓராண்டில்

காலைக்கதிர் பத்திரிகை கடந்த ஆண்டு ஆரம்பிக்கப் பட்ட பின்னர் அதில் ஞாயிறு வாரப் பத்திரிகையின் சிறப்பு பகுதியாக கிறிஸ்தவ செய்தி இதழ் வெளிவரத் தொடங்கி ஓராண்டு நிறைவாகியுள்ளது.

இன்று சமயங்களுக்கு இடையிலான நல்லுறவைக் கட்டியெழுப்பவும் புரிந்துணர்வை ஏற்படுத்தவும் வேண்டிய தேவை இருக்கின்ற நிலையில் அதனை உணர்ந்து கிறிஸ்தவ செய்தி இதழை நடத்த அனுமதித்த காலைக் கதிர் பத்திரிகை ஆசிரியர் ந. வித்தியாதரன் அவர்களுக்கு அன்பான நன்றிகளைத் தெரிவிக்கிறோம்.

நடுநிலையாக - பக்கம்சாராது - தனித்துவமான முறையில் தனக்கென்றே ஒரு தனி இடத்தைத் தமிழ் மக்கள் மத்தியில் மெது மெதுவாக பெற்றுவரும் காலைக் கதிர் பத்திரிகை விளம்பரங்களாலும் விற்பனையாலும் அதிகரிக்கப்பட்டு தமது இருப்பை நிலையாக உறுதி செய்து வளர கிறிஸ்தவ செய்தி இதழ் வாழ்த்துக்களையும் இறையாசீர்களையும் வேண்டிநிற்கிறது.

## யாழ் மறை மாவட்டத்தில் 2018 இளையோர் ஆண்டு

2018ஆம் ஆண்டில் ஒக்ரோபர் மாதத்தில் திருத்தந்தை பிரான்சிஸ் இளையோர் சந்திக்கும் சவால்களையும் ஆய்வு செய்ய ஆயர் மன்ற அமர்வு ஒன்றை றோமாபுரியில் ஏற்பாடு செய்துள்ளார்.

யாழ் மறைமாவட்டத்திலும் இளையோரின் இன்றைய நிலையைக் கருத்தில் கொண்டு இறைத்திட்டம் தேடும் இளையோர் பயணம் என்கின்ற கருப்பொருளில் 2018ஆம் ஆண்டை இளையோர் ஆண்டாக பிரகடனம் செய்கிறோம்.

வேலைவாய்ப் பின்மை - சரியான வழிகாட்டல் இல்லாமை - போதைப்பொருள்களின் பழக்கம் அதிகரிப்பு - வன்முறைகளின் வளர்ச்சி - இணைய சமூக வலைத்தளங்களின் ஆதிக்கம் என பல்வேறுபட்ட பிரச்சினைகளை எதிர்கொள்ளும் எமது இளையோருக்கு திருச்சபையின் மேய்ப்புப் பணி அவசியமாகவும் அவசரமாகவும் தேவைப்படுகிறது. ஆகவே இவ் விடயத்தில் எல்லோரினதும் பூரண ஒத்துழைப்பை எதிர்பார்க்கிறோம் என ஆயர் வேண்டியுள்ளார்.

# புதிய ஆண்டிலும் உற்சாகத்தோடு மேய்ப்புப்பணி மாநாட்டு தீர்மானங்களை நடைமுறைப்படுத்துங்கள் - யாழ். ஆயர்





புதிதாய் வாழ்வோம் என்ற விருது வாக்கோடு செயலோடு கூடிய விசுவாசம் என்ற தொனிப் பொருளில் மேய்ப்புப்பணி மாநாட்டை நாம் கூட்டி ஓராண்டு நிறை வுக்கு வந்திருக்கிறது.

இம் மாநாட்டின் ஓராண்டுப் பயணம் பற்றி மீளாய்வு நடந்து வரும் சூழலில் மாநாட்டின் பல தீர்மானங்களை நன்மனதோடு ஏற்று நீங்கள் ஆர்வத்தோடு நிறைவேற்றி வருவதையிட்டு மகிழ்ச்சியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

சில விடயங்களை நடைமுறைப்படுத்துவதில் தடைகள், சங்கடங்கள் தோன்றியிருப்பதை நாம் அறிவோம். புதுப்பித்தல் பயணம் என்பது இலகுவானது அல்ல.

ஆழமான மன மாற்றத்தையும் பொறுமையான முயற்சிகளையும் வேண்டி நிற்பது. புதிய ஆண்டிலும் உற்சாகத்தோடு மேய்ப்புப்பணி மாநாட்டுத் தீர்மானங்களை நடைமுறைப் படுத்துங் கள் என யாழ் ஆயர் வேண்டியுள்ளார்.



# துணிச்சல் இருந்தால் போதும் பெண்களும் சாதிக்கலாம்!

''காத்தும் மழையும் கடுமையாக இருக்கும் என்று எச்சரிச்சாங்கள். இருந்த மழையும் இல்லாமல் போனது தான் மிச்சம். அரசியல்போல வானிலையும் சொல்லுறது ஒன்று; நடக்கிறது ஒன்றாகப் போட்டுது'' என்று புறுபுறுத்துக் கொண்டே கச்சான் கடகத்தை அவிழ்த்து வியாபாரத்தை ஆரம்பித்தாள் செல்லாச்சி.

அப்போது கையிலிருந்த மின்னஞ்சல் பிரதி ஒன்றைப் பார்த்துத் தனக்குள் சிரித்துக் கொண்டார் வாத்தியார்.

இதனை அவதானித்த ஏரம்பர், ''நீங்களே சிரிச்சால் எப்படி? எங்களுக்கும் சொல்லிச் சிரியுங்கோவன்'' என்றார்.

''இது தமிழ் பிரமுகர் ஒருவர் ஊர்வம்புக்கு எழுதிய மின்னஞ்சல்.'' என்று சொன்ன வாத்தியாரை இடைமறித்த ஜீவன், ''யார் அவர்?'' என்று ஆவலாகக் கேட்டான்.

அதற்கு வாத்தியார், ''அவர் எங்கள் மீது குற்றஞ்சாட்டியிருந்தால் பகிரங்கமாகச் சொல்லலாம். ஆனால், அவர் நாங்கள் முன்னதாக எதிர்வு கூறிய விசயங்களைப் பட்டியல் போட்டு, அவையெல்லாம் பிறகு அப்படியே நடந்ததைக் குறிப்பிட்டிருக்கிறார். அதோடை நாங்கள் சுயவிருப்பு வெறுப்புக்கு இடம் கொடாமல், கட்சிகளையோ தனிநபர்களையோ குறிவைத்துத் தாக்காமல், வம்பளப்பதைப் பாராட்டியும் இருக்கிறார். தன்றை நேரத்தைச் செலவழிச்சு ஒரு ஊடகத்துக்குப் பாராட்டுக் கடிதம் அனுப்பும் பிரமுகர்கள் இந்தக் காலத்திலை அபூர்வம். இந்த நேரத்திலை அரசியல் மற்றும் சமூகத் தலைவர்களுக்கு எங்கள் எல்லோர் சார்பிலும் சொல்ல விரும்புறது ஒன்றுதான். ஊடகங்களைப் பற்றி மூடிய இடங்களுக்குள்ளை குறை சொல்லிக் கொண்டிராமல், ஊடகங்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டியும், நல்லது செய்யும்போது பாராட்டியும், ஊடகங்களுடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுங்கள். இது ஊடகங்களைச் சரியான செல்நெறியில் கொண்டு செல்ல ஊக்குவிப்பாக இருக்கும்'' என்று சொல்லி முடித்தார்.

''இந்தக் கடிதம் ஊர்வம்பளக்கும் எங்களுக்கான பொறுப்பை இன்னும் அதிகரித்திருக்கு. நிச்சயமாக நாங்கள் ஊடக அறநெறிகளுக்கு உட்பட்டுத்தான் சந்தியடியில் ஊர்வம்பளப்போம் என்று உறுதியளிக்கிறோம்'' என்று தெளிவாகவும் நிதானமாகவும் சொன்னான் பேப்பர்தம்பி.

''இதிலை இன்னொன்றும் இருக்கு. 'ஐஸே, ஊர்வம்பு தடம் மாறினால் அதைப் பிரசுரிப்பதை நிறுத்தி விடுவம்' என்று முன்னதாகவே 'காலைக் கதிர்' பிரதம ஆசிரியர் எச்சரித்ததையும் நாங்கள் எல்லோரும் மனதிலை வைச்சிருக்கிறம்தானே.'' என்று சொன்னான் ரூபன்.

''எங்களைப் பற்றி நாங்களே புளுகிக் கொண்டிருக்கக் கூடாது.. நாட்டு நடப்பைக் கதையுங்கோவன்'' என்றாள் செல்லாச்சி.

அப்போது ரூபன், ''தமிழகம் மாதிரி இங்கேயும் குடும்ப அரசியல் வந்திடும் போல இருக்கு என்று கதைக்கினம். உள்ளூராட்சித் தேர்தலில் வேட்பாளர் பட்டியலில் பெண்களுக்குக் கட்டாயம் இடம் கொடுக்க வேணும் என்று விதி இருக்கு. ஆனால், பெண்கள் போட்டியிட முன்வருவது குறைவாக இருக்காம். இதைப் பயன்படுத்தித் தங்கடை வீட்டுப் பெண்களை அரசியலில் இறக்கி விட ஆண் அரசியல்வாதிகள் பலரும் முயற்சிக்கினமாம்'' என்றான்.

அதற்கு வாத்தியார், ''வேட்பாளர் பட்டியல் உத்தியோகபூர்வமாக வெளிவராமல் அதில் இடம்பெறுபவர்களைப் பற்றிக் கதைப்பது நேர்மையாக இருக்காது. ஆனால், பெண் வேட்பாளர்களைத் தேடிப் பிடிப்பது கட்சிகளுக்குக் கஸ்டமாக இருக்கு என்பது கதைக்க வேண்டிய விசயம்தான்'' என்றார்.

''இலங்கையில் பெண்களின் கல்வி நிலையும் தொழில்வாண்மையும் மேம்பட்டிருக்கு என்றும், ஆனால், அரசியலில் பெண்களின் பங்களிப்புக் குறைவாக இருக்கு என்றும் ஐக்கியநாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் ஆய்வொன்றில் சொல்லப்பட்டிருக்கு.'' என்று நிலைமையைச் சொன்னான் ஜீவன்.

இதற்கு ரூபன், ''கிராமப்பகுதிகளிலாவது பெண்கள் பொது அமைப்புகளில் பதவிகளில் இருக்கின்றனர். ஆனால் நகரங்களில் அதுவும் படித்த பெண்கள் குடும்பம், சம்பாதிப்பு என்று இருந்து விடுகின்றனர். விரல் விட்டு எண்ணக் கூடிய சிலர் மிஞ்சிப் போனால் மகளிர் அமைப்பு என்ற பெயரில் பிரச்சினை வராத போராட்டங்களை நடத்தி விட்டு ஒதுங்கிக் கொள்கின்றனர்'' என்று சொன்னான்.

''காலம்காலமாக ஆண்கள் நாட்டை ஆள்வது என்றும் பெண்கள் வீட்டைக் கவனிப்பது என்றும் ஆண்கள் உருவாக்கி வைத்த ஏற்பாடுகள்தான் பெண்களை அரசியல் ஆர்வமில்லாமல் ஆக்கி வைத்தது. கிரேக்க தத்துவாசிரியர் அரிஸ்டோட்டில் 'ஆண்களுக்கு 32 பற்கள்; பெண்களுக்கு 31 பற்கள். பெண்கள் பலம் குறைந்தவர்கள்' என்று சொல்லியிருந்ததாக பேச்சாளர் சுகிசிவம் குறிப்பிட்டிருந்தார். இப்படி நாட்டைப் பற்றிக் கவலைப்படுவது பெண்களுக்கு அவசியமற்றது என்று நம்பவைத்ததால் ஏற்பட்ட நிலை இது'' என்றார் வாத்தியார்.

''ஆனால் ஈழத்தமிழர்களின் உரிமைப் போராட்டத்தில் ஆண்களுக்கு நிகராக, பெண்களும் தியாகத்திலும் தீரத்திலும் சாதனை படைத்தனர். விடுதலைப் போராட்டம் இந்த மண்ணிலை பெண் விடுதலை பற்றிய மனநிலையில் ஓரளவாவது முன்னேற்றத்தை ஏற்படுத்தியிருக்கு என்பது உண்மைதான்.'' என்றாள் செல்லாச்சி.

இதற்குப் பேப்பர்தம்பி, ''சட்டங்கள் நாட்டின் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சேர்த்துத்தான் உருவாக்கப்படுகின்றன. ஆனால் அந்தச் சட்டங்களை இயற்றுவதிலும் நடைமுறைப்படுத்துவதிலும் பெண்களின் பங்களிப்பு இல்லையென்றால், அந்தச் சட்டங்கள் பெண்களின் தேவைகளை முழுமையாக நிறைவேற்றப் போவதில்லை. ஆகவே, பெண்களின் நலன் குறித்துப் பேசுவதை விடுத்து அரசியல் பங்களிப்புச் செய்ய பெண்கள் முன்வரவேண்டும்'' என்றான்.

''நீங்கள் விசயத்தைப் பெரிதுபடுத்தியியல். அந்தக்காலத்திலை எத்தினை ராணிகள் நாட்டை ஆண்டிருக்கினம். உலகத்தில் முதன்முதலாகப் பெண் பிரதமரானதே இலங்கையில்தானே'' என்று சொன்னார் ஏரம்பர்.

அதனைத் தலையசைத்து மறுத்த வாத்தியார், ''உலகம் முழுக்க நாடாளும் உரிமை பெண்களுக்கு இருந்ததில்லை. அரச குலத்தில் ஆண்வாரிசு அற்ற நிலையில்தான் பெண்கள் நாடாளும் சூழல் உருவானது. அதுவும் தமிழகத்தில் 1682 இல்தான் இராணி மங்கம்மாள் ஆட்சிப்பீடமேற முடிகிறது. அதுவும் மகனான மன்னர் முத்து வீரப்பன் இறக்க, அவனது வாரிசான மூன்றுமாதக் குழந்தை விஜயரங்கனின் சார்பில்தான் இராணி மங்கம்மாள் ஆட்சி செய்தார். அந்தப் பேரன் வளர்ந்து மங்கம்மாளை சிறையில் அடைத்து ஆட்சியைப் பிடித்தது தனிக்கதை. சிவகங்கை இராணி வேலுநாச்சியார், தஞ்சாவூரின் மராட்டிய இராணி சுசான்பாய், சித்தூர் இராணி பத்மினி, ஜான்சி இராணி லட்சுமிபாய் என்று அனைவருமே தங்கள் கணவருக்குப் பிறகு மகன் அல்லது வாரிசுகளின் சார்பில் ஆட்சி செய்து, ஆணாதிக்க சிந்தனையின் வஞ்சகத்தால் விரட்டப்பட்டவர்களாகவே இருக்கிறார்கள்'' என்றார்.

''நீங்கள் சொல்வதும் சரிதான்'' என்று ஆமோதித்த பேப்பர்தம்பி, ''இலங்கையில் சிறிமா, சந்திரிகா, இந்தியாவில் இந்திரா, பாகிஸ்தானில் பெனாசிர், வங்கதேசத்தில் ஷேக்ஹசீனா, கலிதாஷியா என்று பலரும் தமது வீட்டு ஆண்கள் ஆட்சி செய்து மறைந்த பிறகு அந்த இடத்தில் தான் பதிலீடாக வைக்கப்பட்டார்கள். எமது தமிழரசியலிலும் இதுதானே வாடிக்கையாக இருக்கிறது. இந்த நிலையை மாற்றாமல் வெறும் ஒதுக்கீட்டால் பெண்களின் அரசியல் பங்களிப்பை வளர்க்க முடியாது'' என்றான்.

''இப்போதும் கூட உள்ளூராட்சித் தேர்தலில் பெண்களுக்கு வழங்கப்பட்டுள்ள இட ஒதுக்கீடு, இந்தியாவில் நடப்பது போன்று பெண்களைப் பெயருக்குப் பதவிகளில் இருத்தி விட்டு, கணவரோ அல்லது மகன்களோ அதிகாரம் செலுத்துபவராக இருக்கக் கூடாது. இந்த நிலையை முதலிலையே மாற்றாவிட்டால் அதுவே பிறகு வழமையாகி விடும்'' என்று எச்சரித்தான் ரூபன்.

''இந்தியாவிலேயே பெண்கள் அரசியலில் அவ்வளவாக ஈடுபாடு காட்டாத காலமான, 1927 ஆம் ஆண்டில், யாழ்ப்பாணப் பெண் ஒருவர் தமிழகத்தில் எழும்பூர் தொகுதித் தேர்தலில் போட்டியிட்டிருக்கிறார்.'' என்றார் வாத்தியார்.

''இதென்ன புதுக்கதை'' என்று வியந்தார் ஏரம்பர்.

விளக்க ஆரம்பித்தார் வாத்தியார்.

''19 ஆம் நூற்றாண்டிலை யாழ்ப்பாணத்திலை இருந்தவர் கதிரவேற்பிள்ளை. அவர் பட்டதாரி. அந்தக் காலத்திலை பட்டதாரி ஆவது அரிது. அதனால் அவரை 'பி.ஏ.தம்பி' (B.A.தம்பி) என்று அழைத்தனர். அவரது பெயரில் இப்பவும் ஒழுங்கை இருக்கு. அவரின் மகள் வழிப் பேத்திதான் மங்களம்மாள். யாழ்ப்பாணத்தின் முதல் பெண்கள் அமைப்பான 'பெண்கள் சேவைச் சங்கத்தை' தனது பதினெட்டாவது வயதில் இங்கு உருவாக்கினார். இதன் மூலம் தீண்டாமை ஒழிப்பு, பெண் விடுதலை, பெண் சமத்துவம் போன்ற சமூக சீர்திருத்தங்களை முன்னெடுத்தார். திருமணத்தின்பின் கணவருடன் இந்தியாவில் வசித்தார். அப்போதுதான் தமிழகத் தேர்தலில் போட்டியிட்டார். அவரது சரித்திரமெல்லாம் இங்கு பரப்பப்படாமல் விடப்பட்டது கவலைக்குரியது.'' என்று சொல்லி முடித்தார் வாத்தியார்.

''எனக்கு ஒன்றுதான் விளங்கவில்லை. வீட்டிலை கணவனை, பிள்ளைகளைப் பராமரித்து, குடும்பத்தை நிர்வகிக்கத் தெரிந்த பெண்கள், வெளியில் அரசியலில் ஏன் பிரகாசிக்க முடிவதில்லை'' என்று கேட்டான் ஜீவன்.

இதற்குப் பதில் சொன்ன பேப்பர் தம்பி, ''குடும்பத்தை நிர்வகிக்க 'அன்பு' என்ற ஆயுதம் போதும். ஆனால் அரசியலில் வேறு ஆயுதங்களும் தேவை. அவற்றில் முக்கியமானது 'துணிவு'. அரிதாக ஜெயலலிதா, மம்தாபெனர்ஜி, மாயாவதி போன்ற பெண்களுக்குத் துணிச்சல் அதிகமாக இருந்ததால், ஆண்களின் தலையீடு இல்லாமல் ஆளுமையுடன் அதிகாரம் செலுத்த முடிந்தது. இந்தத் துணிச்சலை வளர்த்துக் கொண்டால் எந்தப் பெண்ணும் சாதிக்க முடியும்.'' என்றான்.

''இதற்கு ஆண்களின் மனநிலையும் கொஞ்சம் மாற வேண்டும். பெண்களின் ஆர்வத்துக்குத் துணையாக இருக்க வேண்டும்'' என்றான் ரூபன்.

அப்போது விறைத்த காலை மாற்றிப் போட்ட வாத்தியார் கதைக்கத் தொடங்கினார்.

''இட ஒதுக்கீட்டால் மட்டும் பெண்ணுரிமை வந்து விடாது. பிறப்பு முதலே திருமணம், குடும்ப வாழ்க்கை என்பவற்றுக்காகவே பெண்களை வளர்ப்பதால், பொது வாழ்க்கை பெண்களுக்கு அன்னியப்பட்டுப் போகிறது. பெண் பலவீனமானவள் என்ற மாயையும், பாதுகாப்பற்றதாகிவரும் பொதுவெளியும் பெண்களின் அரசியல் பங்களிப்புக்குத் தடையாக உள்ளன. அரசியல் என்பது பணம், வன்முறை, ரௌடித்தனம் மிக்கதாக மாறிவரும் சூழலும் பெண்கள் அரசியலில் பங்கேற்கக்கூடியதாக இல்லை. குடும்ப வருமானத்திற்காக வேலைக்குச் செல்லும் பெண்கூட, தொழிற்சங்கத்தில் இணைய, குடும்ப அனுமதியைப் பெற வேண்டி உள்ளது. அரசியல் பின்புலம் அற்றவர்களுக்கு இங்கு வாய்ப்புக் குறைவு. இந்தத் தடைகள் தாமாக விலகப் போவதில்லை. இந்தத் தடைகளை உடைக்க இளைய தலைமுறை முன்வரவேண்டும். குடும்பத்தினர் மட்டுமில்லாது நண்பர்களாக உள்ள ஆண்களும் பெண்களுக்கு ஆதரவளித்து உற்சாகப்படுத்தினால் அரசியலில் பெண்களின் பங்களிப்பு உயரும்'' என்று சொன்ன வாத்தியார் எழுந்து நடந்தார்.

''யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒன்றியத் தலைமைப் பதவிக்கு மாணவி ஒருவர் வரவேணும். அப்பதான் மாவீரர் தினத்தில் அங்கயற்கண்ணிக்கும், மாலதிக்கும் அங்கே கொளுத்திற தீபங்களுக்கு அர்த்தம் இருக்கும்'' என்று சொல்லி விட்டு, கச்சான் கடையைக் கட்டத் தொடங்கினாள் செல்லாச்சி.

## ஊர்வம்பு

■ குருவியார்

thamizhkaalaikathir@gmail.com



## செப்புகிறார்... சின்னப்பு!

வணக்கமுங்கோ!

வன்னிப் போர்க்களத்தில சண்டை நடைக்கேக்கை ஆமிக்காரனிட்டை சரணடைஞ்ச ஆள்கள் ஒரு புறம்... அவையளா வலியவந்து கூட்டிக்கொண்டுபோன ஆள்கள் இன்னொரு புறமாய் நடந்ததல்லோ!

இப்பிடிச் சரணடைஞ்சவையளிலையும், கூட்டிக்கொண்டுபோன ஆள்களிலையும் கன பேர் காணாமல் போன பிற்பாடு, இப்ப, காணாமல் போன ஆள்களின்ற இனசனங்கள் தங்கட சொந்த, பந்தங்களைக் கண்ணுக்கு முன்னால காட்டச் சொல்லியும், அவையளைத் திருப்பித் தரச் சொல்லியும், உங்கினேக்கை சில இடங்களிலை போராட்டம் நடத்துறது இப்பவும் தெரியுதோ உங்களுக்கு?

நான் இப்ப ஏன் இதைக் கொஞ்சம் 'சீரியஸ்'ஸாக் கேட்கிறன் எண்டால், ஆரம்பத்தில உந்தப் போராட்டம் தொடங்கின நேரத்தில எவ்வளவு ஆட்டங்கள், பாட்டங்கள், அமர்க்களங்கள் நடந்தேறிச்சுது எண்டதை அரசியல்வாதியளும், அங்கினேக்கை வெறும் பார்வையாளர்களாகவும் வந்து நிண்டவை மறந்திருப்பினம். ஆனா, அந்தப் போராட்டத்தை இண்டுவரை நடத்துற அந்தச் சனங்கள் மறந்திருக்க மாட்டினம்.

உந்தச் சனங்கள் எதுக்காகப் போராட்டம் நடத்துகினம் எண்டதைக் கொஞ்சமேனும் தெளிவாப் புரிஞ்சு கொள்ள வேணும் பாருங்கோ!

பசிக்குத் தவிச்ச வாய்க்கு பழஞ்சோர்த்துத்தண்ணி கிடைச்ச மாதிரி, தங்கட அரசியலை முன்னெடுத்து நகர்த்துறதுக்கு ஒண்டுமில்லாமல் இருந்த எங்கட எம்.பிமார், தம்பிமார், அரசியல்வாதியள், அமைச்சர்மாருகள் எல்லாரும் புரட்டாசிச் சனியில எள்ளுப் பிரசாதத்துக்கு சிவன் கோயிலுகளில காகக் கூட்டம் மொச்ச மாதிரி அங்கை போய் மொச்சு நிண்டதும், வீறாப்பாக 'அரசியல் வசனங்கள்' பேசினதும், பிறகு, அந்தச் சனங்களோடை நிண்டு 'போட்டோ' எடுத்து, தங்கட பேப்பருகளுக்குக் குடுத்துப் பிரசுரிக்கச் செய்ததும் கடந்துபோன காலத்தின் பதிவுகள் எண்டதை நான் இப்ப இதிலை ஞாபகப்படுத்த விரும்புறன்.

நித்தம் போனா முற்றம் சலிக்கும்... எண்ட மாதிரி போராட்டம் நடக்கிற இடங்களுக்கு அடிக்கடி போக எங்கட அரசியல்வாதியளுக்கு, சனங்களின்ர, போராட்டக்களம் சலிச்சுப் போச்சுதோ என்னவோ தெரியேல்லை.

இதை நான் ஏன் இப்ப இதை இதிலை கிளற வாறன் எண்டாள், இந்தச் சனங்களின்ர போராட்டம் எண்டது, தனிய ஒரு இடத்திலை நடக்கேல்லைக் கண்டியளே! கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் எண்டு பரந்து பட்ட நிலையில நடக்குது என்ர குத்து மதிப்புக்கணக்கின் படி கிளிநொச்சிச் சனங்கள் நடத்துற போராட்டம் இன்டையோடை 296 ஆவது நாள்,

வவுனியாச் சனங்கள் நடத்துற போராட்டம் இன்டையோடை 290 ஆவது நாள்,

முல்லைத்தீவுச் சனங்கள் நடத்துற போராட்டம் இன்டையோடை 280 ஆவது நாள்,

யாழ்ப்பாணம் - மருதங்கேணிச் சனங்கள் நடத்துற போராட்டம் இன்டையோடை 165 ஆவது நாள்

இப்பிடி நூறு, இரு நூறு நாளைத் தாண்டியும் இந்தச் சனங்கள் போராடுதுகள் எண்டால், அந்தச் சனங்களின்ர மனசில உள்ள வலியும், தவிப்பும் எப்படிப்பட்டவை எண்டதை முதல்ல புரிஞ்சுகொள்ள வேணும்.

குறிப்பாக, 'எலெக்சன்' வாற நேரங்களில சனத்திட்ட வாக்குப் பிச்சை வாங்க வாற அனைத்து அரசியல்வாதியளும் யோசிக்க வேணும் பாருங்கோ!

இப்ப கிட்டடியில உள்ளூராட்சி எலெக்சன் எண்டு ஒண்டு வரப்போகுது. இந்த எலெக்சனில நிக்கிற ஆள்கள் இனி எந்த முகத்தோடை போய் அந்தச் சனங்களுக்கு முன்னாலை நிண்டு கொண்டு 'சிரிக்கப்' போகினமோ தெரியாது!

ஆறுகடக்கும் வரை அண்ணன் - தம்பி உறவாம். ஆற்றின் கரையில ஏறினாப் போல நீ யாரோவாம், நான் ஆரோவாம்... எண்டு சொன்னால், அப்படியான அண்ணன் - தம்பி உறவு தங்களுக்குத் தேவையில்லையெண்டு உந்தப் போராட்டம் நடத்துற சனங்கள் புறுபுறுக்குதுகள். ஒருத்தரும் கேள்விப்படேல்லையே...?

சனங்கள் அப்பிடிச் சொல்லுறதிலையும் நியாயம் இருக்குதுதானே பாருங்கோ!

தமக்காக கதைக்க வேணும், பேசவேணுமெண்டு தான், சனங்கள் தங்கட வாக்குகளைப் புள்ளடிப் பெட்டிக்குள்ளை போட்டு, தங்களுக்கான பிரதிநிதிகளாத் தெரிவு செய்யுதுகள். அப்பிடித் தெரிவுசெய்யப்பட்ட ஆள்கள் அந்தச் சனங்களைத் திரும்பிப் பாராமல் போனால் பிறகென்ன அண்ணனும் தம்பியும்?

போராட்டம் நடத்துற உந்தச் சனங்களுக்கு 'பிரதிநிதிகள்' ஏதாவது பெற்றுக்கொடுக்காட்டி இனி வார காலங்களிலை அண்ணனுமில்லை, தம்பியுமில்லை, அருமந்த 'வாக்குப்பிச்சையளும்' இல்லையெண்ட நிலை தான் வரப்போகுது. பொறுத்திருந்து பாருங்கோவன்!



# நோய்க் கிருமிகளை காவிச் செல்லும் மோசமான ஈக்கள்!

வீட்டில்பெரும்பாலும் காணப்படும் ஈக்கள் மற்றும் நீல நிற ஈக்கள், 600 விதமான பக்டீரியாக்களை பரப்புவதாக மரபணு ஆய்வில் தெரியவந்துள்ளது.

இந்த பக்டீரியக்கள், பெரும்பாலும், வயிற்று வலி, ரத்தத்தில் விஷம் ஏறுதல், நிமோனியா (நுரையீரல் அழற்சி) ஆகிய மனிதர்களுக்குத் தொடர்புடைய நோய்களைப் பரப்புகின்றன.

ஈக்களால், தனது கால்கள், இறக்கைகள் மற்றும் பாதங்கள் மூலமாக, நோய்களை ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பரப்ப முடியும். சொல்லப்போனால், அவை எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியிலும், அவற்றால் உயிருடன் உள்ள பாக்டீரியாக்களைப் பரப்ப முடியும்.

ஈக்களால் நோய்க் கிருமிகளைப் பரப்ப முடியும் என்பது மக்களுக்குத் தெரிந்திருந்தாலும், எந்த அளவிற்கு அவை அபாயகரமானவை என்றும், எவ்வளவு தூரம் அதன் தொற்று இருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியாது என்று பி.பி.ஸியிடம் தெரிவிக்கிறார், பென் ஸ்டேட் பல்கலைக்கழக பேராசிரியர் டொனால்ட் பிரையண்ட்.

### திடீர் பரவல்

வீட்டில் பரவலாக காணப்படும் ஈக்களின், உடலின் மேலும், உடலினுள்ளும் இருக்கும் நுண்ணுயிரிக்கள்ல்ல் குறித்து மரபணு ஆய்வு முறை வழியாக ஆய்வு நடத்தப் பட்டது.

### மலக் கழிவுகள், அழுகல்களை நாடிச் செல்லும்

வீட்டில் பொதுவாக பார்க்கக் கூடிய ஈக்கள் 351 வகையான பக்டீரியாக்களைப் பரப்புகின்றன. சூடான காலங்களில் வரும், நீலநிற ஈக்கள் 316 வகை பக்டீரியாக்களைப் பரப்புகின்றன. இந்த இரு வகை கொசுக்களாலும், அதிகப்படியான பக்டீரியாக்கள் பரப்பப்படுகின்றன.

பொது சுகாதார அதிகாரிகளால், நோய்களைத் திடீரெனப் பரப்பும் காரணிகளாக ஈக்கள் பார்க்கப்பட்டிருக்கலாம் என்று இந்த ஆய்வை 'ஜர்னல் சைண்டிபிக் ரிப்போட்' என்ற சஞ்சிகையில் வெளியிட்ட ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பொதுசுகாதார அதிகாரிகளால் நம்பப்பட்ட வழியில், நோய்க்கிருமிகள் எவ்வாறு எல்லா இடங்களுக்கும் கொண்டுசெல்லப்படுகின்றன என்பதன் கட்டமைப்பை இவை காண்பிக்கலாம் என்று நாங்கள் நம்புகிறோம்.

மிகவும் வேகமான முறையில், நோய்க் கிருமிகளைப் பரப்புவதில் ஈக்களின் பங்கும் இருக்கலாம் என்பதையும் இவை நிரூபிக்கலாம் என்கிறார் பேராசிரியர் பிரையண்ட்.

உங்களின் அடுத்த சுற்றுலாவின் போது, திறந்தவெளியில் நீங்கள் சாப்பிடப்போகும் உணவுகள் குறித்து நிச்சயம் மறுசிந்தனை செய்வீர்கள் என்றும் அவர் கூறுகிறார்.

இருந்தபோதும், ஈக்களால் சில பயன்களும் இருக்கும் என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். அவை, நோய்கள் வருவதற்கான முன்னெச்சரிக்கை அறிகுறிகளாக இருக்கலாம், அதேபோல, நுண்ணுயிரிகள் இருக்கும் இடத்தைக் கண்டறிய, அவைகள் பயன்படும் என்றும் அவர்கள் கருதுகிறார்கள்.

சொல்லப்போனால், இந்த ஈக்கள் உயிருள்ள தானியங்கி டிரோன்களாக, மிகவும் குறுகிய இடங்களில் கூட உயிரியல் விடயங்கள் உள்ளனவா என்பதை கண்டறிய அனுப்பப்படலாம் என்கிறார், சிங்கப்பூரில் உள்ள நான்யாங் பல்கலைக்கழக ஆய்வாளரான ஸ்டீஃபன் ஸ்டர்.

குப்பைகளில் உட்காருதல், மக்கிப்போன உணவுகள், மிருகங்கள், அதன் கழிவுகளை உண்ணுதல் உள்ளிட்ட மோசமான பழக்கவழக்கங்களுக்காக இந்த ஈக்கள் அறியப்படுப்பவையாகும்.

அவை, மனிதர்கள், விலங்குகள் மற்றும் செடிகளைத் தாக்



கும் பல நோய்களை பரப்புகின்றன எனச் சந்தேகிக்கப்படுகின்றது.

இறந்த மிருகங்களுக்கு அருகில் அதிகம் காணப்படுபவையே இந்த நீல நிற ஈக்கள். அவை, புறநகர் பகுதிகளில் அதிகம் காணப்படுபவை.

# சிறிலங்காவில் சீனாவின்...

(09 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

அத்துடன், சீனாவின் செல்வாக்கு சிறிலங்காவில் அதிகரித்திருந்த நிலையில் சீனாவுடன் நெருங்கிய உறவைப் பேணியதுடன் இந்தியாவுடனான அரசியல், மூலோபாய மற்றும் பாதுகாப்பு உறவை முறித்துக் கொண்ட சிறிலங்காவின் முன்னாள் அதிபர் மந்த ராஜபக்ஷ தேர்தலில் தோல்வியடைந்த காலப் பகுதியில் நரேந்திர மோடி சிறிலங்காவிற்குப் பயணம் செய்தமை மிகவும் முக்கியத்து வம் வாய்ந்ததாகும்.

குறிப்பாக சிறிலங்கா துறைமுகத்தில் சீனாவின் நீர்மூழ்கிக் கப்பல்கள் மீண்டும் மீண்டும் தரித்து நின்ற போது இந்தியா அதனை எதிர்த்திருந்தது.

சீனாவை இந்தியா எதிர்த்த போதிலும் முற்றுமுழுதாக இந்தியாவால் சீனாவை ஓரங்கட்ட முடியவில்லை. ஏனெனில் இந்தியாவும் சீனாவும் வருடாந்தம் 71.5 பில்லியன் டொலர் வர்த்தகத்தில் ஈடுபடு கின்றன. இன்று சீனா இந்தியாவின் மிகப் பெரும் வர்த்தகப் பங்காளி நாடாக உள்ளது.

கடந்த ஆண்டு சீனாவிடமிருந்து இந்தியா 61.3 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருள்கள் இறக்குமதி செய்யப்பட்டதுடன்,



சீனாவிற்கு இந்தியா 10.2 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. இவ்விரு நாடுகளுக்கும் இடையிலான வர்த்தகச் செயற்பாடுகள் சில ஆண்டுகளுக்கு முன்னர் 37.2 பில்லியன் அமெரிக்க டொலராகக் காணப்பட்டது.

ஆனால் இன்று இத்தொகை 51.1 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது. ஆகவே, இப்புள்ளிவிவரமானது இந்தியாவின் கணிசமான பொருளாதாரம் சீனாவுடனான வர்த்தகத்தில் தங்கியுள்ளதைச் சுட்டிநிற்கிறது.

இந்தியா தனது கட்டுமான அபிவிருத்திக்காகவும் சீனாவை எதிர்பார்க்கின்றது.

அடுத்தபத்தாண்டில் இந்தியாவின் கட்டுமா ன அபிவிருத்திக்காக 1.5 மில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகிறது. இந்தியாவில் 70,000 கிராமங்கள் உள்ளன.

2019 அளவில் இக்கிராமங்களை ஒன்றுடன் ஒன்று இணைக்கும் செயற்திட்டம் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது என கடந்த ஆண்டு சீனாவில் இடம்பெற்ற AIIB இன் ஆளுநர்கள் சபையின் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இந்தியாவின் நிதி அமைச்சர் அருண் ஜேட்லி தெரிவித்திருந்தமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கதே.

★

காலைக்கதிர் Kalaikkathir



# எந்த வேட்பாளரையும் நான் ஆதரிக்கவில்லை

சென்னை,டிசெ.10

ஆர்.கே.நகர் தேர்தலில் எந்த வேட்பாளரையும் தான் ஆதரிக்கவில்லை என்று நடிகர் விஷால் கூறியுள்ளார்.

நடிகர் விஷால் நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில் கூறியவை வருமாறு:-

ஆர்.கே. நகர் சட்டமன்ற இடைதேர்தலில் நான் போட்டியிட மனுத் தாக்கல் செய்தது எனது சுய சிந்தனையின் உந்துதலால் எடுத்த முடிவு. ஆர்.கே. நகர் மக்களுக்காக பணியாற்றவே இந்த முடிவை எடுத்தேன். ஆனால் ஆதிக்க அரசியல் சக்திகளால் ஜனநாயகம் சிதைக்கப்பட்டு என் மனு நிராகரிக்கப் பட்டிருக்கிறது. எனக்கு நேர்ந்த அநீதிக்கு மக்கள் மன்றமே சாட்சி. ஆர்.கே. நகரில் போட்டியிட வாய்ப்பு மறுக்கப்பட்டாலும், என்னுடைய மக்கள் பணிகளும் ஜனநாயகத்தை மீட்டெடுக்கும் போராட்டமும் தொடரும்.



விஷால்

நான் சிலரை ஆதரிக்கின்றேன் எனச் செய்தி பரப்பப்படுகிறது. நான் யாரையும் ஆதரிக்கவில்லை. அப்படி ஒரு முடிவை எடுக்கவே இல்லை. எனது போராட்டத்தில் என்னுடன் துணை நின்ற எனது ரசிகர்கள், பொதுமக்கள், பத்திரிகையாளர்கள் அனை வருக்கும் எனது நன்றிகள். அதேபோல் எனக்காக வும் நீதிக்காகவும் குரல் கொடுத்த அனைத்து தலைவர்களுக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய அடுத்தகட்ட அரசியல் நகர்வை விரைவில் அறிவிப்பேன். ஆளுங்கட்சிக்கு ஒரு கோரிக்கை வைக்கிறேன். ஆர்.கே. நகர் தேர்தல் உங்களுக்கு முக்கியம் தான். ஆனால் அதைவிட முக்கியம் கன்னியாகுமரியில் நடக்கும் குளச்சல் மீனவர்கள் போராட்டம். மீனவர்களின் வாழ்வாதாரம் மிகவும் முக்கியம் என்று தெரிவித்துள்ளார்.

# ஏமனில் சவுதி கூட்டுப்படையினரின் விமானத் தாக்குதலில் 23 பேர் சாவு





ஏமன் நாட்டின் சடா பகுதியில் சவுதிக் கூட்டுப்படைகள் நடத் திய விமானத் தாக்குதலில் 23 பேர் பரிதாபமாக பலியாகினர்.

ஏமன் நாட்டின் அரசுக்கு எதிராக ஈரானின் ஆதரவுடன் உள்நாட்டு ஹவுத்திப் புரட்சிப் படையினர் கடந்த இரண்டாண்டுகளாக ஆயுதப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் சடா உட்படப் பல பகுதிகளைத் தங் கள் கட்டுப்பாட்டுக்கள் வைத்து அந்தப் பகுதிகைளைச் சுற்றி சோதனைச் சாவடிகள் அமைத் துள்ளனர்.

சர்வதேச ஆதரவு பெற்றுள்ள ஏமன் அரசுக்குச் சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படை கள் ஆதரவு அளித்து வருகின்றன. அவர்கள் ஹவுத்திக் கிளர்ச்சியா ளர்களைக் குறிவைத்து விமானத் தாக்குதல்களை நடத்தி வருகின் றனர். இந்தத் தாக்குதலில் சில வேளைகளில் அப்பாவிப் பொது மக்களும் கொல்லப்படுகின்றனர்.

இந்த நிலையில், ஏமனின் வட மேற்குப் பகுதியில் அமைந்துள்ள சடா நகரில் ஹவுத்திப் புரட்சிப் படையினரைக் குறிவைத்துச் சவுதி கூட்டுப்படைகள் நேற்று முன்தினம் விமானத் தாக்குதல் நடத்தினர். இதில் பெண்கள், குழந் தைகள் உட்பட 23 அப்பாவிப் பொதுமக்கள் உயிரிழந்தனர்.

மத்திய கிழக்கு நாடுகளான ஏமன், சிரியா, ஈராக் மற்றும் லெப னானில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட ஈரான் மற்றும் சவுதி அரேபியா நாடுகள் முயற் சித்து வருகின்றன. அரசுப் படைக ளுடன் புரட்சிப் படையினர் நடத்தி வரும் மோதலில் இதுவரை பத் தாயிரத்துக்கும் அதிகமான பொது மக்கள் உயிரிழந்துள்ளமை குறிப் பிடத்தக்கது.

## கட்டுங்கடங்காமல் தொடரும் கலிபோர்னியாக் காட்டுத் தீ



439 கட்டடங்கள் எரிந்து நாசம்

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தின் சண்டியாகோ, சண்டா அனா உள்ளிட்ட பகுதிகளில் காட்டுத் தீ வேகமாகப் பரவி வருகிறது. இப்பகுதியில் 439 வீடுகள் மற்றும் கட்டடங்கள் தீயில் எரிந்து நாசமாயின.

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாணத்தில் காட்டுத் தீ பரவி வருகிறது. இதனால் வனப்பகுதி யை ஒட்டியுள்ள லொஸ்ஏஞ்சல்ஸ் நகரில் இருந்து 2 லட்சம் மக்கள் வெளியேற்றப்பட்டுள்ளனர்.

வீடுகள் மற்றும் தங்கும் விடுதிகள் எரிந்து நாச மாயின. பல லட்சம் மதிப்புள்ள பொருள்கள் சேதம் அடைந்தன. மேலும் லொஸ் ஏஞ்சல்ஸ் வட கிழக்கில் உள்ள வெஞ்சுரா கண்ரிப் பகுதியில் 466 சதுர கிலோ மீற்றர் பரப்பளவில் காட்டுத் தீ எரிகிறது. இப்பகுதியில் 439 வீடுகள் மற்றும் கட்டடங்கள் தீயில் எரிந்து சாம்பராயின.

சண்டியாகோவில் பந்தய குதிரைகள் பயிற்சி மையம் உள்ளது. இங்கு பந்தயக் குதிரைகளின் இனப்பெருக்க மையமும் செயற்படுகிறது. தற்போது எரியும் காட்டுத் தீயில் சிக்கி 15 பந்தயக் குதிரைகள் கருகி உயிரிழந்துள்ளன.

தீ கட்டுக்கடங்காமல் எரிகிறது. தீயை அணைக்கும் முயற்சியில் தீயணைப்புப் படை வீரர்கள் ஈடுபட் டுள்ளனர்.

## ரசிகர்களை மீண்டும் சந்திக்கிறார் ரஜனிகாந்த்

நடிகர் ரஜனிகாந்த் இந்த மாத இறுதியில் ரசிகர்களைச் சந்திக்க உள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.


நடிகர் ரஜனிகாந்த் அரசியலில் ஈடுபடுவது பற்றிய விவாதங்களும் எதிர்பார்ப்புகளும் 1996 இல் தி.மு.க. - த.மா.க கூட்டணியை அவர் உரு வாக்கிஆட்சியில் அமர்த்தியதில் இருந்து தொடர்ந்து வருகிறது.

கடந்த மே மாதம் கரூர், திண்டுக்கல், கன்னியா குமரி, திருச்சி, தஞ்சாவூர், திருவாரூர் உள்ளிட்ட 15 மாவட்ட ரசிகர் மன்ற நிர்வாகிகளைச் சென் னைக்கு அழைத்து அவர்கள் மத்தியில் அரசியல் தொடர்பாகப் பேசியது எதிர்பார்ப்பை மேலும் வலுவாக்கியது.

நான் அரசியலுக்கு வந்தால் பணம் சம்பா திக்க நினைப் பவர்களைப் பக்கத்தில் சேர்க்க மாட்டேன். போருக்குத் தயாராக இருங்கள் என்றெல்லாம் பேசி அரசியல் எண்ணங்களை வெளிப்படுத்தினார்.

ரஜனிகாந்த் கட்சிப் பெயரைத் தேர்வு செய்து வருகின்றார் எனவும், அடுத்த மாதம் அறிவித்து விடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில், இம்மாத இறுதியில் விடுபட்ட 16 மாவட்டங்களைச் சேர்ந்த ரசிகர் மன்ற நிர்வாகி களை 6 நாள்கள் சந்தித்துப் பேச ரஜனிகாந்த் திட்டமிட்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

# வடகொரியாவின் மிரட்டலை சமாளிக்க ஜப்பானின் திட்டம்



ரோக்கியோ,டிசெ.10

வட கொரியாவின் மிரட்டலைச் சமாளிக்க ஜப்பான் நீண்ட தூரம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்த ஏவுகணைகளை அமெரிக்க நிறு வனத்திடம் இருந்து வாங்கத் திட்டமிட்டுள்ளது.

அமெரிக்கா, ஜப்பான், தென் கொரியா உள்ளிட்ட நாடுகளுக்கு வட கொரியா சிம்ம சொப்பனமாக உள்ளது. இந்த நாடுகளை மிரட்டும் வகையில் தொடர்ந்து அணு குண்டுச் சோதனைகளையும், ஏவுகணைச் சோதனைகளையும் நடத்துகின்றது.

இதனால் கொரிய தீபகற்பத்தில் போர் பதற்றம் நிலவுகிறது. சமீப காலமாக பசிக் கடலில் உள்ள அமெரிக்கப் பிராந்தியத்தைத் தாக்கும் வகையில் கண்டம் விட்டுக் கண்டம் பாய்ந்து சென்று தாக்கும் நீண்ட தூர ஏவுகணைகளை வீசி வடகொரியா ஏவுகணைச் சோதனை நடத்தி வருகிறது.

இந்த ஏவுகணைகள் ஜப்பான் நிலப்பரப்பின் மீது பறந்து சென்று குறிப்பிட்ட இலக்கை அடை கிறது. வடகொரியாவின் இத்தகைய நடவடிக்கை ஜப்பானுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தலை ஏற்படுத்தி யுள்ளது.

எனவே வட கொரியாவின் மிரட்டலைச் சமாளிக்க ஜப்பான் நீண்ட தூரம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்த ஏவுகணைகளை அமெரிக்க நிறுவ னத்திடம் இருந்து வாங்க திட்டமிட்டுள்ளது.

ஜெ.ஏ.எஸ்.எஸ்.எம். மற்றும் எல்.ஆர்.ஏ.எஸ்.எம். எனப்படும் நீண்ட தூரம் பாய்ந்து சென்று தாக்கும் ஏவுகணைகளை அமெரிக்காவிடம் இருந்து வாங்கு கிறது. இவை விண்ணில் இருந்து பூமியை நோக்கிச் செலுத்தக் கூடியவை. 900 கிலோமீற்றர் தூரம் பாய்ந்து சென்று தாக்கும் திறன் படைத்த இந்த ஏவுகணை களைப் போர் விமானங்களில் இருந்து செலுத்த முடியும்.

அதேபோன்று 500 கிலோ மீற்றர் தூரம் பறந்து சென்று தாக்கும் கங்ஸ்பெர்க் என்ற ஏவுகணையை நோர்வேயிடம் இருந்து வாங்குகிறது. இந்தத் தக வலை ஜப்பான் ராணுவ அமைச்சர் இட்ஸ்னோரி அனோடெரா தெரிவித்துள்ளார்.

(ப)

# மகள்மாரே பொறாமைப்படும் ‘கறுப்பு அழகி’ இந்த அம்மா!



கியெனியா புக்கர் இன்ஸ்டாகிராம் மூலம் பிரபலமாக இருக்கிறார். 40 வயதான இவருக்கு, பதின்மப் பருவத்தில் இரண்டு மகள்கள் இருக்கிறார்கள். இவர் வெளியிடும் ஒளிப்படங்களில் யார் அம்மா, யார் மகள் என்பதே கண்டுபிடிக்க முடிவதில்லை. அவ்வளவு இளமையாகக் காட்சியளிக்கிறார்.

18, 16 வயது மகள்களோடு விதவிதமாகப் படங்கள் எடுப்பேன். பிறகு அவற்றை வெளியிடுவேன். என் மகள் லினியாவின் கல்லூரி மாணவர்கள் எல்லோரும் என்னை அவளது அக்கா என்றுதான் நினைக்கிறார்கள். அவர்களிடம் மகள்களின் குழந்தைப் பருவப் படங்களில் நான் இருப்பதைக் காட்டித்தான், நம்ப வைக்கிறேன். ஒரு சிலர், என் மகள்களை விட இளையவளாக நினைக்கின்றனர். அவர்கள் என் அக்காவா என்று கேட்கும்போது மட்டும் மகள்கள் கொஞ்சம் பொறாமைகொள்வார்கள் என்கிறார் புக்கர்.

# வரலாற்றையே மாற்றக்கூடிய இரத்தினக்கல் செதுக்கல்



அமெரிக்காவின் சின்சினாட்டி பல் கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்களால் கிரேக்க நாட்டின் பைலோஸ் நகரில் ஒரு கல்லறை கண்டு பிடிக்கப்பட்டது. வெண்கலக் காலத்தைச் சேர்ந்த இந்தக் கல்லறையில், 2015ஆம் ஆண்டுப் பொருள்கள் பல கண்டெடுக்கப்பட்டன. நகைகள், பாதுகாப்பு கவசங்கள், ஆயுதங்கள், விலை உயர்ந்த கற்களில் செய்யப்பட்ட சிற்பங்கள் ஆகியவை கிடைத்தன. சுமார் 3ஆயிரத்து500ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தப் பொருள்களில் இருந்து, மிக அழகான சிற்பம் ஒன்று கிடைத்திருக் கிறது. 3.6 சென்ரி மீற்றர் அளவுள்ள ரத்தினக்கல் ஒன்றில் இந்தச் சிற்பம் செதுக்கப்பட்டிருப்பதுதான் உலகை வியக்க வைத்திருக்கிறது. உருப் பெருக்கி மூலம் பார்த்தால்தான் இச் சிற்பம் தெரியும்.

சுண்ணாம்புப் பொருளால் மூடப் பட்ட இந்த ரத்தினக்கல்லை மிகக் கவனமாகச் சுத்தம் செய்து, சிற்பத்தைக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இதன் மூலம் கலைகளைப் பற்றிய வரலாற்றை மாற்றி எழுத வேண்டும் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

இந்தச் சிற்பத்தில் இருவர் நேருக்கு நேர் வாள் சண்டையிடுகிறார்கள். இன் னொருவர் சண்டையில் தோற்றுக் கீழே விழுந்து கிடக்கிறார். வீரர்கள் திடகாத் திரமான உடலுடன் காட்சி தருகிறார்கள். எந்தத் தொழில் நுட்பமும் இல்லாத காலகட்டத்தில், மிகச் சிறிய இடத்துக்குள் இவ்வளவு நுணுக்கமான ஒரு சிற் பத்தை எப்படி வடிக்க முடிந்தது என்று எல்லோரும் வியக்கின்றனர்.

கிரேக்க கலைகளைப் பற்றிய வரலாறு, இப்போது இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னோக்கிச் சென்று விட்டது. கிரேக்கத்தின் பாரம்பரி யம் சுமார் 3ஆயிரத்து500 ஆண்டுகளுக்கு முன்பே தொடங்கிவிட்டதை இந்தச் சிற்பம் எடுத்துக்காட்டிவிட்டது. சில நுட்பமான விடயங்கள் அரை மில்லி மீற்றருக்குள் வடிக்கப்பட்டதை என்ன வென்று சொல்வது?

இனி வரக்கூடிய வரலாற்றுப் புத் தகங்களில் சிற்பக் கலையின் வரலாறு மாற்றி எழுதப்படும். கல்லறையில் இருந்து 3 ஆயிரம் பொருள்கள் கிடைத் திருக்கின்றன. இவற்றில் இந்தச் ‘சண்டை இரத்தினக்கல்’ போன்று 50 கற்கள் கிடைத்திருக்கின்றன. இன்னும் ஆராய்ச் சிகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. அவற்றில் இருந்தும் உலகத்துக்குச் சுவாரசியமான விடயங்கள் கிடைக் கலாம் என்கிறார் கிரேக்க தொல்லியல் துறை பேராசிரியர் ஜேக் டேவிஸ்.

# கூரையைப் பிய்த்துக் கொண்டு கொடுக்கிறது என்பது இதுதானோ...?



சீனாவில் தனது பண்ணையில் கண்டெடுத்த பன்றியின் பித்தப்பைக் கல் மூலம் விவசாயி ஒருவர் கோடீஸ்வரர் ஆன சம்பவம் அப்பகுதியில் பெரும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

சீனாவில் 51 வயது விவசாயி ஒருவர் தனது பண்ணையில் உள்ள விவசாய நிலத்தில் விதை விதைப்பதற்காக நிலத்தை உழுதார். அப்போது வித்தியாசமான கல் போன்ற பொருள் கிடைத்தது.

அது 4அங்குலம் நீளமும், 2.5 அங் குலம் அகலமாகவும் இருந்தது. அதன் மீது அடர்த்தியாக ரோமங்கள் மூடி இருந்தன. அது பற்றிய விவரங்கள் தெரியாமல் தனது நண்பர்களிடம் விவாதித்தார். அப்போது பன்றியின் பித்தப்பையில் உருவாகிய ‘கல்’ எனத் தெரிய வந்தது.

அதை ‘கோரோசனை’ என்றும் அழைப்பார்கள். இது பலவிதமான நோய் களையும் தீர்க்கும் ஒரு மருந்தாகும். மேலும் உடலில் சுரக்கும் நச்சுகளை வெளியேற்றும் தன்மை உடையது. எனவே இதை மருந்துகளில் கலக்கப் பயன்படுத்துகிறார்கள்.

சீனாவில் இது விலை மதிக்க முடி யாதது. விவசாயியிடம் கிடைத்துள்ள இந்தப் பன்றிப் பித்தப்பைக் கல் 18 கோடி ரூபா விலை போகும் என கணிக் கப்பட்டுள்ளது.இதன் மூலம் இவர் திடீர் கோடீஸ்வரர் ஆகி விட்டார்.

# மனித இறைச்சிக்கும் மவுசு?



ஜப்பானில் மனித இறைச் சியை விதம் விதமாகச் சமைத்து ஹோட்டல் ஒன்றில் விற்பனை செய்யப்படுகின் றது எனச் செய்திகள் வெளி யானமை பரபரப்பை ஏற்படுத் தியுள்ளது.

ஜப்பான் அரசு சில நாள்களுக்கு முன்பு மனித இறைச்சி விற்பனை செய்ய அனுமதி அளித்துள்ளது என வும், அதைத் தொடர்ந்து டோக்கியோ வில் உள்ள சாப்பாட்டுச் சகோதரர்கள் என்ற ஹோட்டல் மனித இறைச்சி யைச் சமைத்து விற்பனை செய்கின்றது எனவும் தகவல்கள் வெளியானது.

மனித இறைச்சியில் விதம் விதமாகச் சமைத்து இங்கு விற்பதாகவும் 8 ஆயிரம் ரூபா முதல் 80 ஆயிரம் ரூபா வரை உணவுகள் கிடைக்கின்றன எனவும் அந்தச் செய்தியில் கூறப்பட்டது.

மரணம் அடைந்த 30 வயதுக்கும் குறைவான, நோய் இல் லாத உடலை 8 லட்சம் ரூபா கொடுத்து வாங்கி உணவு தயா ரிக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டது.

தற்போது, அந்தச் செய்தியில் முழுவதுமாகக் கட்டுக்கதை என இப் போது புதிய தகவல்கள் வெளியாகி யுள்ளன.

# அந்த மிருகத்துக்கும் அரசியல் பிரச்சினையா?



நியூயோர்க் நகரின் முக்கிய மதுக்கடை ஒன்றில் புகுந்த ‘ஒப்பசம்சு என்ற மிருகம் மதுப் போத்தல்களைத் திருடிக் குடித்த சம்பவம் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

அமெரிக்காவில் ‘ஒப்பசம்சு என்ற அரிய மிருகம் காணப்படுகிறது. இது மரங்களில் வாழ்கிறது. அணிலும், எலியும் சேர்ந்த கலவையாக இது உள்ளது.

இது குறும்புத் தனம் மிக்கது. மனிதர் களையும் கடித்துத் தாக்குகிறது. இந்த நிலையில் இது நியூயோர்க் நகரின் முக்கிய மதுக்கடை ஒன்றில் புகுந்தது.

கடை மூடப்பட்ட பின் ஒரு முழுப் போத்தல் மதுவைக் குடித்தது. போதை தலைக் கேறியதும் ரகளையில் ஈடுபட்ட அந்த மிருகம் போத்தல்களை உடைத்து மதுக்கடையைச் சூறையாடியது. ஏற்கனவே இது போன்ற பிரச்சினையில் சிக்கி உள்ளது.

தற்போது இந்த விலங்கை பிடித்துச் சிறிய கூண்டில் அடைத்து வைத்துள்ளனர். அதன் காரணமாக அது இணையம் மூலம் அமெரிக்க மக்கள் மத்தியில் பிரபலமாகி உள்ளது.

இது தொடர்பாகப் பலர் தங்களது கருத்துக்களை சுவாரசியமாகவும், கிண்ட லாகவும் பதிவு செய்துள்ளனர். அந்த மிருகம் எப்படிப் போத்தலைத் திறந்து இருக்கும்? என ஒருவர் சந்தேகம் கிளப்பியுள்ளார். மற்றொரு நபரோ, இங்கு நடக்கும் அரசியல் பிரச்சினை தாங்காமல் நொந்து போய் மது குடித்து இருக்கிறது எனக் கேலி செய்துள்ளார்.

# இந்தியா – இலங்கை முதல் ஒருநாள் போட்டி இன்று; பணிந்து விடுமா, பகை தீர்க்குமா இலங்கை?

இலங்கை கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரு அணிகள் இடையேயான 3 டெஸ்ட் கொண்ட தொடரை இந்திய அணி 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இந்தியா - இலங்கை அணிகள் இடையேயான 3 ஒரு நாள் தொடரில் முதல் ஆட்டம் இமாச்சல பிரதேச மாநிலம் தர்மசாலாவில் இன்று ஆரம்பமாகின்றது.

டெஸ்ட் தொடரை வென்றது போல் ஒருநாள் தொடரையும் கைப்பற்றும் ஆர்வத்துடன் இந்திய அணி உள்ளது.

கப்டன் விராட் கோஹ்லி ஒருநாள் மற்றும் 20 ஓவர் தொடரில் ஆடவில்லை. அவரது விருப்பத்துக்கு ஏற்றவாறு ஓய்வு கொடுக்கப்பட்டுள்ளது. அவர் டெஸ்ட் தொடரில் ஹட்ரிக் சதம் அடித்து முத்திரை பதித்து இருந்தார்.

விராட் கோஹ்லி இல்லாதமையால் ரோகித் சர்மா அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார். கோஹ்லி இல்லாத இந்திய அணி அதே உத்வேகத்துடன் விளையாடி இலங்கையை வீழ்த்துமா? என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்திய அணி கடந்த ஆண்டு ஜூன் மாதத்தில் இருந்து ஒருநாள் தொடரை இழந்தது இல்லை. தொடர்ச்சியாக 7 ஒருநாள் தொடரைக் கைப்பற்றியிருந்தது.சிம்பாப்வே (3:0), நியூஸிலாந்து (3:2), இங்கிலாந்து (2:1), மேற்கிந்தியத்தீவுகள் (3:1),







இலங்கை (5:0), ஆஸ்திரேலியா (4:1), நியூஸிலாந்து (2:1) ஆகிய அணிகளை வீழ்த்தி இருந்தது. சிம்பாப்வே, மேற்கிந்தியத்தீவுகள், இலங்கை ஆகிய 3 அணிகளை மட்டும் அவ் அணிகளின் சொந்த மண்ணில் வீழ்த்தியிருந்தது. மீதியுள்ள 4 ஒரு நாள் தொடரைச் சொந்த மண்ணில் வென்றது.

இந்திய அணி தற்போது இலங்கையை வீழ்த்தித் தொடர்ச்சியாக 8ஆவது ஒருநாள் தொடரை வெல்லும் ஆர்வத்துடன் இருக்கிறது.

டெஸ்ட் தொடரை இழந்த இலங்கை அணி ஒருநாள் தொடரைக் கைப்பற்றி இந்தியாவுக்குப் பதிலடி கொடுக்கும் வேட்கையில் இருக்கின்றது. மேலும் சொந்த மண்ணில் கடந்த ஓகஸ்ட் மாதம் வையிட்வோஷ் (0:5) ஆகி இருந்ததால் அதற்குப் பழிதீர்க்கும் ஆர்வத்துடனும் இருக்கின்றது.

ஒருநாள் போட்டிக்கான இலங்கை அணியில் பல்வேறு அதிரடியான மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. திசர பெரேரா தலைமையிலான இலங்கை அணி என்ன செய்யப்போகின்றது என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

## 19ஆவது சதம் 800 சிக்ஸர்கள்




பி.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் நேற்று முன்தினம் நடந்த ஆட்டத்தில் ரங்பூர் ரைடர்ஸ் அணிக்காகக் களம் இறங்கிய கிறிஸ் கெய்ல் ஒட்டுமொத்த 20 ஓவர் கிரிக்கெட்டில் தனது 19ஆவது சதத்தைப் பதிவு செய்தார்.

ஐ.பி.எல். போன்று பி.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் நடந்து வருகிறது. இதில் குல்னா டைட்டன்ஸுக்கு எதிரான முதலாவது தகுதிச் சுற்றில் ரங்பூர் ரைடர்ஸ் அணிக்காகக் களம் இறங்கிய மேற்கிந்திய அதிரடி மன்னன் கிறிஸ் கெய்ல் ருத்ரதாண்டவம் ஆடினார்.

51 பந்துகளில் 14 சிக்ஸர்கள், 6 பவுண்டரியுடன் 126 ஓட்டங்கள் விளாசியதுடன் 168 ஓட்டங்கள் இலக்கையும் 15.2 ஓவர்களிலேயே எட்ட வைத்தார். பி.பி.எல். போட்டியில் கெய்லின் 4ஆவது சதமாகும். ஒட்டுமொத்த 20 ஓவர் கிரிக்கெட்டில் தனது 19ஆவது சதத்தைப் பதிவுசெய்ததுடன், 800 சிக்ஸர் அடித்த முதல் வீரர் என்ற சாதனைக்கும் 38 வயதான கெய்ல் சொந்தக்காரர் ஆனார்.

## குயரிரோவுக்கு வந்த சோதனை

கடந்த ஒக்ரோபர் மாதம் ஊக்க மருந்துச் சோதனையில் சிக்கிய பெரு உதைபந்து அணியின் கப்டன் பப்லோ குயரிரோவுக்கு ஓராண்டு தடை விதித்து சர்வதேச உதைபந்து சம்மேளனம் உத்தர விட்டுள்ளது.

பெரு உதைபந்து அணியின் கப்டன் 33 வயதான பப்லோ குயரிரோவிடம் கடந்த ஒக்ரோபர் மாதம் அர்ஜென்டினாவுக்கு எதிரான ஆட்டம் முடிந்ததும் சிறுநீர் மாதிரி சேகரிக்கப்பட்டு ஊக்க மருந்து சோதனை நடத்தப்பட்டது. சோதனை முடிவில் அவர் ஊக்கமருந்து பயன்படுத்தியது தெரிய வந்துள்ளது.

இதையடுத்து அவருக்கு ஓராண்டு தடை விதித்து சர்வதேச உதைபந்து சம்மேளனம் உத்தர விட்டது. அவரது தடைக் காலம் கடந்த மாதம் 3ஆம் திகதியில் இருந்து கணக்கிடப்படும். இதன் மூலம் அவர் அடுத்த ஆண்டு ஜூன்-ஜூலை மாதம் ரஷ்யாவில் நடக்கும் உலகக்கிண்ண உதைபந்துப்



போட்டியில் பங்கேற்க முடியாது. குயரிரோ பெரு அணிக்காக அதிக கோல்கள் (88 ஆட்டத்தில் 33 கோல்) அடித்தவர் ஆவார். 36 ஆண்டுகளுக்கு பிறகு அந்த அணி உலகக்கிண்ணத் தொடருக்குத் தகுதி பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## என்னை விடச் சிறந்த வீரர் யாரும் இல்லை – ரொனால்டோ பெருமிதம்



தங்கப்பந்து விருதை ஐந்தாவது முறையாகக் கைப்பற்றிய ரொனால்டோ, உதைபந்து வரலாற்றில் என்னை விடச் சிறந்த வீரர் யாரும் இல்லை என்று தெரிவித்துள்ளார். போர்த்துக்கல் உதைபந்து அணிக் கப்டன் கிறிஸ்டியானோ ரொனால்டோ. 32 வயதாகும் இவர் ஸ்பெயின் நாட்டின் முன்னணி அணியான ரியல் மட்ரிட் அணிக்காக விளையாடிவருகிறார். நேற்றுமுன்தினம் நடைபெற்ற விருது வழங்கும் விழாவில் 5ஆவது முறையாகத் தங்கப்பந்து விருதைப் பெற்று மெஸ்ஸியின் சாதனையைச் சமன் செய்துள்ளார்.

தற்போதைய தலைமுறையில் கிறிஸ்டியானோ ரொனால்டோ, மெஸ்ஸி, நெய்மர் ஆகியோர் தலைசிறந்த வீரர்களாகக் கருதப்படுகிறார்கள். இந்த நிலையில் உதைபந்து வரலாற்றில் தான் சிறந்த வீரர் என்று கிறிஸ்டியானோ ரொனால்டோ கூறியுள்ளார். இதற்கு ஆதரவான கருத்துக்களும், எதிர்ப்பு கருத்துக்களும் வருகின்றன.

இதுதொடர்பாகரொனால்டோ கூறுகையில், வேறு எந்த வீரரும் என்னைப் போன்ற தனிப்பட்ட விருதுகளை அதிக அளவில் பெற்றது கிடையாது. நான் இந்த விருதை மட்டும் பற்றிப் பேசவில்லை. எல்லோருடைய முக்கியத்துவத்திற்கும் நான் மதிப்பு அளிக்கிறேன். ஆனால், என்னை விடச் சிறந்த வீரராக யாரையும் நான் பார்க்கவில்லை என்றார்.

## இணக்கத்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நேற்றுக் கூடிய பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் ஆசனப் பங்கீடு தொடர்பில் காணப்பட்ட அனைத்துப் பிரச்சினைகளுக்கும்சுமுகமானதீர்வை எட்டினர் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. யஒ

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில், தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை. சேனாதிராசா, ரெலோவின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன் ஆகியோர் இணைந்து நேற்றுப் பிற்பகல் வெளியிட்ட கூட்டு அறிக்கையில் இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

உள்ளூராட்சித்தேர்தல்தொடர்பாக, கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களான மாவை. சேனாதிராசா, செல்வம் அடைக்கலநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன் மற்றும் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சிப் பிரமுகர்களுடன் கலந்துரையாடியதன் அடிப்படையில், அனைத்துப் பிரச்சினைகளுக்கும்சுமுகமான தீர்வு எட்டப்பட்டுள்ளது.

தேர்தலுக்கான விண்ணப்பங்கள் தமிழ் அரசுக் கட்சியின் பெயரிலும், சின்னத்திலும் (வீடு) கையளிக்கப்படும்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கீழ் வீடு சின்னத்தில் போட்டியிடும், வேட்பாளர்களுக்கு முழு ஆதரவு நல்குமாறு வடக்கு-கிழக்கில் உள்ள வாக்காளர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்படுகின்றது என்று கூட்டு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உள்ளூராட்சித்தேர்தலுக்கான ஆசனப் பங்கீடு தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளுக்கு இடையே கடந்த சில தினங்களாகப் பெரும் இழுபறி நிலை இருந்து வந்தது. ரெலோ, புளொட் ஆகிய கட்சிகள் உள்ளூராட்சிச் சபைகளில் தமக்காகக் கோரிய ஆசனப் பங்கீட்டை வழங்க இலங்கைத் தமிழரசுக் கட்சி மறுத்து வருவதாகவும், அது தான் தோன்றித்தனமாகச் செயற்பட்டு வருவதாகவும் குற்றச்சாட்டுகள் எழுந்திருந்தன.

ஆசனப் பங்கீட்டு முரண்பாடு முற்றிய நிலையில் பங்காளிக் கட்சியான ரெலோ, தமிழரசுக் கட்சியின் சின்னமான வீட்டுச் சின்னத்தில் தேர்தலில் போட்டியிடுவதில்லை என்று பகிரங்கமாக அறிவித்ததுடன் வேறு சில தமிழ்க் கட்சிகளுடன் கூட்டுச் சேர்வது குறித்து ஓடி ஓடிப் பேச்சுகளிலும் ஈடுபட்டிருந்தது. ஆசனப் பங்கீட்டு விடயத்தில் தமிழரசுக் கட்சியுடன் முரண்பாடு இருந்த போதும் அதை வெளியே காட்டிக் கொள்ளாமல் மௌனம் காத்தது புளொட். இது தொடர்பில் புளொட் தலைவர் சித்தார்த்தனிடம் கேட்ட போது, தமது கட்சியின் மத்திய குழு கூடி இது தொடர்பில் முடிவெடுக்கப்படும் என்று கூறியிருந்தார்.

இந்த முரண்பாட்டு விடயம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கவனத்துக்குச் சென்றது. உடனடியாக அவர் பங்காளிக் கட்சிகளின் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு பேசினார். கூட்டமைப்பின் ஒற்றுமைகாக எந்த விட்டுக்கொடுப்பையும் செய்யத்தயாராக இருப்பதாகக் கூறிய சம்பந்தன், இது தொடர்பில் இணக்கத்தை எட்டுவதற்காக பங்காளிக் கட்சிகளின் தலைவர்களைக் கொழும்புக்கு அழைத்திருந்தார்.

பங்காளிக் கட்சிகளின் தலைவர்கள் பங்கேற்ற கூட்டம் நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது. இதில் ஆசனப் பங்கீடு தொடர்பாக நிலவிய அனைத்துப் பிரச்சினைக்கும் சுமுகத் தீர்வு எட்டப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் தலைமை வகித்தார். இதில் தமிழரசுக் கட்சியின் சார்பில் மாவை சேனாதிராசா, எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும், புளொட் சார்பில் தர்மலிங்கம் சித்தார்த்தன், ராகவன், வியாழேந்திரன் ஆகியோரும், ரெலோ சார்பில் செல்வம் அடைக்கலநாதன்,என்.ஸ்ரீகாந்தா, விந்தன் கனகரட்ணம், கருணாகரன், விநோநோகராதலிங்கம், பிரசன்னா இந்திரகுமார், ஹென்றி மகேந்திரன் ஆகியோரும் பங்கேற்றனர். (ஐ-7)

## மலசகூடக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டின் உரிமையாளர் பாவனையற்ற மலசல கூடக் குழியை புனரமைக்க முற்பட்டபோது அதில் சில வெடிபொருள்களை அவ தானித்துள்ளார். உடனடியாக 'ஹலோ ட்ரஸ்ட்' மிதிவெடியகற்றும் நிறுவனப் பணியாளர்கள் வரவழைக்கப்பட்டு அவை மீட்கப்பட்டன.

அந்த மலசலகூடக் குழியில் இருந்து வெடிக்காத நிலையிலுள்ள 90 குண்டுகள் மீட்கப்பட்டதுடன், மேலும் பல வெடிபொருள்கள் அப்பகுதியில் காணப்படுவதால் அவற்றை அகற்றும் நடவடிக்கை இன்றும் தொடரும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ஜே.ஆரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தேர்தலில் எப்படியாவது வெற்றி பெறவேண்டும், அனைவரும் அதற்குத் தயாராகவேண்டும் எனவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் பேசிய அவர்,

வெற்றியைப் பெற்றுக்கொள்ளும் வகையில் செயற்படவேண்டும். சகல பொறுப்புக்களையும் நான் ஏற்கிறேன். தேர்தலில் வெற்றி பெற முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன பயன்படுத்திய வழிமுறை குறித்து கவனம் செலுத்தப்படும்.

அதிகமான உள்ளூராட்சிச் சபைகளை கைப்பற்றவேண்டும் என்பது எனது எதிர் பார்ப்பு- என்றார். (ஐ)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காத்தான்கோட்டம், தாஸ்கோட்டம், ஊர்மிளாகோட்டம், கூமாங்குளம் போன்ற பகுதியிலுள்ள இளைஞர்களுக்குக் கஞ்சா விற்பனை செய்யப்படுவதாக நெளுக்குளம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து நெளுக்குளம் பொலிஸ் பொறுப்பதிகாரி ஏ. எம். எஸ். அத்தநாயக்க தலைமையிலான குழுவினர் தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது நேற்று மாலை குருமாட்டுச்சந்தி கள் விற்பனை நிலையத்துக்கு அருகாமையில் கஞ்சா வியாபாரத்தில் ஈடுபட்டிருந்த குற்றச்சாட்டில் காத்தான் கோட்டம் பகுதியைச் சேர்ந்த 32 வயதுடைய மகேஸ்வரராஜா (ரமேஸ்) என்பவரை நெளுக்குளம் பொலிஸார் கைது செய்தனர்.

அவரிடம் இருந்து ஒரு பொதியில் 10 கிராம் வீதம் 5பொதிகளைப் பொலிஸார் கைப்பற்றினர். அவர் மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (ஐ-100)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து முல்லைத்தீவுச் சென்ற கு.செல்வக்குமார், சு.பாஸ்கரன், த.பிரதீபன், த.விநோஜித், வி.கஜீபன், சி.நிதர்சன், க.ஹம்சனன், க. சபேஸ் ஆகிய ஊடகவியலாளர்களே இவ்வாறு அச்சுறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர்.

முல்லைத்தீவில் சிங்களமயமாக்கல் தொடர்பில் செய்தி மற்றும் ஆவணப்படுத்தல் பணிகளுக்காக யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஊடகவியலாளர்கள் நேற்று அங்கு சென்றிருந்தனர்.

இதன்போது அவர்கள் தண்ணீர்முறிப்புப் பகுதிக்கும் சென்றிருந்தனர்.

தண்ணீர் முறிப்புக் குளத்தில் தாமும் தொழிலில் ஈடுபட அனுமதிக்குமாறு சிங்கள மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்டச் செயலரிடம் கோரிக்கை விடுத்திருந்தனர். இருப்பினும் அந்தக் கோரிக்கையை மாவட்ட செயலர் அடியோடு நிராகரித்திருந்தார்.

ஆயினும் சிங்கள மீனவர்கள் இராணுவப் பாதுகாப்புடன் அந்தக் குளத்தில் தொழிலில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தமிழ் மற்றும் சிங்கள மீனவர்களுக்கு இடையில் முறுகல் நிலை தொடர்ந்து வந்தது.

இது தொடர்பில் ஊடகவியலாளர்கள் அங்கு சென்று தகவல்களை திரட்டியதுடன், அது தொடர்பாகப் புகைப்படங்கள், வீடியோக்களையும் பதிவு செய்திருந்தனர்.

தண்ணீர் முறிப்புக் குளப் பகுதியில் நீர்ப்பாசனத் திணைக்களத்திற்குச் சொந்தமான காணியை ஆக்கிரமித்து நிலை கொண்டுள்ள இராணுவம், குளத்தில் அத்துமீறித் தொழிலில் ஈடுபடும் சிங்கள மீனவர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் வகையில் குளக் கட்டில் அமைத்துள்ள காவலரண் குறித்தும் ஊடகவியலாளர்கள் செய்தி திரட்டினர்.

இதன்போது அங்கு சைக்கிளில் வந்த இராணுவச் சிப்பாய் ஒருவர் ஊடகவியலாளர்களை விசரித்துள்ளார். தாங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த ஊடகவியலாளர்கள் என அவர்கள் தெரி வித்ததை அடுத்து அங்கிருந்து அவர் விலகிச் சென்றார். பின்னர் அவர் மேலும் மற்றுமொரு இராணுச் சிப்பாயை அழைத்துக்கொண்டு அங்கு வந்தார். மீண்டும் அவர்களை விசாரித்தார். தாம் ஊடகவியலாளர்கள் என்பதை அவர்கள் உறுதிப்படுத்தினர். ஆயினும் அவர்களை அங்கு தடுத்து வைத்த

பக்கம் 03 »

## ஊடகங்களை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களையும் வன்முறைகளைத் தோற்றுவிக்காதவகையில் சமூகப் பொறுப்புணர்வுடன் அரச மற்றும் தனியார் நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்க் கட்சிகளின் பிரதம கொறடாவும், ஜே.வி.பியின் தலைவருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2018 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் நிதி மற்றும் ஊடக அமைச்சு கள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு உரை யாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சமூக மட்டத்தில் ஊடகங்கள் பாரிய வளர்ச்சி கண்டுள்ளன. சமூக நிலையில் ஊடகம் வளர்ச்சி கண்டுள்ளபோதிலும் அந்த வளர்ச்சியை சமூக நலனுக்காக பயன்படவில்லை. அரசியல்வாதிகளின் கீழ் இயக்கப்படும் ஊடகங்கள் முற்றிலும் அரசியல் மயப்படுத்தப்பட்டதாக உள்ளன.

முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் ஊடகங்களின் செய்தி வெளியீடுகள் அமைந்துள்ளன. தொலைகாட்சி அரசியல் நிகழ்ச்சிகள் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் உள்ளன. மோசடிக்காரர்களை ஊடகங்கள் வெளிப்படுத்தும் அதே நேரத்தில் அதே ஊடகங்கள் அந்த மோசடிக்காரர்களை வீரர்களாகக் காண்பிக்கின்றன.

நாட்டின் நலனுக்காக ஊடகவியலாளர்கள் தமது பேனாவை பயன்படுத்த வேண்டும். நாட்டின் பிரஜைகளின் மனோநிலையை மாற்றவேண்டும். ஊடகங்களால் பிரஜைகளின் மனநிலையில் மாற்ற வேண்டிய தார்மீகப் பொறுப்பு உள்ளது. சமூகத்தில் முரண்பாடுகள் தோற்றம் பெறுவதற்கு ஊடகங்களே பிரதான காரணமாகவுள்ளன. அரசியல்வாதிகள் ஊடகங்களை வழிநடத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. சமூகத்தின் முரண்பாடுகளையும் வன்முறைகளை தோற்றுவிக்காத வகையில் சமூகப் பொறுப்புணர்வுடன் அரசமற்றும் தனியார் நடந்துகொள்ள வேண்டும் - என்றார். (ஐ)

## அரசியல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொஞ்சமாவது வரலாறு அல்லது அந்தக் கட்சியின் நிகழ்வுகளைத் தெரிந்து கொண்டு விமர்சனம் செய்யவேண்டும். அரசியல் காழ்ப்புணர்ச்சிக்காக அப்பட்டமான பொய்களை அவிழ்த்துவிடக் கூடாது.

தமிழர் விடுதலைக் கூட்டணி வருடாந்தம் நடத்தும் ஒவ்வொரு மாநாட்டிலும் ஒற்றையாட்சி மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது, என்பதை ஒரு தீர்மானமாக எடுத்து வலியுறுத்தி வந்துள்ளது. அதுமட்டுமல்லாது இனப்பிரச்சினை தீர்விற்கு இந்திய அரசமைப்பிற்கு ஒத்த ஒரு முறைமையையே வலியுறுத்தி ஒவ்வொரு மாநாட்டிலும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

எல்லாவற்றிற்கும் மேலாக யுத்தம் நடந்தால், மக்களும் விடுதலைப் புலிகளும் அழிவைச் சந்திக்க நேரிடும் எனவும், பேச்சில் ஈடுபடுமாறும் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் பல கடிதங்களை எழுதிக் கேட்டுக் கொண்டோம். முள்ளிவாய்க்காலில் சிக்கிக் கொண்ட மக்களைக் காப்பாற்றுமாறு சகல தரப்பினருக்கும் நாம் வேண்டுகோள் விடுத்தோம்.

தங்கள் நெஞ்சைத் தொட்டுச் சொல்லட்டும், இவர்கள் நினைத்திருந்தால் நிச்சயமாக அந்த மக்களை காப்பாற்றி இருக்க முடியாதா? யுத்தம் முடியும் வரை எங்கிருந்தார்கள், என்ன செய்தார்கள் என்பது யாருக்கும் தெரியாத ரகசியம். இப்படிப்பட்ட அரசியல் செய்து தமிழ் மக்களை முள்ளிவாய்க்கால் கொலைக் களத்திற்கு அழைத்துச் சென்ற கஜேந்திரகுமார் குழுவினர், கொள்கைகளையும் இலட்சியங்களையும் பற்றி பேசுவது வேடிக்கையாக உள்ளது.

தவறுகளை உணர்ந்து, சரித்திரங்களைத் தெரிந்து கொண்டு, கடந்தகால அனுபவங்களை ஒரு பாடமாக ஏற்றுக் கொண்டு, தமிழ் மக்களின் அபிலாசைகளையும், எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்ய எங்களுடன் இணைந்து, தன்னலம் கருதாது செயற்பட வருமாறு அன்புடன் அழைக்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## பங்கீட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் தலைமைப் பதவியை ரெலோவும், தமிழரசுக் கட்சியும் தலா இரண்டு வருடங்கள் பகிர்ந்து கொள்ளும்.

இதில் கோப்பாய் பிரதேச சபையின் முதல் இரு வருடங்களும் ரெலோவுக்கு வழங்கப்படும்.

வேலணை பிரதேச சபையின் தலைமையை இலங்கைத் தமிழரசுக் கட்சி பெறும். அதில் 40 வீத பிரதிநிதித்துவம் ரெலோவுக்கு வழங்கப்படும்.

வலி.தென்மேற்கு (மானிப்பாய்), வலி.தெற்கு (சுன்னாகம்) பிரதேச சபைகளின் தலைமை புளொட்டிற்கு வழங்கப்படும்.

எஞ்சிய பிரதேசசபைகளின் தலைமை தமிழரசுக் கட்சி.

யாழ். மாநகரசபையின் பிரதி மேயர் பதவி ரெலோவுக்கு வழங்கப்படும்.

### கிளிநொச்சி மாவட்டம்

கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி, கரைச்சி, பூநகரிபிரதேசசபைகளின் தலைமை இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வழங்கப்படும். பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் உபதவிசாளர் பதவி புளொட்டுக்குக் கிட்டும்.

### வவுனியா மாவட்டம்

வவுனியா தெற்கு பிரதேச சபையின் தலைமையையும், பிரதித் தலைமையையும் ரெலோவும், புளொட்டும் மாறி மாறி இரண்டு வருடங்களுக்கு பங்கீட்டுக் கொள்ளும்.

வவுனியா நகரசபைத் தலைமையை இலங்கைத் தமிழரசு ஏற்கும். பிரதி தலைவர் பதவி புளொட்டுக்கு வழங்கப்படும்.

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச சபைத் தலைவர் பதவி தமிழரசுக்குக் கிடைக்கும்.

செட்டிகுளம் பிரதேச சபை த் தலைவர் பதவியை ரெலோவும், புளொட்டும் பங்கீட்டுக் கொள்ளும்.

### மன்னார் மாவட்டம்

மன்னார் நகரசபை, மாந்தை மேற்கு ஆகியவற்றின் தலைமைப் பதவிக்கு ரெலோவும் -

நானாட்டான், மன்னார் பிரதேச சபை ஆகியவற்றுக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியும் - வேட்பாளர்களை நிறுத்தும்.

### முல்லைத்தீவு மாவட்டம்

புதுக்குடியிருப்பு, துணுக்காய் பிரதேச சபைக்கு தமிழரசும் -

மாந்தை கிழக்கு (பாண்டியன் குளம்) பிரதேசசபைக்கு ரெலோவும் தலைமை வேட்பாளர்களை நிறுத்தும்.

கரைதுறைப் பற்று பிரதேச சபை, தலைமையை ரெலோவும் புளொட்டும் இவ்விரு வருடங்கள்

பக்கம் 03 »

## கறுப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நீரின் மாதிரிகளைச் சேகரித்து பரிசோதனைக்காக அனுப்பி வைத்துள்ளனர்.

இயற்கைப் பேரிடர்கள் குறித்த அச்சம் அதிகரித்து வரும் நிலையில், கறுப்பு நிற மழை மக்களை மேலும் குழப்பத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

## முல்லைத்தீவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தளித்துள்ளனர். இதனை அவதானித்த நாகை மீனவர்கள் அவர்களைப் பாதுகாப்பாக மீட்டுக் கரைக்குக் கொண்டு வந்துள்ளனர் எனப் பொலிஸ் விசாரணையில் கூறப்பட்டது.

இதேவேளை, தமிழ்நாடு நாகை மாவட்டக் கடற் கரையில் பழுதடைந்த நிலையில் படகு ஒன்று கரையொதுங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)




## ஒன்றுபோக... இன்னொன்று...!

இலங்கை அரசியலில் உள்ள பேரினமும், அந்தப் பேரினத்தில் உள்ள பேரினவாதமும், அந்தப் பேரினவாதத்தில் இருந்து உருவகித்து நிற்கும் பேரினவாதிகளும், அந்தப் பேரினவாதிகளிடமிருந்து வெளிக்கிளம்புகின்ற வெளிப்படையான இனக்குரோதப் பேச்சுகளும், செயற்பாடுகளும் என்று இந்த நாட்டை விட்டு, இல்லாதொழிந்து போகின்றதோ, அன்றிலிருந்துதான் இங்கு வாழுகின்ற பல்லின சமூகத்தவர்களுக்கிடையில் அன்பும் சமாதானமும், ஒற்றுமையும் புரிந்துணர்வும் ஏற்படும் என்பது வெளிப்படையான நிதர்சனம்.

இலங்கை அரசியலைப் பொறுத்தவரையில் ஓர் அரசியல்வாதி தொடர்ந்தும் அதில் தன்னை நிலைநிறுத்திக் கொள்ள வேண்டுமானால், தம் இனம் சார்ந்த மக்களிடையே குறிப்பாக, அடித்தட்டு மக்களின் அறியாமைகளுக்கிடையே உணர்வுகள் விம்மிப் புடைத்து சூடேறும் விதத்தில் உணர்ச்சிகரமான செயற்பாட்டையும், மனதை ஈர்க்கக்கூடிய வகையில் கவர்ச்சிகரமாகப் பேசுதலையும் மேற்கொள்ள வேண்டும்.

தென்னிலங்கை அரசியல்வாதிகளது நாவும், அந்த நாவிலிருந்து வெளிவருகின்ற வார்த்தைகளும் சுத்தமானவை அல்ல மட்டுமல்ல, உண்மைத் தன்மையும் அற்றவையே.

பரிசுத்த வேதாகமம் - புதிய ஏற்பாட்டில் சில வசனங்கள் உள்ளன.

''இருதயத்தின் நிறைவால் வாய்பேசும். (மத்தேயு - 12:35)''

''உன் பேச்சு உன்னை வெளிப்படுத்துகிறது. (மத்தேயு - 26:73)''

''இருதயத்துக்குள் எண்ணங்கள் நிறைவடையும் போது வார்த்தைகளை வாய் பேச வைக்கின்றன. அந்த வார்த்தைகளே பேசப்படுபவன் எப்படிப்பட்டவன் என்பதையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றன. இலங்கை நாடாளுமன்றத்துள் பல உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்ற போதும், குறிப்பிடத்தக்க ஒரு சிலரது பேச்சுகள் அவர்கள் எப்படிப்பட்ட மனிதர்கள்...? என்பதைத் துலாம்பரமாக வெளிப்படுத்திக் காட்டுகின்றன.

விமல் வீரவன்ஸ, பாட்டலி சம்பிக்க ரணவக்க, கம்மன்பில என்பவர்களை இங்கே முக்கியமாக எடுத்துக் கொள்ளலாம்.

இலங்கை சுதந்திரம் அடைந்தபின்பு டி.எஸ்.சேனநாயக்காவிலிருந்து தோற்றம்பெற்ற இந்த இனவாதப் பேச்சுகளும், அதனில் இருந்து எழுந்த செயல் விளைவுகளும் அப்படியே எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவூடாக வழிவந்து, அவருக்குப் பின் அவரது மனைவி சிறிமாவோ பண்டாரநாயக்கா மற்றும் ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ வரையிலும் அறுபடாத ஒரு தொடராக வந்துகொண்டிருக்கின்றன.

குறிப்பாக, ஜே.ஆர்.ஜெயவர்த்தன ஜனாதிபதியாக இருந்தபோது 1983 - ஆடிக்கலவம் இன அழிப்பின் உச்சம் என்று கூறுவது மிகையாகாது. ஆங்காங்கே சிங்களக் காடையர்களால் வன்முறைகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருந்த வேளையில், ''போர் என்றால் போர், சமாதானம் என்றால் சமாதானம்...'' எனத் தன் பேச்சால் தன்னை வெளிப்படுத்திக் காட்டியவர் ஜே.ஆர்.ஜெயவர்த்தன.

இவ்வாறு இவர் வெளிப்படுத்தியமையைத் தவிர, இவரது அமைச்சரவையில் அங்கம் வகித்த பாதுகாப்பு அமைச்சர் அத்துலத்முதலி என்பவர் ''இது இவ்வளவு வெளிப்பாடு'' என்றும், வெளிப்படுத்திய வார்த்தைகள் இதயத்தின் நிறைவால் அன்றி வேறல்லவே.

இனவாதிகளான சிறில் மத்தியூ, டி.பி.விஜேதுங்க போன்றோரும் உயிருடன் இல்லை. அகாலமாகவும், அமரத்துவமாகவும் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். ஆனால், இவர்கள் பற்ற வைத்து விட்டுச் சென்ற 'நெருப்பை' இப்போது பலர் பற்றிப்பிடித்துக் கொண்டு அரசியல் செய்து கொண்டிருக்கின்றார்கள். வேறு சிலர் செய்வதற்கு முயற்சிக்கிறார்கள்.

இந்த வரிசையில் - தற்போது சமீபத்தில் ஒருவர் பேசிய இனவாதப் பேச்சு சகலரது கவனத்தையும் ஈர்த்து நிற்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் பிரதி அமைச்சராக இருந்த ரியல் அட்மிரல் சரத் வீரசேகர என்பவர் - கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்றுக்கு நேர்காணல் வழங்கலின் போது பதில் அளிக்கையில் -

''தேவநம்பியதீசன் என்பவன் ஒரு தமிழ் மன்னன் அல்லன். 'தீசன்' என்பது சிங்கள அரசனின் பெயர். 'தேவநம்பிய' என்பது அந்த அரசனைக் கௌரவிக்கும் முகமாக வழங்கப்பட்ட பெயர் என்று தெரிவித்திருக்கிறார். அத்தோடு, தற்போது சிங்கள மக்களை வடக்கில் குடியேற்ற வேண்டும் எனவும் திட மனதுடன் நிற்கின்றார்.

இலங்கையில் உள்ள பேரினமும், அந்தப் பேரினத்தில் உள்ள பேரினவாதமும், அந்தப் பேரினவாதத்தில் இருந்து உருவகிக்கும் பேரினவாதிகளும் சுயசிந்தனை கொண்டு, தங்களைத் தாங்களே சுயவிமர்சனம் செய்து திருத்திக் கொள்ளாவிட்டால், காலச் சுழற்சியில் இலங்கைக்குக் கஷ்டமும் கரிநாளும் நீடித்து நிலைக்கும் என்பது உறுதியிலும் உறுதியே!



## சட்ட அமைச்சரின் ராஜினமா:

# பாகிஸ்தான் அரசின் கையாலாகாத நிலை!



பாகிஸ்தானில், சட்ட அமைச்சர் பதவி நீக்கம் செய்யப்பட வேண்டும் என்று கோரி தெஹ்ரீக் இலபாய்க் யா ரசூல் அல்லாஹ் (டி.எல்.வை.) நடத்திய போராட்டத்துக்கு அரசு பணிந்திருப்பது மத அமைப்புகளைக் கையாள்வதில் அந்நாடு எத்தனை பலவீனமான நிலையில் இருக்கிறது என்பதை உணர்த்துகிறது.

ஆட்சியாளர்கள் பதவியேற்கும்போது இறை தூதரின் பெயரைக் குறிப்பிட்டு உறுதியேற்பதில் திருத்தங்கள் கொண்டு வந்த சட்ட அமைச்சர் ஜாஹித் ஹமீது பதவி விலக வேண்டும் என்ற காதிம் ஹுசைன் ரிஸ்வி தலைமையிலான டி.எல்.வை. அமைப்பு தலைமையில் இஸ்லாமிய அமைப்புகள் ராவல்பிண்டியில் தொடர்ந்து மூன்று வாரங்களாக வீதி மறியலில் ஈடுபட்டன.

சட்ட அமைச்சரின் இந்தச் செயல்பாடு சமய நிந்தனைக்குச் சமமானது என்று அந்த அமைப்புகள் குற்றஞ்சாட்டின. இவ்விவகாரத்தில் எப்படித் தீர்வு காண்பது என்று பிரதமர் ஷாஹித் கான் அப்பாஸிக்குப் புரியவில்லை. இஸ்லாமிய அமைப்புகளிடம் இருந்து எதிர்ப்பு உருவானதைத் தொடர்ந்து, அந்த சட்டத் திருத்தத்தை திரும்பப் பெற்றார் பிரதமர்.

அதன் மூலம் அந்த அமைப்புகளைச் சமாதானம் செய்ய முடியும் என்று அவர் கருதினார். ராவல்பிண்டி இஸ்லாமாபாத் இடையிலான வீதியைப் போராட்டக்காரர்கள் மறித்தபோது, முதலில் அரசு அதைக் கண்டுகொள்ளவில்லை. போராட்டம் நீடித்ததைத் தொடர்ந்தே போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்த அதிகாரிகள் முன்வந்தனர்.

பேச்சுவார்த்தை பலனளிக்காததால், பிரச்சினை தீவிரமடைந்தது. இவ்விவகாரத்தை முறையாகக் கையாளவில்லை என்று நீதிமன்றம் விமர்சித்ததைத் தொடர்ந்து, போராட்டத்தை ஒடுக்க பாதுகாப்புப் படையினர் ஈடுபடுத்தப்பட்டனர். அப்போது ஏற்பட்ட மோதலில் ஆறு பேர் கொல்லப்பட்டனர். 100 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்தனர்.

போராட்டக்காரர்களுடன் பேச்சு நடத்த இராணுவத்தின் துணையையும் அரசு நாட வேண்டிவந்தது. சட்ட அமைச்சர் ஜாஹித் ஹமீது ராஜிநாமா செய்த பிறகுதான், போராட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டார் காதிம் ஹுசைன் ரிஸ்வி.

இந்தப் பிரச்சினையை பாகிஸ்தான் அரசு கையாண்ட விதம், பேச்சு த நடத்த இராணுவத்தை நாடியது போன்றவை அரசின் செயலதிகாரம் எந்த அளவுக்குப் பலவீனப்பட்டிருக்கிறது என்பதைக் காட்டுகிறது. பனாமா பேப்பர்ஸ் விவகாரத்தைத் தொடர்ந்து, பிரதமர் நவாஸ் ஷெரீப் தகுதியிழப்பு செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவப்பெயரைச் சந்தித்த பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சித் தலைமையிலான ஆட்சி, அதிலிருந்தே இன்னும் மீண்டு வரவில்லை. பிரதமர் அப்பாஸியின் அணுகுமுறை பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியிருக்கிறது.

இந்தப் பிரச்சினையை ஒரு வழியாக முடிவுக்குக் கொண்டுவந்த ராணுவத்தின் தலையீடு, பாகிஸ்தானின் ஜனநாயக அரசு எந்த அளவுக்குத் தெளிவில்லாமல் செயல்படுகிறது என்பதையும் வெளிச்சம் போட்டுக்காட்டிவிட்டது.

தீவிரப் போக்கு கொண்ட அமைப்புகள் அரசை மிரட்டிப் பணியவைக்க முடியும் என்பது எந்தவொரு நாட்டுக்கும் கவலை தரும் விஷயம். போராட்டத்தில் ஈடுபட்ட டி.எல்.ஒவை. அமைப்புக்கு எதிர்க்கட்சிகளின் ஆதரவு இருந்ததா என்பது தெரியவில்லை.

ஆனால், இத்தனை பேர் திரண்டு அரசுக்கு எதிராகப் போராட்டம் நடத்தியது, மத அடிப்படையிலான பிரச்சினை அரசை ஸ்தம்பிக்கச் செய்தது போன்றவை எந்த ஓர் அரசும் பாடம் கற்க வேண்டிய விடயங்கள். ★

# விமானப்படைச் சிப்பாய் நேற்று விபத்தில் படுகாயம்



வவுனியாவில் கண்டி வீதியில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் வன்னி விமானப்படைத்தளத்தில் பணியாற்றும் விமானப்படைச் சிப்பாய் படுகாயமடைந்த நிலையில், வவனியா பொது வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்று மாலை 4 மணியளவில் வன்னி விமானப்படைத் தளத்திற்கு அருகில் சைக் கிளில் சென்றுகொண்டிருந்த விமானப் படைச் சிப்பாய் நுவரெலியாவிலிருந்து வந்த கார் மோதியதில் படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இந்த விபத்து தொடர்பாக விசாரணை களை பொலிஸார் மேற்கொண்டுவருகின் றனர். (ஐ - 100)



ரொபாஸ் நிறுவனத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவை முன் னிட்டு நேற்று மாற்றுத் திறனாளிகளுக்குப் பரிசுப் பொதிகள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது. ரொபாஸ் நிறுவத்தின் தலைவர் இந்தப் பரிசுப் பொதிகளை வழங்கினார்.

# பொலிஸ் இடமாற்றங்கள் தற்காலிக இடைநிறுத்தம்

கொழும்பு, டிசெ. 10

பொலிஸ் உத்தியோகத்தர்களின் இட மாற்றங்களைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்குமாறு, பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெயசுந்தர உத்தரவிட்டுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் காரண மாகவே இந்த நடவடிக்கை மேற்கொள் ளப் பட்டுள்ளதாகப் பொலிஸ்மா அதிபர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

இது தொடர்பாகப் பொலிஸ்மா அதி பரால் சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதி பர்கள், பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்கள், தலைமை யக பொலிஸ் பரிசோதகர்களுக்கு அறிவு றுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, பெப்ரவரி 15ஆம் திகதி வரை அமுலுக்கு வரும் வகையில், இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ்மா அதிபரால் அறிவிக்கப் பட்டுள்ளது.

# இணையத்தளங்களுக்கு தடை இனிமேல் இயலாத காரியம்

## ஊடக அமைச்சர் மங்கள தெரிவிப்பு

21ஆம் நூற்றாண்டில் இணையத்தளங்களைத் தடை செய்ய முடியாது என்று நிதி மற்றும் வெகு ஜன ஊடக அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற 2018 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தின் நிதி மற்றும் ஊடக அமைச்சு கள் மீதான விவாதத்தில் உரையாற்றிய ஜே.வி.பி யின் தலைவர் அநுர குமார திஸநாயக்க, லங்கா ஈ நியூஸ் இணையத்தளம் முடக்கப்பட்டடுள்ளமை தொடர்பில் எழுப்பிய கேள் விக்குப் பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்ட வாறு கூறினார்.

அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:-

நவீன தொழில்நுட்ப உலகில் இணையத்தள மொன்றைத்தடைசெய்வது முடியாத காரியம். தடை செய்தாலும் அவை தொடர்ந்தும் இயங்கும். லங்காஈநியூஸ் இணையத் தளத்தை நானும் தினமும் பார்ப்பேன் - என்றார்.

இதன்போது குறுக்கிட்ட அநுரகுமார எம்.பி, தடை செய்யப்படாவிட்டாலும் அதனைப் பார்க்க முடியாத வாறு தடைகள் ஏற்படுத்தப் பட்டுள்ளன - என்றார். (ஐ)


# மரண அறிவித்தல்

## திருமதி சிவயோகம் சண்முகநாதன்



காரைநகரைப் பிறப்பிடமாகவும் முத்து ஐயன் கட்டை வசிப்பிட மாகவும் கொண்ட திருமதி சிவயோகம் சிவசண்முகநாதன் 09.12.2017 சனிக்கிழமை நேற்றுக் காலமானார். அன்னார் காலஞ் சென்ற சிவசண்முகநாதனின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான சிதம்பரம்பிள்ளை நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை சவுந் தராம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகளும், தெய்வநாயகி, காலஞ்சென்ற லோகநாதன் மற்றும் லோகராணி, தனலட்சுமி, யோகமலர் (ஆசிரியை ஆறுமுகம் வித்தியாலயம், ஒட்டுசுட்டான்) ஆகியோரின் அன்புத்தாயாரும், காலஞ்சென்ற சிவஞானம் மற்றும் சிவநாதன், சிவலிங்கம், சிவசோதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ஸ்ரீ சண்முகநாதன், சிவராசா, சிவஞானம், சிறிதரன் ஆகியோரின் மாமியாரும், தனுஷா, யனுசன், தேவராஜ், ஞானராஜ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (10/12/2017) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக முத்துஐயன்கட்டு இடதுகரை மயானத்துக்கு நண்பகல் 12.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.



JAFFNA DISTRICT BEAUTICIAN ASSOCIATION

PRESENTS

GALA EVENING & AWARDIND CEREMONY

Today the 10th of December 2017
from 2 pm to 7 pm
at the
SELVAMAHAL HALL
TICKETS Rs.250 Only
Exclusive Diamer Meals
Come And Enjoy






காலைக்கதிர் Kalaikkathir தினசரிப் பத்திரிகையை இங்கே பெற்றுக்கொள்ளலாம்

சாய் ஸ்ரோர்ஸ்
மட்டுவில்,
சாவகச்சேரி.

சாயிராம் பாமசி
சங்கத்தானை,
சாவகச்சேரி

K.P.K சென்ரர்
வவுனியா

பவின் ஸ்ரோர்ஸ்
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி.

சுடர் நிலா
சிவலிங்கப்புளியடி,
யாழ்ப்பாணம்.




இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.12.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.